1274

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை
நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

VOL :- 6 MAR. - 1989 NO :- 2

D
V2l1, 31'N89
N89.6.2
144356

வெளியீடு 8-9-1989 Issued 8-9-1989

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600008.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 30, 1989—தொகுதி 6—எண் 2
Thursday, the 30th March, 1989—Volume 6-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00 [Price Rs. 3.00

## உள்ளடக்கம்

30—3—1989


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் . — .. 1—21

2. தகவல் கோரல்—

(அ) மாநிலச் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகள் பற்றி மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் எழுப்பியது குறித்து . 22—23

(ஆ) பேரவையில் அளிக்கப்பெற்ற நீக்க ஆணையை (Expunction Orders) யொட்டிச் செய்தியாளர்களுக்குப் பேரவைத் தலைவர் அளித்த விளக்கம் . . . 23—25

(இ) தக்கர் கமிஷன் அறிக்கையின் பிரதியைப் பேரவையில் வைப்பது குறித்து . 25—26

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள 26—27
29—31

(உ) சேரன்மாதேவித் தொகுதி நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள குடிநீர்ப் பிரச்சினை 46—47

(ஊ) அவைக்குறிப்பிலிருந்து சில சொற்களை நீக்கக் கோருதல் . . . 47

(எ) பேரவை மரபுகளைக் கடைப்பிடித்தல் குறித்து . . . . 47—48

(ஏ) அரசின் ஆணைகள், ஆவணங்களைத் தமிழில் தருதல் . . . 52

3. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை .. .. .. 3[illegible]—37

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சேலம் மாவட்டம், ஆத்தூரில் நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை .. . .. .. 27,
31—34,
37—44

5. ஒழுங்குப் பிரச்சினை—

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சா மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உடல் நலம் குறித்து .. .. .. .. 28—29

| | பக்கங்கள் |
|---|---|
| 6. உரிமைப் பிரச்சினை— | |
| தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் மீது | 44—46 |
| 7. அறிவிப்புகள்— | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை, 1988–89—மொழிதல் (ஆ.இ.) | 48 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1989 (ஆ.இ.) | 51 |
| (இ) பேரவை நடவடிக்கைகளைக் காண வருகை தந்துள்ள டாஸ்மேனியா பாராளுமன்றத் தலைவருக்கு வரவேற்பு | 61 |
| 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988–89— வாக்கெடுப்பு | 49—51 |
| 9. அரசினர் சட்டமுன்வடிவு— | |
| நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1989 | 52 |
| 10. வரவு—செலவுத் திட்டம், 1989–90—பொது விவாதம் —தொடர்ச்சி. | 52—113 |
| *திருமதி டி.எஸ். பொன்னம்மாள் | 52—61 |
| *திரு. மா. பன்னீர்செல்வம் | 61—65 |
| திரு. எஸ். டி. உகம்சந்த் | 65—77 |
| *திரு. ஜி.ஜி. குருமூர்த்தி | 78—84 |
| *திரு. அன்பில் பொய்யாமொழி | 84—91 |
| *திரு. வி. தம்புசாமி | 92—98 |
| டாக்டர் சி.ரா. மாசிலாமணி | 98—103 |
| *திரு. வி.கே. சின்னசாமி | 104—112 |
| 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 113—114 |


144356
D
Y2II,3IIN89
N89.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1989, மார்ச் 30, வியாழக்கிழமை

பங்குனி 17, விபவ— திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு.''

ஒருவர் சொல்லுகின்ற சொல்லால்தான் ஆக்கமும் கேடும் விளைகின்றன. அதனால் ஒருவர் தம்முடைய சொல்லில் தவறு நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்.

### 1. வினாக்கள்— விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### வேடசந்தூரில் சிவில் நீதிமன்றம்

13—(*வினா எண். 373)—திரு. ப. முத்துச்சாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூரில் சிவில் நீதிமன்றம் நிறுவப்படுமா?

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, வேடசந்தூரில் சிவில் நீதிமன்றம் நிறுவுவது பற்றி உயர்நீதி மன்றத்தை அரசு கருத்துக் கேட்டுள்ளது. பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. முத்துச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1967 ஆம் ஆண்டிலிருந்து வேடசந்தூர் தனி வட்டமாக்கப்பட்ட அந்த நாளிலிருந்து இந்தக் கோரிக்கை நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டுக்கொண்டு வருகிறது. ஆயிரக் கணக்கான சிவில் வழக்குகள் திண்டுக்கல் கோர்ட்டில் தேங்கி, 7 ஆண்டு 5 ஆண்டு காலமாக தீர்த்து வைக்கப்படாமல் இருக்கின்றன. இதை உத்தேசித்து இந்த நிதியாண்டிலாவது இந்த சிவில் நீதிமன்றம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1989 மார்ச் 30

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, பல ஆண்டுகளாக நிலுவையில் இருப்பது எனக்குத் தெரியாது. ஆனால், பொதுமக்களிடமிருந்தோ அல்லது வழக்கறிஞர் மன்றத்திடமிருந்தோ இதுபோன்ற கோரிக்கை வரவில்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகுதான் இப்பொழுது உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தைக் கேட்டிருக்கிறோம். உயர் நீதிமன்றத்தின் கருத்து வந்தபிறகு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் வட்டத் தலைநகரங்களில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத குறைகள் உள்ளன. அதைப் போக்க, ஆந்திர மாநிலத்தில் உள்ளதைப் போல், Munsif-cum-Magistrate நீதிமன்றங்கள், மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இல்லாத ஊர்களில் ஏற்படுத்த இந்த அரசு முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவரவர்களே, வட்டத் தலைநகரங்களில் நீதிமன்றங்கள் அமைப்பது பற்றிய குறிப்பு, உயர் நீதிமன்றத்திலேயிருந்து வர வேண்டும். இப்பொழுதே கூட சில இடங்களில் District Munsif-cum-Magistrate இருப்பதாக நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு தலைவரவர்களே, மாவட்ட நீதிமன்றம் மட்டும் இருந்து, அந்த மாவட்டம் முழுவதும் வேறு எந்த நீதிமன்றமும் இல்லாத மாவட்டங்களில் இதுபோன்ற நீதிமன்றங்கள் அமைக்கப்படுவதற்கு அரசு முனையுமா? அதோடு நீதிமன்றங்களில் நீதிபதி இல்லாத பகுதிகளில் நீதிபதிகள் நியமிக்க அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ;** தலைவரவர்களே, மாவட்டத் தலைநகரங்களிலே மாவட்ட நீதிமன்றம் இருக்கிறது. வட்டங்களில் District Munsif Court இருக்கிறது. சில இடங்களில் Sub - Judge Court இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, நீதிமன்றங்களிலே இப்பொழுது நீதிபதிகள் இல்லை என்ற குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிக் குறிப்பான நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லை என்ற கருத்தைத் தெரிவிப்பார்களேயானால், உயர் நீதிமன்றத்திடம் தெரிவித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1989 மார்ச் 30]

**திரு. ஐ. பெரியசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய அரசுகாலத்திலே புதிய நீதிமன்றங்கள், சிவில் நீதிமன்றங்கள் அமைப்பது சம்பந்தமாக வரதராஜன் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அமைத்து அந்தக் கமிட்டியினுடைய சிபாரிசின் பேரில் இதுவரை தமிழகத்திலே நீதிமன்றங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றனவா என்பதையும், இன்னும் திறப்பதற்கு ஏதேனும் வழிவகை இருக்கிறதா என்பதையும் அறிவதற்கு முனைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு தலைவரவர்களே, நீதிபதி வரதராஜன் கமிட்டியினுடைய குழு அறிக்கை பற்றி இங்கே கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. மூலக் கேள்விக்குத் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை. எனவே தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

**திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விருதுநகரைத் தலைநகராகக் கொண்டு, காமராஜர் மாவட்டம் பிரிக்கப்பட்டு நான்காண்டுகள் ஆகிய போதிலும் இன்னும் மாவட்ட நீதிமன்றங்கள் மதுரையிலிருந்து விருதுநகருக்கு மாற்றப்படாமல் இருப்பதால், விரைவிலே மாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகு, மதுரையில் இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நீதிமன்றங்களை அந்தந்த மாவட்டங்களின் தலைநகருக்கு மாற்ற வேண்டுமென்ற ஒரு குறிப்பு ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. சில இடங்களில் வசதியான, தேவையான கட்டடங்கள் இல்லாத காரணத்தால் தேக்கம் அடைந்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை மேற்கொண்டு மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட நீதிமன்றத்தை அமைப்பதற்கான குறிப்பு தலைமை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தப்பட்டு, நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. என். வல்லரசு :** தலைவர் அவர்களே, எனது தொகுதியான உசிலம்பட்டியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பப்பட்டு, அது ஆய்வு செய்யப்பட்டு அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை அரசு நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** தலைவர் அவர்களே, உசிலம்பட்டியில் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்து இருக்குமானால், அது பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, நீதிபதிகளைப் பற்றி அதாவது ''டிஸ்ட்டிரிக்ட் முன்சீப்ஸ்'' பல கோரிக்கைகளை இங்கே எல்லோரும் சொன்னார்கள். அது மாதிரி ஒவ்வொரு இடத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும் தேவை இருக்கிறது என்று சொல்கிறார்கள். என்ன, பேசிஸ்'-ல் இதை எடுக்கிறீர்கள் ? தேவையென்று கேட்கும் பொழுதெல்லாம் 'முன்சீப்'களை 'அப்பாயின்ட்மெண்ட்' பண்ணுகிறீர்களா ? எப்படி 'ரெகுலேட்' பண்ணி அதை எடுக்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு தீட்சிதர் போன்றவர்கள் ஒரு கருத்தைத் தெரிவிக்கும்போது அதிலே நியாயம் இருக்குமென்று கருதித்தான் அந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்கிறோம். கேட்கிற இடத்திற்கெல்லாம் நீதிபதியை கொடுத்து விட முடியாது. அந்தப் பகுதியிலிருந்து தாக்கலாகிற வழக்குகளின் எண்ணிக்கை அடிப்படையிலும், பொதுமக்கள், வழக்கறிஞர்கள் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டும்—அரசே முடிவு செய்கிற பிரச்சினை அல்ல—அரசாங்கத்திற்கு ஒரு கருத்து வருமானால் அதை உயர்நீதிமன்றத்திற்குத் தெரிவித்து உயர்நீதிமன்றம் சில 'ஸ்டாட்டிஸ்டிக்ஸ்' அடிப்படையில்தான் நீதிமன்றம் அமைக்கவேண்டுமென்று அரசுக்குத் தெரிவிக்கிறது. இவைகளையெல்லாம் பரிசீலித்துத்தான் முடிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற மந்திரிசபையிலே நிலக்கோட்டை முன்சீப் கோர்ட் a' வத்தலகுண்டு என்று உயர்நீதிமன்றத்தால் சிபாரிசு செய்யப்பட்டு, பிறகு அது இங்கே சாங்ஷன் செய்யப்பட்டது என்று சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். இடமும் வத்தலகுண்டில் பார்த்தார்கள். அது இதுவரையிலும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, அப்படி ஒரு முடிவு செய்யப்பட்டிருந்தால், அதை ஆரம்பிக்க நடவடிக்கையெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிலக்கோட்டை பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. ஆனாலும் உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதனைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டினுடைய பெஞ்ச் ஒன்றை சென்னையில் ஆரம்பிக்க வேண்டுமென்ற நீண்டகால கோரிக்கை மத்திய அரசால் பரிசீலிக்கப் பட்டு, அங்கேயிருந்து நீதிபதிகள் குழுவெல்லாம் இங்கே வந்து ஆராய்ந்தது. பாராளுமன்றத்தில் கூட நாங்கள்





இதுபற்றிப் பலமுறை வலியுறுத்தி இருக்கிறோம். அது என்ன ஆயிற்று? அதேபோல, ஹைக்கோர்ட்டினுடைய பெஞ்ச் ஒன்றை கோவையிலோ, மதுரையிலோ அமைப்பதைப் பற்றி பரிசீலனை உள்ளதா ? எப்போது அதற்காக நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாசா : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டைப் பற்றி பேசியிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் பற்றி சொல்வதற்கு இப்போது என்னிடத்தில் விவரங்கள் இல்லை. எனவே, அது பற்றி ஒன்றும் சொல்ல இயலாது. உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் மதுரையில் ஒரு பெஞ்ச் அமைக்க வேண்டுமென்ற குறிப்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்திலேயே பரிசீலிக்கப்பட்டு இருந்தது. அதற்குப் பிறகு மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஜஸ்வந்த்சிங் கமிஷன் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்து குறிப்புக்களைக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தின் பெஞ்ச் நியமிக்கும் அதிகாரம் மத்திய அரசிற்கும், சுப்ரீம் கோர்ட்டிற்கும் தான் உண்டு. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் இதனைப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, சிவில் நீதிமன்றங்களுக்குச் செல்லக்கூடிய வழக்குகள் ஆண்டுக் கணக்கில் காலம் கடத்தப்பட்டு, முடிவில்லாமல் நடந்து கொண்டிருக்கிறதால் இந்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். பிறகு நிலைமையே மாறி விடுகிறது. அதனால் சட்டத் திருத்தமாவது கொண்டு வந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சிவில் வழக்குகளை முடிக்கவேண்டும் என்ற முறையிலே அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10).

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, வழக்கு மன்றங்களில் லட்சக்கணக்கான வழக்குகள் தேங்கியிருக்கின்றன என்பது நாடறிந்த உண்மை. அதற்குக்காரணம் போதுமான நீதி நிறுவனங்கள் இல்லாதது. இன்னொரு காரணம் வழக்குமன்றத்தில் குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்குகளை முடிக்கவேண்டும் என்று இருந்தாலும் திறமையான வழக்கறிஞர்கள் கூட வாய்தா வாங்குவது என்பதுதான். எனவே பொதுமக்களுடைய கஷ்டங்களை உணர்ந்து வழக்குகளை விரைவில் பைசல் செய்யவேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் ஏற்கெனவே கருத்து தெரிவித்திருக்கிறது. உயர்நீதிமன்றத்திற்கும் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக வழக்குகள் பைசல் செய்யப்பட வேண்டும் என்று இப்போதுகூட விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகள் எல்லாம் இன்றும் பின்பற்ற முடியாத ஒரு நிலைமையை நாம் பார்க்கிறோம். ஒட்டுமொத்தமாக நாட்டி

னுடைய ஜனப் பெருக்கமும், வழக்குகள் அதிகரிப்பும் காரணமாக அமைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்து உயர்நீதிமன்றத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, பேமிலி கோர்ட் என்று சொல்லக்கூடிய குடும்ப நீதிமன்றங்கள் இந்தியாவில் பல மாநிலங்களில் செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். தமிழகத்தினுடைய எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அந்தக் குடும்ப நீதிமன்றங்கள், பேமிலி கோர்ட் என்று சொல்லக்கூடிய மன்றங்கள் செயல்படுவதற்கு இந்த அரசினால் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, பேமிலி கோர்ட் அமைப்பது என்ற கொள்கை நம்முடைய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது பரீட்சார்த்தமாக சென்னையில் ஒரு பேமிலி கோர்ட் அமைக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த பேமிலி கோர்ட் சம்பந்தமான குறிப்புக்களை நான் பார்த்தபோது, ஒரு பேமிலி கோர்ட்டில் கிட்டத்தட்ட 5 ஆயிரம் வழக்குகள் தேங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, அந்த வழக்கு மன்றங்கள் குறிப்பாக குடும்பச் சச்சரவுகளைத் தீர்ப்பதற்கு பயன் உள்ளதாக இருப்பதாக கருதப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தின் அடிப்படையில்—இப்போது சென்னையில் மாத்திரம் இயங்கி வருகிறது—தேவையை அனுசரித்தும், நிதிநிலையை அனுசரித்தும் இன்னும் சில பேமிலி கோர்ட்டுகளை சென்னையில் அமைப்பதற்கான ஒரு குறிப்பும் அரசால் ஆராயப் பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலியாக, நிரப்பப்படாமல் இருக்கின்ற நீதிமன்றங்கள் இருக்குமேயானால், அதைக் குறிப்பிட்டுச் சொல்லும்படி சொன்னார்கள். ஆகவே, கடலூரில், ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நெம்பர் 3 நீண்டகாலமாக நீதிபதி இல்லாமல் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அந்த நிலையை மாற்றி, உடனடியாக அரசு அந்தப் பணியிடத்தை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞர் என்று கருதுகிறேன். எனவேதான் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். ஜுடிசியல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நெம்பர் 3 கடலூரில் காலியாக இருப்பதாக அவர்கள் தெரிவித்திருப்பதையொட்டி, உயர்நீதிமன்றத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டு, அந்த இடம் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பல்லடத்தில் நீண்டகாலமாக சிவில் நீதிமன்றம் ஏற்படுத்துவது என்பது நின்று போயிருக்கிறது. எனவே, அங்கே விரைந்து சிவில் நீதிமன்றத்தை நிறுவ ஏற்பாடு செய்யப்படுமாஎன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடத்தில் சிவில் நீதிமன்றம் அமைப்பதற்கான குறிப்பில் உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பா. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் செஷன்ஸ் நீதிமன்றம் மற்றொரு மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற மதுரையிலே இயங்கி வருகின்றது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்ற சிவகங்கையிலே இயங்க வேண்டிய அந்த நீதிமன்றம் எப்போது சிவகங்கைக்குக் கொண்டுவரப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது குறிப்பிட்டேன். மதுரை மாநகரிலே இருக்கின்ற, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட நீதிமன்றம் மூன்று மாவட்டங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, அந்தந்த மாவட்டத் தலைநகருக்கு மாவட்ட நீதிமன்றத்தைக் கொண்டு போகவேண்டுமென்பது தான் அரசாங்கத்தினுடைய கொள்கை, குறிக்கோள் இப்போது இராமநாதபுரத்திலும், சிவகங்கையிலும், போதுமான கட்டிடங்கள் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய கருத்தை நாம் கேட்டிருக்கிறோம். உயர்நீதிமன்றத்தினுடைய கருத்து வந்த பிறகு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த சிவில் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு இடத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு என்னென்ன யோக்யதாம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது? எந்த அடிப்படையில் சிவில் நீதிமன்றங்களை ஏற்படுத்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? அதே நேரத்தில் பல்லாண்டுகளாக வாணியம்பாடியில் ஒரு சிவில் நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அது இது வரையில் ஏன் ஏற்படுத்தப்படவில்லை? அப்படியென்றால் அதற்குரிய யோக்யதாம்சம் இல்லாமல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் சிவில் நீதிமன்றம் அமைப்பதற்கு என்னென்ன யோக்யதாம்சங்கள் வேண்டுமென்பது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல்

லத்தீப் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அவரும் ஒரு வழக்கறிஞர். என்னை விட அதிகமாகத் தெரிந்திருக்கிறார்கள். வாணியம்பாடியில் சிவில் நீதிமன்றம் ஏற்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்பட்டு, உயர்நீதிமன்றத்தை கருத்து கேட்டுதான் அரசாங்கம் முடிவு செய்ய வேண்டும். உயர்நீதிமன்றத்தின் கருத்தைக் கேட்டு வாணியம்பாடியில் சிவில் நீதிமன்றத்தை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட ஆங்கிலேயர் காலத்திலிருந்து கோர்ட்டுகள் ஆரம்பிக்கப்பட்டு, இப்பொழுதும் அந்த நாற்காலி, மேஜைகள் எல்லாம் பழுது அடைந்த நிலையில் இருக்கின்றன. மேலும் அவைகள் சீர்படுத்தப்படாமல் அப்படியே கோர்ட்டுகளிலே இருக்கின்ற காரணத்தினாலே வழக்கறிஞர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. உயர்நீதிமன்ற நீதிபதிகள் எல்லாம் இதுவரையில் எவ்வளவு முறை சொல்லியும், இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இனியாவது அந்த நாற்காலி, மேஜைகளைச் சரியாகச் சீர்படுத்திக் கொடுக்க முடியுமா என்ற கேள்வியை அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி வேடசந்தூரில் சிவில் நீதிமன்றம் அமைப்பது பற்றி, நாம் வேடசந்தூரிலிருந்து வெகு தூரம் சென்றிருப்பதாகக் கருதுகிறேன். இப்போது நாற்காலிகளைப் பற்றிச் சொல்கிறார்கள். இப்போது நாற்காலிகளைப் பற்றியும் கவனிக்க வேண்டியதுதான். நாற்காலி ஆடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் இந்த அரசும் விரும்புகிறது. (சிரிப்பு)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை—அண்ணா மாவட்டத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகள் சிலவற்றில் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட மாநகராட்சி வட்டங்கள், 32, 33, 76, அதுபோலவே ஆலந்தூர், தாம்பரம் தொகுதிக்கும் உட்பட்ட 5 வட்டங்கள் இன்னமும் செங்கை மாவட்ட நீதிமன்ற நிர்வாகத்தின் கீழேயே இருக்கின்றன. அதனால் வழக்கறிஞர்களும், வழக்குகளுக்கு ஆளாகின்றவர்களும் பல சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே இந்தப் பகுதிகள் சென்னை மாவட்ட நீதிமன்ற நிர்வாகத் துறையின்கீழ் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்கள் கருத்து அறிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திருவண்ணாமலைப் பகுதியில் புதிய தொலைக்காட்சிக் கோபுரம்.**

6—(*வினா எண் 28) திரு. பெ. சு. திருவேங்கடம் மற்றும் திரு. கே. பிச்சாண்டி :—மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலைப் பகுதியில் சென்னை நிகழ்ச்சிகள் தெரியும் வகையில் புதிய தொலைக்காட்சி கோபுரம் கட்ட மத்திய அரசுக்கு கோரிக்கை ஏதும் அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத் துறை தீட்டியுள்ள முனைப்புத்திட்டத்தின் அடிப்படையில் குறைந்தபட்ச அழுத்தமுள்ள அஞ்சல் தொலைக் காட்சி நிலையம் ஒன்றைத் திருவண்ணாமலையில் அமைப்பதற்கான ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும் மற்ற பகுதிகளிலும் இன்றைய தினம் ஏராளமான பொது மக்கள் டி.வி. பெட்டிகளை வாங்கி வைத்திருக்கிறார்கள். ஆனால் பல நேரங்களில் ஒலியும் ஒளியும் சேர்ந்து கிடைப்பது இல்லை. சில நேரங்களில் ஒலி கிடைக்கும் சில நேரங்களில் ஒளி கிடைக்கும். இந்தக் குறையைப் போக்குவதற்கு கொடைக்கானலில் இருக்கிற ஒரு கோபுரத்தைப் போன்று இந்தப் பகுதியிலேயும் அமைத்து, சென்னை தொலைக்காட்சி நிலையத்தினுடைய நிகழ்ச்சிகளை அந்தப் பகுதி மக்களும் காண்பதற்கு உண்டான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள தகவலின்படி குறைந்த அழுத்த அஞ்சல் தொலைக்காட்சி நிலையங்கள் தான் திருவண்ணாமலையிலேயும் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள 2, 3 இடங்களிலும் நிறுவப்பட்டிருக்கின்றன. கொடைக்கானலிலே உள்ளதைப் போன்று உயர் அழுத்த அஞ்சல் தொலைக்காட்சி நிலையங்கள் அமைப்பதற்கு வேண்டுமானால், மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கூட வேலூரில் இதுபோன்ற ஒரு சிறிய கோபுரம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் அந்த மாவட்ட மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. அந்த வகையில் பயன் இல்லாத இது போன்ற சிறிய சிறிய கோபுரங்களை ஆங்காங்கே அமைப்பதை விட இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி, பொது மக்கள் பயன் பெறுகிற வகையில் அந்தக் கோபுரங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைத்துள்ள கோபுரங்களின் பயனற்ற நிலையை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி உரிய தொடர் ஏற்பாடு மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையைச் சுற்றியுள்ள பகுதியில் எந்தவித பொழுதுபோக்கு வசதியும் இல்லாத காரணத்தால் அங்குள்ள தாய்மார்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள். அது மட்டும் அல்ல, இதன் காரணமாக வீட்டுப் பெண்கள் வற்புத்தலால் அரசாங்க அதிகாரிகள் எல்லாம் மாறுதல் உத்திரவு வாங்கிக் கொண்டு வெளியூருக்குச் சென்றுவிடுவதால் எங்களுடைய ஊரிலே உள்ள அரசாங்க வேலைகள் எல்லாம் தடைபடுகின்ற காரணத்தால் உடனடியாக தாய்மார்களின் விருப்பத்தை மதித்து தொலைக்காட்சி அஞ்சல் கோபுரத்தை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய நியாயங்கள் மத்திய அரசுக்கு உரிய முறையில் எடுத்துச் சொல்லப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, குறைந்த அழுத்த தொலைக்காட்சி நிலையங்கள் இருப்பதனால் பல விவகாரங்கள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன. கொடைக்கானல் மலையிலிருந்து அஞ்சல் செய்யக் கூடியவை கோவை மாநகரத்தில் இருக்கும்படியான டி.வி. களில் சரியாகக் கிடைக்கவில்லை என்று நிறையப் புகார்கள் அரசாங்கத்திற்கு அனுப்பப் பட்டுள்ளன. ஆகவே, மிகக் குறைந்த அழுத்த நிலையில் இருக்கும்படியான நிலையங்களை சக்தி படைத்தவைகளாக மாற்றுவதற்கு திட்டவட்டமாக மத்திய அரசைக் கேட்க வேண்டியிருக்கிறது. அதைக் கேட்டுப் பெறுவதற்கு நமது அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் அழுத்த தொலைக் காட்சி அஞ்சல் நிலையங்கள் வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர்களின் வேண்டுகோளை ஏற்று உரிய முறையிலே மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை பகுதி, புதுக்கோட்டை பகுதியிலிருக்கும் எங்களுக்கெல்லாம் டி.வி. சரியாகத் தெரிவதில்லை. கொடைக் கானல், சென்னை போன்ற நிலையங்களில் இருக்கும் அஞ்சல் நிலையங்களை மிகப் பெரிய சக்தி வாய்ந்த டி.வி. நிலையங்களாக ஆக்கி, அத்தோடு தஞ்சையிலே, புதுக்கோட்டையிலே, திருச்சியிலே தெரியும்படியாக ஒரு புதிய டி.வி. நிலையம் ஒன்றும் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் உருவாக்கப்பட இருக்கிற நிலையங்களில் ஒன்று தஞ்சையில் அமைக்கப்பட இருக்கிறது. உயர் அழுத்த தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களாக மாற்றி அமைப்பதற்கான ஏற்பாட்டை மத்திய அரசோடு கலந்து கொண்டு மாநில அரசு சிறப்பாக வலியுறுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே இருந்து அஞ்சல் செய்யப்படக் கூடிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் செயற்கைக் கோள் மூலம் ஒளிபரப்பப்படுகின்றன. கொடைக்கானலிலிருந்து அதை வாங்கி திருப்பி ஒளிபரப்பும் போது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் குறிப்பிட்டதைப் போல மலைப் பகுதி என்கிற காரணத்தாலே ஒரு பகுதியிலே இருக்கிற யாருக்குமே தொலைக்காட்சிகள் தெரிவதில்லை. முன்பு அரசிடம் தொடர்பு கொண்டபோதும், பூஸ்டர் வைத்துக் கொண்டால் சரியாகக் காட்சி தெரியும் என்று குறிப்பிட்டார்கள். பூஸ்டர் வைத்துக் கொண்ட பிறகும் காட்சிகள் தெரிவதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாப் பகுதியில் இருக்கக்கூடியவர்களும், ஒளிபரப்பக்கூடிய காட்சிகளைக் கண்டு களிக்கிற வகையிலே சிறப்பாக நடைமுறைப்படுத்த மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினரின் விருப்பம் மத்திய அரசுக்கு உரிய முறையில் தெரிவிக்கப்படும்.

[1989 மார்ச் 30

திரு. வ. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைப் பகுதியில், எப்படி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், சென்னை நிகழ்ச்சிகள் தெரியவில்லையோ அதைப் போலவே வேலூர் பகுதியிலும் தெரிவதில்லை. இரவு 7.30 மணிக்கு ரீஜனல் சர்வீஸஸ் என்ற நிகழ்ச்சியைக் காட்டுகிறார்கள். சரியாக 8.40-க்கு தமிழில் ''செய்திகள்'' நிகழ்ச்சி வரும்போது அதை கட் பண்ணிவிடுகிறார்கள். அவ்வளவு நிகழ்ச்சிகளும் காட்டும்போது தமிழில் ''செய்திகள்'' நிகழ்ச்சியை மட்டும் காட்டுவதற்கு ஏன் வாய்ப்பு கிடைக்கவில்லை என்று மத்திய அரசைக் கேட்க நம்முடைய அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி மூலமாக தமிழ் நிகழ்ச்சிகளுக்கு உரிய முக்கியத்துவம் தரப்பட வேண்டும். இரண்டாவது அலை வரிசை மாநில அரசுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைகள் மாநில அரசின் சார்பாக தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்ற கோரிக்கைகள் ஆகும். மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பத்திற்கு ஏற்ப இந்தக் கோரிக்கைகள் தொடர்ந்து வலியுறுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக்காட்சி ஒருதலைப்பட்சமாக செய்தியைச் சொல்லி அது மக்கள் மத்தியிலே தொல்லைக்காட்சியாக காட்சியளிக்கிறது. இதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட புகார்கள் தொடர்ந்து சமுதாயத்தில் பலதரப்பட்ட மக்களிடமிருந்து அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றன. அதையும் அரசு கவனத்திலே எடுத்துக் கொண்டு மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத் துறையோடு தொடர்பு கொண்டு உரிய பேச்சுவார்த்தையை நடத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் பொறுப்பில் இரண்டாவது சேனல் வைப்பதற்கு மத்திய அரசிடம் வலியுறுத்தி கூடிய விரைவில் அதை உருவாக்குவதற்கு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மே மாதம் மாநில தகவல் செய்தித் துறை அமைச்சர்களின் கூட்டத்தில் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்கள் இரண்டாவது அலைவரிசையை—செகண்ட் சேனல்—மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்ய முடியாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் கூட தொடர்ந்து மாநில அரசுகளின் சார்பாக இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படும் என்று தெரிவித்துக் கோள்கிறேன்.



1989 மார்ச் 30]

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக் காட்சி செய்திகளை பாரபட்சமாக ஒளி பரப்புகிறது. வேண்டியவர்கள் நடத்துகின்ற நிகழ்ச்சியென்றால் ஐந்து நிமிடம் காட்டுவதும், பிடிக்காதவர்களுடைய நிகழ்ச்சியென்றால் இருட்டடிப்புச் செய்வதும் வாடிக்கையாகிவிட்டது. இது பற்றி அரசுக்குப் புகார்கள் வந்து மத்திய அரசுடன் பேசி நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தெளிவாக என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக் காட்சியின் மூலமாக ஒரு சாராருடைய மனம் புண்படுகிற வகையில் செய்திகள் சொல்லப்படுவதும் காட்சிகள் அமைக்கப்படுவதும் சென்னை தொலைக்காட்சி நிலையத்தினரின் வாடிக்கையாக இருக்கிறது என்று பல புகார்கள் அரசிடம் வந்து இருக்கின்றன. இந்த விவரங்களையொட்டி மத்திய அரசிடம் இந்தக் குறைபாடுகள் போக்கப்பட வேண்டும் என்கின்ற அடிப்படையில் தமிழக அரசின் சார்பாக கடிதம் எழுதியிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த வினாவையொட்டி ஒரு விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன். சென்னை தொலைக்காட்சி நிலையத்திலே இருக்கின்ற செய்தித் தயாரிப்பாளர், செய்திகளைத் தொகுத்து அளிப்பவர் அங்குள்ள செய்தியாளர்களுக்கு கொடுத்திருக்கின்ற உத்தரவே கூடுமான வரை அரசு நிகழ்ச்சிகளை, தமிழக அரசு நிகழ்ச்சிகளைக் காட்ட வேண்டாம் என்றும் அப்படிக் காட்டவேண்டிய, தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்படுமேயானால் முதலமைச்சரை லாங் ஷாட்டிலே தான் காட்டவேண்டும் என்றும் குளோசப் ஷாட்டிலே காட்டக் கூடாது என்றும் உத்தரவிட்டிருக்கிறார் என்று நம்பத் தகுந்த தகவல்கள் எனக்கு வந்திருக்கின்றன. இது குறித்து நான் மத்திய அரசுக்கு எழுத இருக்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, அதற்கு ஏதாவது ஆதாரங்கள் காட்ட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—30)

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரம் காட்டமுடியுமா என்று கேட்டார்கள். சமீபத்திலே கூட அரசியல் கட்சிகள் நடத்திய ஊர்வலத்தைக் காண்பிக்கின்ற போது ஒரு கட்சியின் ஊர்வலத்தைக் காண்பித்துவிட்டு இன்னொரு கட்சியின் மகத்தான ஊர்வலத்தைக் காண்பிக்காமல் இருப்பதே இதற்குரிய சமீபத்திய கால எடுத்துக்காட்டு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலுள்ள மக்கள் தொலைக் காட்சிப் பெட்டியை வாங்கி வைத்துக் கொண்டு இருந்தாலும், இன்றைக்கு இருக்கின்ற நிலையில் அவர்கள் அதைச் சரியாகப் பார்க்க முடியாமல், பார்க்கும்போது அவர்கள் கண்கள் பாதிக்கின்ற அளவுக்கு அதனுடைய அலைகள் ஓடிக் கொண்டு இருக்கின்றன. எனவே தஞ்சை மா்வட்ட மக்கள் இந்தத் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை நன்கு பார்ப்பதற்கு வழி வகை செய்யப்படுமா ? அவர்கள் இந்திய தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதைவிட இலங்கை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை சுலபமாகப் பார்க்கக்கூடிய தெரியக்கூடிய அளவுக்குக் காட்சிகள் வருகின்றன. எனவே, இதைக் கவனத்தில் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் அமைக்க இருக்கிற ஒரு குறைந்த அழுத்த தொலலக்காட்சி நிலையத்தை உயர் அழுத்த தொலைக்காட்சி நிலையமாக மாற்றித் தருகின்ற் முறையில் தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ? அதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குறைந்த அழுத்த தொலைக் காட்சி அஞ்சல் நிலையங்கள் ஒழுங்காகச் செயல்படவில்லை, அதன் பயன் மக்களுக்குக் கிட்டவில்லை என்ற கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கள் முறைப்படி மத்திய அரசுக்கு தெரிவிக்கப்பட்டு H.P.T. High Power Transmltter என்ற உயர் அழுத்த தொலைக் காட்சி அஞ்சல் நிலையங்களாக இவைகளை மாற்றவேண்டும் என்று மாநில அரசின் சார்பாக மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய கோடை வாசஸ்தலமான ஊட்டியில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக மத்திய அரசிடம் வலியுறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் தொலைக்காட்சி நிலையத்தை முழுக்க முழுக்க இந்தி ஆக்கிரமித்து இருக்கின்ற காரணத்தால், அதை அகற்றுவதற்கு தமிழக அரசு முழு முனைப்போடு போராடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உல்லாச மலைநகரமான உதகமண்டலத்தில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்த அழுத்த தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்பட இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தொலைக்



காடசியில் இந்தி மொழி ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். நம்முடைய ஆட்சியின் குறிக்கோளே இந்தி ஆதிக்கத்தைத் தடுப்பது என்ற காரணத்தால் அரசின் சார்பாக வேறு பல விளக்கங்கள் தேவையில்லை என்று கூறி அமைகிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தொலைக்காட்சி நிறுவனம் எதிர்க்கட்சிகள் நடத்தும் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுதது, ஆளும் கட்சி நடத்தும் நிகழ்ச்சிகள் குறித்து அக்கறை காட்டாத தன்மையில் இருப்பது பொதுமக்களால் கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஆளுங்கட்சி நடத்துகின்ற நிகழ்ச்சிகளுக்கு தொலைக்காட்சியினர் படம் எடுக்க வருகின்ற போது அவர்களைத் தடுக்கின்ற உத்திரவை தமிழக அரசின் மூலமாக வெளியிடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும் மாநில அரசுகளும் கூட்டாட்சி முறையில் செயல்படுகின்ற அரசியல் அங்கங்கள் ஆகும். எனவே மத்திய அரசிடமிருந்து அந்த நிறுவனத்தின் சார்பாக படம் எடுக்க வருவார்களானால் அவர்களை மாநில அரசு தடுத்திட முடியாது. மாறாக இப்படி தமிழக அரசினுடைய நிகழ்ச்சிகள் முறையாகக் காட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதுள்ள சென்னை, கொடைக்கானல் உயர் அழுத்த அஞ்சல் நிலையங்களால் மாநிலம் முழுவதும் பயன் ஏற்படவில்லை என்பது நாம் அறிந்த உண்மை ஆகும். எனவே குறைந்த அழுத்த அஞ்சல் நிலையங்கள் சிலவிடங்களில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. உதாரணமாக வேலூரில் அப்படி ஒன்று இருக்கிறது. அது வட ஆற்காடு, தென் ஆற்காட்டில் இருக்கின்ற பகுதிகளுக்குக் கூட பயன் இல்லாமல் இருக்கிறது. தென் மாவட்டங்களில் ஈழ நாட்டினுடைய காட்சிகள்தான் வருகின்றனவே தவிர, நம்முடைய தமிழ்நாட்டினுடைய எந்த நிகழ்ச்சிகளையும் அவர்களால் பார்க்கமுடியவில்லை. எனவே தென் ஆற்காடு, வட ஆற்காடு பயன்பெறும் வகையில் ஏலகிரி மலை, ஜவ்வாது மலைப்பகுதியில் காவலூரில் இப்படி ஒரு உயர் அழுத்த அஞ்சல் நிலையத்தை ஏற்படுத்த அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்த அழுத்த தொலைக் காட்சி அஞ்சல் நிலையங்கள் ..........

[1989 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் 7-வது கேள்வியையும் வரும்போது படித்துக் கொண்டு வந்திருந்தால் கொஞ்சம் நன்றாக இருந்து இருக்கும். அடுத்த கேள்விக்குப் போயிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த அழுத்த தொலைக் காட்சி அஞ்சல் நிலையங்களினால் பயன் எதுவுமில்லை என்கிற விவரங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே குறைந்த அழுத்த அஞ்சல் நிலையங்களை உயர் அழுத்த அஞ்சல் நிலையங்களாக மாற்று வதற்கான உறுப்பினர்களின் எண்ணங்கள் மத்திய அரசுக்கு முறைப்படி தெரிவிக்கப்பட்டு வலியுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏலகிரி மலையில் தொலைக்காட்சி நிலையம்

7—(*வினா எண் 127)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஏலகிரி மலையில் தொலைக்காட்சி நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : ஏலகிரி மலையைப்பற்றி மட்டும் இந்த வினாவில் இருக்கிறது. நான் கேட்டது, it includes Kavalur.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ஏற்கெனவே 3, 4 ஆண்டுகளுக்கு முன்னால் இதே மன்றத் தில் ஏலகிரி மலையிலே தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இல்லையென்று சொல்கிறார்கள். ஏலகிரி மலை சுற்றுலா இடமாக அறிவிக்கப் பட்டு இருக்கிறது. ஏலகிரி மலையிலே தொலைக்காட்சி நிலையம் ஒன்றை அமைத்தால், நகரங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு மட்டுமல்ல, பக்கத்திலே இருக்கிற பல கிராமங்களுக்குக் கூட உதவுமென்ற வகையிலே மத்திய அரசை வற்புறுத்தி மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா, ஏலகிரி மலையிலே ஒரு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்க முன் வருமா என அறிய விரும்பு கிறேன்.



1989 மார்ச் 30]

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் எடுத்துத் தெரிவித்த காரணங்களின் அடிப்படையிலே, மத்திய அரசை, அங்கே ஒரு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்கு மாறு மாநில அரசு சார்பாக வலியுறுத்தப்படும் என்று தெரிவித் துக்கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டிச்சேரி அரசினுடைய நிதிநிலை அறிக்கையை வெளியிடுகின்ற நேரத்தில் சென்னை தொலைக்காட்சி நிறுவனத் தினர் மிக விரிவாகக் காட்டுகின்றனர். கைரிக்ஷாக்காரர்கள், கைவண்டிக்காரர்கள் போன்றவர்களையெல்லாம் பேட்டி கண்டு அதை விரிவாக வெளியிடுகின்ற நேரத்தில் அதைவிட பெரிய மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டினுடைய நிதிநிலை அறிக்கை யைப்பற்றி விரிவாக காண்பிக்கவில்லை. அப்படிப்பட்ட பார பட்சத்தை மத்திய அரசுக்கு மாநில அரசு எடுத்துக் காட்டுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரால் எடுத்துத் தெரிவிக்கப்பட்ட உண்மையான குறைபாடுகள் தொடர்ந்து சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களாலும் தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்களாகும். அந்தக் கருத்துக் களெல்லாம் முறைப்படி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியைப் பற்றி இங்கே திராவிட முன் னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் மிகச் சிறப்பு கொடுத்துப் பேசியதற்கு நன்றி. எங்கள் ஆலங்குளம் தொகுதி யில் சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் நிகழ்ச்சிகள் சரியாகத் தெரியாமல் இருப்பதால், குற்றாலத்திலே ஒரு தொலைக்காட்சி கோபுரத்தை ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி சொல்லிக்கொண்டே போனால், கோரிக்கைகளும் நீண்டுகொண்டே போகும் என்ற காரணத்தினாலே தொழில் நுட்ப அறிக்கையின் அடிப்படையில் எங்கெங்கு தேவைப்படுகிறதோ அந்தந்த இடங்கள் மாண்புமிகு உறுப்பினர்களால் தெரிவிக்கப்படுமேயானால் உரிய ஆய்வு செய்து முறைப்படி மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையினுடைய நிகழ்ச்சிகளை நமக்கு வாக்களித்து இங்கே அனுப்பிய பொது மக்கள் அவ்வப் போது காணுகின்ற வகையிலே 'லைவ் டெலிகாஸ்ட்' ஆக

இங்கேயுள்ள நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுமா? இதனால் விளையப் போகின்ற நன்மைகளை தயவுசெய்து கருத்திலே கொண்டு, ஆரம்பக் கட்டமாக சென்சார் செய்த நிகழ்ச்சிகளையாவது தமிழகச் சட்டமன்றம் முன்னோடியாக இருந்து அதனை காட்டுவதற்கு முயற்சிகளை எடுக்குமா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பாராளுமன்ற நிகழ்ச்சிகளை டெலிவிஷன் படம் எடுத்துக் காட்டுகின்ற முறை அனுஷ்டிக்கப்படுமானால், பிறகு மாநிலங்களிலேயும் அந்த முறையைக் கடைப்பிடிக்க முன்வரலாம்.

திரு. எச். எம். ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகமண்டலத்திலும் அதைப் போன்ற மலைப்பிரதேசங்களிலும் ''டிரான்ஸ்போசர் ''(Transposer) என்ற கருவிகளை அமைத்தால் போதும். அந்தக் கருவிகளை சுமார் 12 இலட்சம் ரூபாய் செலவில் 'பெல்' நிறுவனம் தயாரித்துக் கொண்டிருப்பதாக அறிகிறோம். ஆகவே உதகமண்டலம், ஏலகிரி போன்ற மலைகளில் 'பெல் நிறுவனம்' தயாரித்து வருகின்ற 'ட்ரான்ஸ் போசர்' கருவிகளை அமைக்க தமிழக அரசு மத்திய அரசுக்கு எழுதுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்துக்கள் முறைப்படி சம்பந்தப்பட்ட துறையின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

திரு. சி. கோவிந்தசாமி : தலைவரவர்களே, தொலைக்காட்சியின் இரண்டாவது அலைவரிசையை மாநிலங்களுக்கு வழங்க வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கின்ற இந்த நிலையில் மாநில சட்டப் பேரவை மூலம் இரண்டாவது அலைவரிசையை மாநில அரசுகளுக்கு வழங்க சட்டப் பேரவை தீர்மானத்தின் மூலம் மத்திய அரசை வலியுறுத்த இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரண்டாவது அலைவரிசையை மாநில அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்ற கருத்து இங்கு மட்டுமல்லாமல், இந்தியாவிலேயே எல்லா மாநில முதலமைச்சர்களாலும் குறிப்பாக காங்கிரஸ் அல்லாத மாநில முதலமைச்சர்களாலும், சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் காங்கிரஸ் சார்புள்ள ஆட்சி நடைபெறுகின்ற மாநில முதலமைச்சர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அது தொடர்ந்து காங்கிரஸ் அல்லாத மாநில முதலமைச்சர்களால்





வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு ஏற்ப இரண்டாவது அலைவரிசை மாநில அரசுகளுக்குத் தரப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயங்காது. நிச்சயமாக இப்படிப்பட்ட தீர்மானம் இங்கே நிறைவேற்றப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.இந்த டெலிவிஷனில் தமிழ்நாட்டிலேயே தமிழ் நிகழ்ச்சிகள் மிகவும் குறைந்த அளவுதான் காண்பிக்கப்படுகின்றன. அது மூன்றுமணி நேரம் என்று சொல்லப்படுகிறது. 5-30 மணியிலிருந்து 8-40 மணி வரை அதிலே கூட மற்ற மத்திய அரசு நிகழ்ச்சிகளை இடையிலே விளம்பரம் என்ற பெயரால் புகுத்துவதால் பொது மக்களுக்கு அது பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, 3 மணி நேரம் தமிழ் நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளி பரப்பி, மக்கள் கண்டு களிக்க வசதியாக நம்முடைய தமிழக அரசு செய்து கொடுப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதனால்தான் இரண்டாவது அலைவரிசை மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவரவர்களும் எடுத்துக் கூறியதைப் போல ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, ஊட்டி, கொடைக்கானல், திருவண்ணாமலை ஆகிய எல்லா இடங்களிலும் இந்தத் தொலைக்காட்சி வைக்கப்பட வேண்டும் என்கிற விருப்பத்தை நிறைவேற்றினால் இந்தி இன்னும் சுலபமாகப் பரவுவதற்கு அவர்களுக்கு வழி ஏற்படும்.

### திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்குச் சேரவேண்டிய அரசு தள்ளுபடித் தொகை

14—(*வினா எண். 623) திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி சங்கத்திற்கு கடந்த மூன்றாண்டு காலமாக அரசு தள்ளுபடித் தொகை கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்கு ஆகஸ்டு 1987 முடியவுள்ள தள்ளுபடி காலங்களுக்கு தள்ளுபடி மான்யத்தொகை முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது.

[1989 மார்ச் 30

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி சங்கத்தின் மூலமாக கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்த துணியின் அளவு எவ்வளவு? அதில் விற்பனை செய்த அளவு எவ்வளவு? துணிகள் தேங்கி உள்ளனவா? அதற்காக அரசு மூலமாக வழங்கப்பட்ட தள்ளுபடித் தொகை எவ்வளவு என்பதை தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தனி வினா தொடுத்தால் விடையளிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் பட்டு நெசவு சொசைட்டி போலவே இன்னும் பல சொசைட்டிகளில் இப்படிப்பட்ட புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கக்கூடிய சொசைட்டிகளுக்கு விரைவாக இதுபோன்ற தள்ளுபடித் தொகையைத் தருவதற்கு அரசு துரிதமாக முயற்சி எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். பொதுவாகவே இங்கே விற்பனையை ஊக்கப்படுத்துவதற்கும், நெசவாளர்கள் சங்கங்கள் நன்கு செயல்படுவதற்கும் தான் இந்தத் தொகை வழங்கப்படுகிறது. ஆகவே வருங்காலத்திலேயாவது இதை விரைவாகத் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

ாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சொசைட்டிகளைப் பற்றி இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது, இந்த ரிபேட் தொகைகள் எல்லாம் இன்னும் தரப்படவில்லை என்று. அதில் எவ்வளவு பாக்கி நிற்கிறது என்றால் கோடிக்கணக்கில் பாக்கி நிற்கிறது என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. படிப்படியாக அவைகளை எல்லாம் தருவதற்கான ஏற்பாடுகளை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இந்தத் திருபுவனம் பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கு 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை உள்ள நிலுவைகள் கொடுக்கப்பட்டது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எவ்வளவு கொடுக்கப்பட்டது? 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுக்குப் பிறகு ஏறத்தாழ 20 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இந்த 20 மாதத்திற்குரிய அந்தத் தொகை கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பது அமைச்சருடைய பதிலிலிருந்து தெரிகிறது. அந்த 20 மாதங்களினுடைய பாக்கித் தொகையை எவ்வளவு காலத்தில் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்க அரசு வகை செய்யும் என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.



1989 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையுள்ள அந்தத் தொகை, அதாவது மானியமாகக் கொடுக்கப்பட்ட தொகை 55,06,550 ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 54,07,087 ரூபாய் 6 காசு கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்கு வழங்கப்படுகிற மானியத்தினுடைய சதவீதம் எவ்வளவு ? அந்தத் தள்ளுபடி சதவீதத்தை உயர்த்திக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா தொடுத்தால் இதற்கான விடை அளிக்கப்படும்.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலுள்ள கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்கிற அந்தக் கூடங்களிலுள்ள கருவிகள் எல்லாம் நவீனப்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமல்லாது தனியார் உற்பத்தியாளர்களுக்கும் ரிபேட் தொகை அளிக்க முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தற்போது அரசினுடைய பரிசீலனையில் அது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

[1989 மார்ச் 30

## 2. தகவல் கோரல்

### (அ) மாநிலச் சட்டமன்றத்தின் நிகழ்ச்சிகள் பற்றி மத்திய அமைச்சர் பாராளுமன்றத்தில் எழுப்பியது குறித்து

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நம்முடைய இந்த அவையில் நடைபெறுகிற விஷயங்களை, நாமே அதாவது ஒரு மாநிலத்திற்கு இருக்கும்படியான அதிகாரத்தினுடைய எல்லைக்கு உட்பட்டு நாமே அதைப் பேசி நம்முடைய நடவடிக்கைகளை இங்கே தீர்மானித்து முடிவு செய்கிறோம். இங்கே நடைபெறுகிற விஷயங்களை எல்லாம் மத்தியப் பாராளுமன்றத்திலே கிளப்பி விவாதிப்பதற்கு அங்கே அனுமதிக்கப்படுவதில்லை. இங்கே நடைபெற்ற விஷயங்கள் சிலவற்றைச் சில மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கே கிளப்பியதை பாராளுமன்றத்தினுடைய மாண்புமிகு தலைவர் திட்டவட்டமாகக் கிளப்பக் கூடாது என்று தடுத்துவிட்டார்.

(முற்பகல் 9-50)

அதற்குப் பின்பும், அங்கே பாராளுமன்றத்திலே இருக்கும்படியான அரசாட்சியை நடத்துகின்ற பொறுப்பு வகிக்கின்ற ஒரு அமைச்சரே ‘ இந்த அவையில் நடந்திருக்கிறது ’ என்று சொல்லி அங்கே ஒரு விவாதத்தைக் கிளப்பியிருக்கின்றார்கள். அதற்கும் அவர்கள் தடுத்து பதில் கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் இப்படிப்பட்ட ஒரு விஷயத்தை ஒரு அமைச்சரே கிளப்புவது மிகமிக முக்கியமான விஷயம். இது எதிர்காலத்திலே எங்குபோய் சேர்க்கும் என்று சொல்ல முடியாது. ஒரு உறுப்பினர் கிளப்பினால், அதைப் பற்றி அவருக்குப் பதில் அளிக்கலாம். அவர் தெரிந்தோ தெரியாமலோ, விதியை மீறியோ கிளப்பியிருக்கலாம். அதற்குப் பதில் அளித்திருக்கலாம். ஆனால் அமைச்சர் அவர்களே கிளப்பும்போது அது மிக முக்கியமானது. அப்படிப்பட்ட நடவடிக்கை அங்கே நடைபெற்றுள்ளது. அப்படியானால் இந்த அவையில் சம்பந்தப்பட்டவர்களும் இதற்கு ஏதாவது பதில் கொடுக்க தாங்கள் அனுமதிக்க முடியுமா ? அல்லது அரசே இதைப் பற்றி மத்திய அரசோடு தீவிரமாக இப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஒரு மாநிலத்தினுடைய உரிமையை, எதிர்த்து மீறி நடப்பதற்கு அமைச்சர்களையே அங்கே அனுமதிப்பது என்ற நிலை ஏற்பட்டதற்கு மாநில அரசானது ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ? அல்லது இந்த சபையில் அதற்குத் தகுந்த பதில் கொடுக்க அனுமதிப்பீர்களா என்று அறிய அவை விரும்புகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய பிரச்சினை மிக முக்கியமானது என்றாலும்கூட, அந்த அவையிலே சில உறுப்பினர்கள் இது குறித்துப் பிரச்சினைகள் எழுப்பியதும், அதற்கு நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவர் அவர்கள் மறுப்புத் தெரிவித்து



1989 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

அதைத் தடுத்ததும் போற்றத் தக்க ஜனநாயக அம்சமாகும். அதனால்தான், நேற்றைய தினம்கூட நான் நாடாளுமன்றப் பிரச்சினைகளைப் பற்றி, இங்கு ‘ தக்கர் கமிஷன் ’ குறித்துப் பேச எழுந்தபோது அதை நான் சுட்டிக்காட்டி, நாடாளுமன்ற சட்டமன்ற உறவுகள் சீர் கெட்டுவிடக்கூடாது என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஆனால் திரு. ரமணி அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை ஒரு அமைச்சரே இப்படிப்பட்ட முறையைக் கையாண்டிருக்கிறார் என்பதுவேதனையின்பாற்பட்ட ஒன்றாகும். அவர்தான் அப்படி நடந்துகொண்டார் என்பதற்காக அதைப்பற்றி இங்கே விவாதித்து நாமும் அவ்வாறு நடந்துகொள்வது சரியல்ல என்று நான் கருதுகிறேன். எனவே இது குறித்துத், தங்களுக்கு அதிகாரமோ, உரிமையோ இருக்குமேயானால், அந்தக் கடமையை நிறைவேற்றுகின்றவகையில் நாடாளுமன்றத்தினுடைய அவைத் தலைவருக்கு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்த குறிப்பை அனுப்பிவைக்கலாம் என்பது என்னுடைய கருத்து, அதற்கும் விதிமுறைகள் இடம் தருமேயானால்.

### (ஆ) பேரவையில் அளிக்கப்பெற்ற நீக்க ஆணையை (Expunction Orders) யொட்டிச் செய்தியாளர்களுக்குப் பேரவைத் தலைவர் அளித்த விளக்கம்

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து, தங்களுடைய கவனத்திற்கு ஒரு ஒழுங்குப் பிரச்சினை வாயிலாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

இது அவையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையை, அவையினுடைய உரிமையைப் பொறுத்ததாகும். பொதுவாக சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை பேரவையினுடைய தலைவர் அவர்கள், அவையினுடைய மரபுகளுக்கு, விதிகளுக்கு மாறானது என்று நினைத்தால் அதை நீக்குகின்ற உரிமை தங்களுக்கு இருக்கின்றது. ஆனால் இந்தச் சட்டமன்றத்தினுடைய வரலாற்றில் தொடர்ந்து அப்பழி நீக்கப்படுகின்ற பகுதிகள் எவையெவை என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றத்திற்குள்ளே அமர்ந்து பத்திரிகையாளர்களுக்கு உத்தரவு இடுவதுதான் வழக்கமாகும், மரபாகும். ஆனால் நேற்று இங்கே நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சிகளையும் சட்டமன்றம் முடிந்ததற்குப் பின்னால், ஒரு மணிக்குப் பின்னால் தாங்கள் தங்களுடைய அறையிலே அழைத்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுத்து, அங்கே அனைத்தும் நீக்கப்பட்டதாக சொல்லி, அந்தச் செய்திகள் பத்திரிகைகளிலேயும், ரேடியோவிலேயும் வந்திருக்கின்றன. அப்படி தாங்கள் பேசப்பட்ட நிகழ்ச்சிகளை ஜனநாயக மரபுகளுக்கு மாறாக ஒருதலைப்பட்சமாக ஒரு பகுதி மட்டும் பத்திரிகையிலே வருவது போலவும், எதிர்க்கட்சிகள் சொன்ன கருத்துக்கள் பத்திரிகையிலே வரக்கூடாது என்றும் உத்தரவிட்டு

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மார்ச் 30

அதனாலே நேற்றைய நிகழ்ச்சிகள் இருட்டடிப்புசெய்யப்பட்டிருக்கின்றன. இப்படித் தொடர்ந்தால் நாங்களும் பத்திரிகையாளர்களை வெளியிலே அழைத்து, எங்களுடைய அறையிலே வைத்து என்னவெல்லாம் நடந்தது, என்னவெல்லாம்பேசினோம் என்று சொல்லவேண்டிய நிலைமை ஏற்படும். எனவே இனிமேலாவது அவையினுடைய உரிமையை, உறுப்பினர்களுடைய உரிமையை பாதுகாக்கின்ற விதத்திலே இது போன்றவற்றை சட்டமன்றத்திலே தாங்கள் தெரிவித்தால் எங்களுக்கும் எது எல்லாம் நீக்கப்படுவை என்று தெரியும், எங்களுக்கு அபிப்பிராய பேதங்கள் இருந்தால் நாங்கள் சொல்வதற்கும் வழிவகை இருக்கும். எனவே தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபை மீறாமல் அவையினுடைய உரிமையை உறுப்பினர்களுடைய உரிமையை சபாநாயகர் அவர்கள் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய இந்த நல்ல கருத்தை நான் ஏற்கிறேன். இங்கே அவையிலே எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து நான் இங்கே இவற்றை நீக்கவேண்டுமென்று தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஆனால், தெளிவுபடுத்திய சிலவற்றில் தங்களுக்குச் சில விளக்கங்கள் தேவை என்று செய்தியாளர்களே நேரில் என்னைச் சந்தித்துக் கேட்டார்களே தவிர நான் யாரையும் அழைத்து இதைக் கொடுக்கவில்லை. எனவே, செய்தியாளர்கள் என்னிடத்திலே வந்து விளக்கத்திற்காகக் கேட்கிறபோது பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகத் தருகிறாரே தவிர, பேரவைத் தலைவர் செய்தியாளர் கூட்டத்தைக் கூட்டவில்லை. அப்படிக் கூட்டமாட்டார், இந்த அவையிலே சொன்னது அப்படியே நிற்கும் என்பதை மட்டும் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி அடுத்த நிகழ்ச்சிக்குப் போகலாம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, on a point of order, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசியபோது அவைத் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட விஷயகளை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தன்னுடைய அறையிலே பத்திரிகையாளர்களை அழைத்துச் சொல்லலாமா என்று கேட்டார்: அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட்ட விஷயங்களை, அவையிலே நாங்கள் இப்படி இப்படிப் பேசினோம் என்று உறுப்பினர்கள் பேசுவது முறையாகுமா என்கிற ஒழுங்குப் பிரச்சினைக்கு தாங்கள் விளக்கம் அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே விதி இருக்கிறது. அப்படிப் பேசக்கூடாது என்பது அவர்களுக்கும் தெரியும், தங்களுக்கும் தெரியும். எனவே அதற்கு இடமே கிடையாது.



1989 மார்ச் 30]

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, நீங்கள் சில பகுதிகளை இங்கே சொல்கிறபோது, அவை எல்லாம் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்று சுட்டிக்காட்டுகிறீர்கள். அதற்குப் பின்னால் இவை இவை நீக்கப்படும் என்று தங்களுடைய அறையில் வைத்து சொல்லியிருக்கிறீர்கள். அதனால்தான் நான் சொன்னேன். இது தவறான முன் உதாரணமாக அமையும். அப்படி இங்கு எது எல்லாம் எதிர்க்கட்சி சார்பில் பேசப்படுகிறதோ அவை எல்லாம் தாங்கள் அறையிலே வைத்து, அவை முடிந்ததற்கு பின்னால் நீக்கப்படுமானால் நாங்களும் அது போலே இங்கே அவையிலே என்னென்னவெல்லாம் பேசினோம் என்பதை எல்லாம் சொல்கின்ற நிலை ஏற்படும் என்பதைத் தான் இங்கே நான் சுட்டிக்காட்டினேன். அதற்கெல்லாம் வாய்ப்பு இல்லாமல் எல்லாவற்றையும், இங்கேயே, அவையிலேயே அறிவித்தால் பிரச்சினையே வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கெனவே நான் இது பற்றி தீர்ப்புச் சொல்லியிருக்கிறேன். நேற்று திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதையே திருப்பிச் சொல்கிறேன். பேரவைத் தலைவர் தீர்ப்புச் சொன்ன பிறகு அதை மறுப்பது சரியல்ல என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பே தவறு என்று சொல்வது மரபல்ல என்று சொன்னேன். அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் கோடிட்டு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் கோப்புகளை காண்பித்தேன்.

### (இ) தக்கர் கமிஷன் அறிக்கையின் பிரதியைப் பேரவையில் வைப்பது குறித்து

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தைச் சொல்லும்போது ஒரு கமிஷன் அறிக்கை பற்றிச் சொன்னார்கள். எனக்குத் தெரியவேண்டியது, சாதாரணமாக பாராளுமன்ற அவையில், பாராளுமன்றத்தில், பதில் சொல்லக்கூடிய ஏடுகளை வைப்பார்கள். மத்திய அரசாங்கத்தின் ஆளுகைக்கு உட்பட்ட ஏடுகளை வைப்பார்கள். பாராளுமன்ற அதிகாரத்திற்கு உட்பட்ட ஏடுகளை அங்கே வைப்பார்கள். ஆனால், தக்கர் கமிஷன் அறிக்கையில் பொறுத்த வரையில், ஓர் இந்திய நாட்டின் பிரதமர் வைத்திருக்கிறார். ஆகவே, அதுபற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். She is not the Prime Minister for Parliament alone. She is the Prime Minister of India. So, I want a clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அனைத்து இந்திய, முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும்கூட, ஒரு மரபு கருதி நம்முடைய பாராளுமன்ற உறுப்பினர்களே 39 பேர் அந்தப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள்? அவற்றை வாதிப்பதற்காகத்தான். அவர்கள் எல்லாம் அங்கே சென்றிருக்கிறார்கள். எனவே, இந்த அவையில் அதை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்பது என்னுடைய கருத்து.

திரு பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவாதத்திற்காக கேட்கவில்லை. எங்களுடைய கவனத்திற்குக்காகவாவது ஒரு காப்பியை இங்கே லாபியில் வைக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாராளுமன்றத்திலே வெளியிடப்பட்ட அந்தப் பிரதி நமக்குக் கிடைக்குமானால், அல்லது கிடைக்காவிட்டால் அதைப் பாராளுமன்றத்திற்கு எழுதிப் பெற்று நூல் நிலையத்திலோ அல்லது உறுப்பினர்களின் பார்வைக்கோ வைப்பதிலே எந்தவித மறுப்பும் இல்லை. இப்பொழுது இந்தத் தக்கர் கமிஷன் அறிக்கை குறித்து பல்வேறு மாநில சட்டமன்றங்களிலேயே பெரிய அமளிகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இங்கே ஏற்பட்ட அமளியே போதும், புது அமளி வேண்டாம் என்பதற்காகத்தான் தக்கர் கமிஷன் அறிக்கை பற்றி இங்கே விவாதிக்க வேண்டாம் என்ற கருத்தை நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடுகள்)

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு. எஸ் திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......................

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் இப்படிப் புன்முறுவலோடு தொடர்வது குறித்து மகிழ்ச்சி.

(முற்பகல் 10—00)

திரு. எஸ். திருநாவுக்கரசு : புன்முறுவலோடுதான் ஆரம்பிக்கிறேன். கடைசி வரை பேசவிட்டால் நானும் மகிழ்ச்சியடைவேன். சட்டமன்ற விதிகளின்படி, சட்டமன்றத்திலே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் குறித்துகூட உரிமைப் பிரச்சினை எழுமானால், அவற்றைச் சட்டமன்றத்திலே எழுப்பலாம் என்று பேரவை விதி 221 கூறுகிறது. சட்டமன்றப் பேரவை விதி 221-ன்கீழே, பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் வரும் உரிமைப் பிரச்சினை ஒன்று, உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும்விட முன்னிடம் பெறுமென்றும், பேரவைக் கூட்டம் நடந்துகொண்டிருக்கையில் எழுகிற உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில் பேரவைத்தலைவர் எத்தகைய முன்னறிவிப்பு எதுவும் இல்லாமலேகூட அவர் பொருத்தமெனக் கருதுவதை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. எனவே, பேரவையிலே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பேரவையில் பேசக்கூடாது என்றல்ல. சட்டமன்றத்திற்கு





வெளியே நடக்கிற முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் எழுப்பலாம், சட்டமன்றத்திற்குள்ளே நடக்கிற சம்பவங்கள் குறித்தும் உரிமைப் பிரச்சினைகள் மூலமாகக் கொண்டுவரலாம். 25 ஆம் தேதி அதற்கு வாய்ப்பு இல்லாமல் இங்கே வன்முறை மூலமாக நாங்களெல்லாம் அடித்து, துரத்தப்பட்ட காரணத்தாலே......

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் படித்துக் காட்டிய விதியினுடைய பொருள் என்ன என்பதை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். பேரவைநடந்துகொண்டிருக்கையில் எழும்புகிறஉரிமைப்பிரச்சினை நடந்துகொண்டிருக்கிறபோது எழும்புகிற உரிமைப் பிரச்சினை என்றால் எழுப்பலாம் இப்போது அவர் எழுப்ப வேண்டியது ஓர் உரிமைப் பிரச்சினையாக இருக்க வேண்டுமானால் அது இப்போது நடைபெற்றிருக்க வேண்டும். அவை நடந்துகொண்டிருக்கும்போது எழும்புகிற உரிமைப் பிரச்சினை என்ற பெயரில் எப்போதோ நடைபெற்றதான ஒன்றை, " நடந்துகொண்டிருக்கின்ற " என்ற சொற்றொடரைக் காட்டிப் பேசுவது என்பது அவைத் தலைவரவர்கள் அனுமதிக்கக் கூடிய ஒன்றல்ல.

திரு. கோ. வீரையன் : தலைவரவர்களே, on a point of clarification (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அடுத்த அலுவலுக்குப் போகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம். (குறுக்கீடு) ஏதாவது ஒரு தடவை வாய்ப்புக் கொடுத்தால் நீங்கள் அதற்கேற்ப பொருத்தமானதாக அவையில் விவாதித்தால் பரவாயில்லை. (குறுக்கீடுகள்) நான் எழுந்து நின்றால் நீங்கள் எல்லோரும் உட்கார வேண்டியதுதான். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள் (குறுக்கீடு) அடுத்த வாய்ப்புத் தரப்படும். நீங்கள் எல்லோரும் உட்காரலாம்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் மாவட்டம், ஆத்தூரில் 24—3—1989 அன்று நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்ட நிலைமை குறித்துப் பேரவையில் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிய என் அனுமதி கேட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதே பொருள் குறித்துக் கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்களும் அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், திருமதி பாப்பா உமாநாத், திரு. செ.

நூர் முகமது, திரு. வி. இராமசாமி, திரு. எம். சீரங்கன், திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. கே. சின்னசாமி, திரு. கே. பொன்னுசாமி. இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி 4 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. முதலிலே திரு. அப்துல் லத்தீப் (குறுக்கீடு).

5. ஒழுங்குப் பிரச்சினை.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி- உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் உடல் நலம் குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, On a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த ஒழுங்குப் பிரச்சினையாக இருந்தாலும், ஓர் அலுவல் நடந்து கொண்டிருந்தால் அது தொடர்பாக இருந்தால்தான் அனுமதிக்கப்படும். திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகிறார்களா ?

திரு. எம். அப்துல் லத்தீப் : Mr. Speaker, Sir, I am on a point of Order. Please allow me to havemy say on the point of order. தலைவரவர்களே, இந்த மன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய இரண்டு தகவல்களைக் குறித்து நான் ஒரு கேள்வியை எழுப்ப விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவது குறித்துப் பத்திரிகைகளில் பல்வேறு தகவல்கள் வருகின்றன. அவர்களுடைய நிலை என்ன ? டாக்டர்களுடைய அறிக்கை என்ன ? அவருடைய உடல் நலம் எப்படி இருக்கிறது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. அதே நேரத்தில் அமைச்சர் அந்தஸ்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மருத்துவ மனையில் இருக்கிறார்கள். அவர்களும் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்று பல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே அவர்களுடைய உடல்நிலை எப்படி இருக்கிறது. அவர்களுடைய உடல்நிலைக்கு என்ன ? அவர்களுடைய டாக்டர்கள் கொடுத்த அறிக்கை என்ன ? இவர்கள் இருவரையும் கவனிப்பதற்கு அரசு ஒரு பேனல் ஆஃப் டாக்டர்ஸ் ஏற்படுத்துமா ? அப்படி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ? இதுவரை அவர்கள் உடல்நிலை குறித்து அரசுக்குக் கிடைத்த தகவல்கள் என்ன என்பதை மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.



* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்களும் ஜெனரல் மருத்துவ மனையிலே-அரசினர் பொது மருத்துவ மனையிலே- அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு என்று ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் 4, 5 பேர் அமைக்கப்பட்டு, அவர்களே கவனித்து வருகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்கள், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களும் விரும்புவார்களானால், ஒரு பேனல் ஆப் டாக்டர்ஸ் நிச்சயமாக இந்த அரசு சார்பாக அமைக்கப்படும் என்பதைத் தான் இப்போது என்னால் சொல்ல இயலும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் அவர்களைக் குறித்து, அரசு அக்கறை கொண்டிருக்க வேண்டாமா ? அவரது உடல்நிலை குறித்து தகவல் சேகரித்திருக்க வேண்டாமா ? இதுவரையில் அவர்களுடைய உடல் நிலை என்ன மாதிரி இருக்கிறது என்பதைப் பற்றி அரசு தகவல் சேகரித்தாவது, அல்லது அரசே தன்னிச்சையாக டாக்டர்களை அனுப்பியாவது, அவரது உடல் நிலை எப்படி இருக்கிறது என்பதை அறிந்து, இந்த மன்றத்திற்குத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை, அவர்கள் விரும்பினால்தான் செய்ய இயலும். நாமாகச்செய்ய இயலாது. நாமே சில டாக்டர்களை அனுப்பிவைப்பதன் மூலமாக, அதைக் குறித்து வேறு செய்திகள் பரப்பிவிடப்பட்டாலும் பரப்பி விடப்படலாம் எனவே, அவர்கள் விரும்புவார்களானால் எத்தனை டாக்டர்களை வேண்டுமானாலும் பேனல் ஆப் டாக்டர்களாக அமைப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் புன்முறுவலோடு பேசுகிறீர்கள். அது மகிழ்ச்சியாக இருக்கிறது. இதேபோல் அவை நடக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டீர்கள். நாங்களும் ஒத்துழைப்புக் கொடுக்கிறோம்—ஒத்துழைப்பைக் கொடுத்தோம்.

ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி பேசும்படி அழைக்கப்பட்டதற்குப் பின்னால் '' I will speak only on the point of order I have raised '', என்று, எந்த உறுப்பினரைத் தாங்கள் அழைத்தீர்களோ அந்த உறுப்பினர், தேவையில்லாமல் இங்கே ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள். அதேபோல் நான் உங்களிடத்திலே உங்கள் அறையில் பேசுகிற நேரத்தில் என்னுடைய உரிமை மீறல் தீர்மானத்தைத் தாங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குத் தாங்கள் எனக்குத் தந்திருக்கிற

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 மார்ச் 30

பதில் சரியில்லை என்று நான் சொன்னேன். என்னுடைய உரிமை மீறல் தீர்மானம்-நான் 27 ஆம் தேதி காலையிலே கொடுத்தேன். 25 ஆம் தேதி அவையில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றியதாகும். உரிமை மீறல் என்று சொன்னால் - அவையில் செயல்படுகிற உறுப்பினர்கள் அச்சமின்றிச் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு வழி வேண்டும் - அனுமதி வேண்டும். இங்கே செயல்படுகிற நேரத்தில், இங்கே கலந்து கொள்கிற நேரத்தில் அடியும் மிரட்டலும்தான் என்று சொன்னால், சுதந்திரமாகச் செயல்பட முடியாது. நீங்கள் அவைத் தலைவராக இருக்கிறீர்கள். எங்களுக்குப் பாதுகாப்பு என்று சொன்னால் உங்களிடத்தில்தான் வந்தாக வேண்டும். நான் உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப வேண்டும் என்று தங்களிடம் கேட்டுக் கொண்டேன். அந்த உரிமை மீறல் பிரச்சினைபற்றி நான் இப்போது பேசவில்லை. ஆனால், உரிமை மீறல் பிரச்சினையை எழுப்ப அனுமதி வேண்டும் என்று மட்டும்தான் கேட்கிறேன். அதைப் பின்னால் எழுப்புகிறேன் என்று ஏற்கெனவே உங்களிடத்திலே ஒப்புக் கொண்டேன். காரணம், இங்கே சுமுகமாக நடக்க வேண்டும் என்று தாங்கள் விரும்பினீர்கள். நிச்சயமாக இந்த அவையிலே நிகழ்ச்சிகள் சுமுகமாக நடைபெற்றாக வேண்டும். நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து, இங்கே அவையில் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மக்களுடைய பிரச்சினைகள் முழுமையாகப் பின்னுக்குத் தள்ளப்படக் கூடாது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். என்றாலும் கூட, நீங்கள் எவ்வளவோ கேட்டுக் கொண்ட பிறகும் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பிய காரணத்தால் நானும் எழுப்ப விரும்புகிறேன்.

அதைப் போலவே, நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் - அவர் 50 ஆண்டுக் காலம் அரசியலில் இருந்து பொன்விழா கொண்டாடியவர் - 7 முறை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் - ஒருமுறை மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் - 30 ஆண்டுக் காலம் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் - எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள்...

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 25–ஆம் தேதி அன்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின் மீது கிட்டத்தட்ட 27, 28, 29 மற்றும் 30 ஆகிய 4, 5 நாட்களாக எந்தவிதமான விவாதத்திலும் கலந்து கொள்வதில்லை என்ற ஒரு முடிவோடு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் முடிவு செய்து இருப்பது நாட்டுக்கு நல்லதுதானா என்பதை அவர்களே எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய தொகுதிப் பிரச்சினைகளே எத்தனையோ இருக்கின்றன. வரவு செலவுத் திட்டத்தில் விடுபட்டுப் போனவைகள் இருக்கலாம். குறைபாடுகள் இருக்கலாம். அல்லது நான் அறிவித்திருப்பதில், இன்னின்ன திருத்தங்கள் தேவை என்று சொல்லலாம். இவைகளைப் பற்றியெல்லாம் சொல்லுவதற்கு அக்கறை எடுத்துக் கொள்ளாமல்



1989 மார்ச் 30] [டாக்டர் மு. கருணாநிதி]

ஒவ்வொரு நாளும் இந்த அவையில் வரவு-செலவுத் திட்டம் பற்றி விவாதம் நடப்பதற்கு இடையூறாக இப்படி எழுந்து பேசிக் கொண்டிருப்பதைத் தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதைத் தான் நான் முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியமும், திரு. எஸ். திருநாவுக்கரசும் எழுந்து பேச முயன்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எல்லாம் உட்காரலாம். திரு. அப்துல் லத்தீப் அவர்களை, முறைப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை முன்மொழியச் சொன்னேன். அது என்ன என்று சொல்ல வேணடுமே தவிர இப்படி ஒழுங்குப் பிரச்சினையை அவராகவே எழுப்பக்கூடாது. இது ஒன்று. இரண்டாவது, 25 ஆம் தேதியன்று நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பாக எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினைகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அத்தனையும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முழுமையாக ஆராயப்பட்டு, அவற்றினுடைய தன்மைகள் முழுமையாக ஆராயப்பட்டு அது தொடர்பாக எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும், உரிமை மீறல் பிரச்சினைக்கும் அனுமதி முற்றாக மறுக்கப்படுகிறது என்பதை இந்த அவையிலே சொல்லி, திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றித் தொடங்குகிறார்களா அல்லது அடுத்தவரைத் தொடங்கச் செய்யட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

### சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடந்த வன்முறையால் சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை—தொடர்ச்சி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை இந்த அவையின் முன் சமர்ப்பித்துக்கொண்டு ஏன் பேரவையை ஒத்திவைக்க வேண்டுமென்பது குறித்து என்னுடைய சில கருத்துக்களை நான் அவை முன் வைக்க விரும்புகிறேன். அண்மைக் காலமாக தமிழகத்தில் அமைதிச் சோலையாக இருக்கிற தமிழகத்தில் பிரச்சினைகளை, பல்வேறு சமுதாயங்களுக்கு இடையே பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடிய அளவுக்கு, குறிப்பாக சிறுபான்மை சமுதாயமாக இருக்கிற இஸ்லாமிய சமுதாயம் ஒரு பயந்த சூழ்நிலையில் வாழக்கூடிய அளவுக்கு சிலருடைய நடைமுறைகள் அமைந்திருப்பதும், அதே நேரத்தில் ஆண்டாண்டு காலமாக நாம் கடைப்பிடித்து வருகிற மரபுக்கு மாறாக செயல்பட்டுத்தான் தீரவேண்டுமென்று அவர்கள் நடப்பது மட்டு

மல்லாமல் அதிகாரிகளையும் அப்படி அவர்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று சொல்லி, அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் வன்முறையில் இறங்கக்கூடிய துர்ப்பாக்கியமான சூழ்நிலைகள் எல்லாம் தமிழகத்திலே நிலவுவது குறித்து இந்த மன்றம் விரிவாக விவாதம் செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறதென்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆத்தூர் பகுதியில் நடைபெற்ற சம்பவம் உண்மையிலேயே துர்ப்பாக்கியமானது என்பதை நான் இந்த அவையிலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலே காலங் காலமாக கடைப்பிடிக்கப்பட்ட மரபுகள், குறிப்பாக முஸ்லீம்களுடைய மசூதிக்கு முன்பு மேளம் வாசிக்கக் கூடாது என்பது, எல்லா சமுதாய மக்களும் நாட்டிலே அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக ஏற்றுக்கொண்டு ஒரு பொது நோக்கோடு எல்லோருடைய ஒப்புதலோடும் உருவாக்கப்பட்ட ஒரு மரபு ஆகும். எனவே, அந்த மரபை போலீஸ்காரர்கள் நடைமுறைப்படுத்தக்கூடிய கடமையுடையவர்களாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஆத்தூர் பகுதிக்கு தொடர்பில்லாத சில நபர்கள் திருச்சி மாவட்டத்திலே இருந்து வந்து குறிப்பாக ஆர்.எஸ்.எஸ். காரர்கள் அந்த மரபை மீறுவதற்கு போலீஸ்காரர்கள் துணையாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருப்பது, அது தமிழகத்திலே இருக்கக்கூடிய அமைதிக்கு பெருத்த பங்கம் விளைவிக்கும் என்பதை சுட்டிக் காட்டி, இந்த மரபுகளையெல்லாம் கடைப்பிடிக்கவேண்டிய அவசியங்களை, தயவுசெய்து நாம் அனைவரும் ஒத்த கருத்தோடு ஒருவரையொருவர் புரிந்துகொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும். இன்றைக்கு அங்கு நடந்த வன்முறைச் சம்பவங்களின் காரணமாக மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையில் இருக்கக் கூடிய சிறுபான்மை மக்கள், மிகப் பெரிய அவதிக்கு ஆளாக்கப் பட்டவர்களாகவும், சாதாரண வாழ்க்கையை அவர்கள் அன்றாடம் நடத்தக்கூட முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டவர்களாகவும், ஒரு பயந்த சூழ்நிலையில் அவர்கள் வாழக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். நான் இந்த அவையைக் கேட்டுக் கொள்வது, தயவுசெய்து இந்த அவை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து—சமுதாயத்தில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்படலாம்; சமுதாயத்தில் நம்முடைய வளர்ச்சிகள் ஏற்பட்டிருக்கலாம்; ஆனால் இந்த முன்னேற்றங்களும், வளர்ச்சிகளும் நிரந்தரமாகவும், பயனுடையதாகவும் இருக்கவேண்டுமென்று சொன்னால், மக்களுடைய எண்ணங்களிலும், உள்ளங்களிலும் சமுதாயத்தில் சாத்வீகம் நிலவ வேண்டும் என்பதற்கான ஒரு சக வாழ்வுக்கான சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் திட்டமிடப்பட்டு அந்த சகவாழ்வு, அந்த சாத்வீகமான வாழ்வு இந்த நாட்டில் அலைக்கழிக்கப்பட வேண்டுமென்பதற்காக சில இயக்கங்கள், சில அமைப்புகள், சில தனிப்பட்டவர்கள் முன்வருவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகவும், இது தொடர்பாக நம்முடைய தமிழ்நாட்டு மக்கள், அமைதியை விரும்புகிற தமிழ்





நாட்டு மக்கள் இதற்கெல்லாம் பலியாகக் கூடாது என்பதற்காகவும் விரிவான விவாதங்களை இந்த மன்றத்தில் செய்து, தமிழ்நாட்டிற்கு, தமிழ்நாட்டினுடைய நல்வாழ்விற்கு ஒரு அடிப்படை அமைப்பதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும் இந்த மன்றத்தில் விவாதம் செய்வதற்கு, தயவுசெய்து இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் பரிவோடு கவனித்து ஏனைய அலுவல்களையெல்லாம் ஒத்தி வைத்து இந்தப் பிரச்சினையை விரிவாக விவாதம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் (குறுக்கீடு). ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிப் பேசியாகிவிட்டது. ஒரு சப்ஜெக்ட் பற்றி, ஆத்தூர் சம்பவம் பற்றி, சிறுபான்மையினர் பற்றி உறுப்பினர் அப்பீல் செய்து விட்டார் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரும் அனுமதியின்றிப் பேசக்கூடாது.

## 3. அவையில் நடைபெற்ற முன்னைய நிகழ்ச்சிகள் குறித்த பிரச்சினை.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்திலே 25 ஆம் தேதி நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஒத்திவைப்பும், உரிமை மீறல் பிரச்சினையும் நாங்கள் இங்கே கொடுத்திருக்கிறோம். அவற்றை நேற்றும் நீங்கள் எடுத்துக்கொள்ள அனுமதிக்கவில்லை. இன்றைக்கு நீங்கள் ஒன்றுக்கு அனுமதி அளித்திருக்கிறீர்கள். இன்னொரு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தரவேண்டும். இதில் ஏற்கெனவே எழுப்பிய பிரச்சினைகள் அப்படியேதான் இருக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்தோடு இன்றைக்குக் கூட்டணிக் கட்சியில் இருக்கிற ஜனதா தள் கட்சியில் இருக்கிற மேனகா காந்தி அவர்கள்கூட இதையெல்லாம் கண்டித்து முதலமைச்சரவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஏதாவது சொல்வது என்றால் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மேனகா காந்தியைப் பற்றி எங்களுக்குத் தெரியும். அதையெல்லாம் பேசக்கூடாது. நீங்கள் என்னிடத்திலே கேட்டுக்கொண்டது என்னவென்றால் நாங்கள் வெளிநடப்புச் செய்யப் போகிறோம் (குறுக்கீடு) அதைச் சொன்னீர்கள். நான் கேட்பது, ஒத்திவைப்புத் தீர்மானம்

எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் மாறிமாறிப் பேசக்கூடாது. (குறுக்கீடு) மாறிமாறிப் பேசக் கூடாது.(குறுக்கீடு) மன்னிக்கவேண்டும். ஒத்திவைப்புத் தீர்மானம் ஒரு நாளைக்கு ஒன்றுதான் எடுத்துக்கொள்ள முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால், இரண்டு முறை அவையை ஒத்தி வைத்து விட்டு விவாதிக்க முடியாது. எப்பொழுதும் வழக்கமாக ஒருமுறைதான் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்வது அவையினுடைய வழக்கமாக, மரபாக இருந்து வருகிறது. ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டு பேசி, இன்னும் அதிலே பேசுவதற்கு நான்கைந்து உறுப்பினர்கள் இருக்கிற நேரத்தில், இடைமறித்து அவர்கள் பேசுகிறார்கள். பேசுகிறபொழுது என்னிடத்திலே சொன்னார்கள் ; நாங்கள் வெளிநடப்புச் செய்யப் போகிறோம் ஆகவே, இரண்டு வார்த்தை சொல்லிவிட்டுப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் அதைச் சொல்லாமல் மறுபடியும், மேனகா காந்தி......

திரு. எஸ். திருநாவுக்கரசு : நீங்கள் அனுமதி மறுத்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கும்பொழுது இன்னொன்றைப்பற்றி நான் தீர்ப்பளிக்க முடியாது, அது முடிந்த பிறகுதான். இடையிடையே குறுக்கிடக்கூடாது. அந்த ஒத்திவைப்புத் தீர்மானம் முடியட்டும். அதற்கப்புறம் நீங்கள் கேட்கலாம், நான் விடை சொல்கிறேன். இது வேண்டாத ஒன்று.

திரு. எஸ். திருநாவுக்கரசு : ஒத்திவைப்புத் தீர்மானம் கேள்வி நேரம் முடிந்த பிறகு.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகரவர்களே,(குறுக்கீடு) அவருக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். மேனகா காந்தி பெண் என்பதை மட்டும்தான் சொல்கிறார்களே ஒழிய, இப்படிப்பட்ட சம்பவத்தைப்பற்றிப் பேசவில்லை. பெண்களுக்கு எங்கே இருந்தாலும் இப்படிப்பட்ட சம்பவம் ஏற்படக்கூடாது என்று ஒரு வார்த்தை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து உங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றிப் பேசுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : அவரை உட்கார வையுங்கள். நான் அதைப்பற்றிப் பேசாவிட்டாலும் கவலையில்லை. அவரை முதலில் உட்கார வையுங்கள். நான் சொல்லக்கூடிய கருத்து.... (குறுக்கீடு) சபாநாயகர் அவர்களே, கடந்த பங்குனி உத்திரத் திருநாளிலே....

திரு. எஸ். திருநாவுக்கரசு : என்னைப் பேச அழையுங்கள். என்னை நீங்கள் பேசச் சொன்னீர்கள். (குறுக்கீடுகள்)



மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். பேச அழைத்தது உண்மை. அது வெளிப்படையான, கண்கூடான உண்மை. வெளிநடப்புச் செய்வதற்காக நீங்கள் கருத்தைச் சொன்னால் அது பரவாயில்லை. ஏற்கலாம். நீங்கள் என்னவென்று சொல்லிவிட்டுப் போகலாமே ! பிறகு நீங்கள் இன்னொரு செய்திக்குப் போனால் அப்புறம் மீண்டும் மீண்டும் அதையே திருப்பிச் சொல்வதற்கு நான் அனுமதிக்க வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. நான் அனுமதித்தது என்பதைப் பெருந்தன்மையோடு நான் திருப்பிச் சொல்வது என்று சொன்னால் நீங்கள் அந்தப் பெருந்தன்மையோடு அதற்குத் தகுந்த மாதிரி வாக்கியத்தைச் சொல்லி விட்டு வெளிநடப்புச் செய்யலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, எனவே கொஞ்சம் தயவு செய்து பொறுமையாக 5 நிமிடம்—2 நிமிடம் விட்டால்கூடப் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநடப்புச் செய்வதற்கா ஐந்து நிமிடங்கள். வெளிநடப்பு என்றால் வெளிநடப்பு என்று சொல்லிவிட்டுப் போங்கள் ; அனுமதிக்கவில்லை, வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய மரபைக் காப்பாற்ற வேண்டுமானால், யாரும் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க அறிவிப்புத் தரலாமே தவிர அப்பொழுது சொற்பொழிவாற்ற முடியாது; பேசுவதற்கு அனுமதி என்பது இந்த அவையினுடைய நேரத்தை எடுத்துக்கொள்வது; அப்படி எடுத்துக்கொள்வது என்றால் அவையினுடைய மொத்த உடன்பாடு இல்லாமல் யாரும் எடுத்துக் கொள்ளமுடியாது. எனவே, வேண்டுமானால் கருத்தைக் குறிப்பாகச் சொல்லலாமே தவிர, பேசுவதற்கு அனுமதித்ததாகச் சொல்வதும், பாயின்ட் ஆப் ஆர்டர் என்ற பேரிலே நீண்டநேரம் பேசுவதும் இந்த அவையினுடைய மரபுக்கு ஏற்றதல்ல என்பதையும் தங்கள் மூலமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஒரே நிமிடத்தில் நான் முடித்து விடுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, நடந்து முடிந்துள்ள பங்குனி உத்திர உற்சவத்திலே....

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுபோன்ற நிலைகளிலே முன்வரிசையிலே இருக்கிறவர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பளிக்கப்படும் என்பதை அருள்கூர்ந்து தெரிந்துகொள்ள வேண்டும். திரு. திருநாவுக்கரசு அவர்கள் விரும்பினால் ஒரு தொடரில் தங்களுடைய கடமையை நிறைவேற்றலாம்.

[1989 மார்ச் 30

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மீண்டும் ஏதாவது பேசி அவையில் 25-ஆம் தேதி போல ஒன்று நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டால் அதை இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் யாரும் அனுமதிக்க முடியாது, தாங்கள் அனுமதிக்கக் கூடாது. இஷ்டமில்லை, வெளியேற வேண்டுமென்று விரும்பினால் நேற்றைக்கு முன்தினம்கூட சொல்லாமலேயே காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எழுந்து வெளிநடப்புச் செய்து விட்டார்கள், அதைப்போல வெளிநடப்புச் செய்யலாம். அதை விட்டுவிட்டு மறுபடியும் பேசுகிறேன், பேசுகிறேன் என்று மறுபடியும் குழப்பத்தை உண்டாக்கினால் நல்லதல்ல. ஏதோ மேனகா காந்தி சொன்னார்கள் என்று சொன்னால், மேனகா காந்தி இன்னொன்றையும் சொன்னார்கள். புறாக்களையும், சேவல்களையும் கொல்லுகிறார்கள். இது அநியாயம் என்று கூட அன்றைக்குச் சொன்னார்கள். அதனால் அவைகளைப் பற்றியெல்லாம் பேச இப்பொழுது சந்தர்ப்பம் இல்லை; விவாதிக்கத் தேவையும் இல்லை. எனவே, வெளிநடப்புச் செய்ய வேண்டுமென்றால் வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்லி விட்டுச் செல்ல வேண்டுமேயல்லாமல், மீண்டும் விவாதப் பொருளை இங்கே உருவாக்கி ஒரு கலவரச் சூழ்நிலையை அமைப்பது நல்லதல்ல.

(முற்பகல் 10–20)

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-ஆம் தேதி நடந்தது போல் நடக்கும் என்று முதலமைச்சர் அவர்களே சொல்லி மிரட்டுவது சரியல்ல. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** அப்படியானால் நீங்கள் மிரட்டுகிறீர்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் சொல்லாததை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார். அதுபோல் ஒரு நிகழ்ச்சி நடப்பதற்கு ஏதுவாகப் பேசுகிறார் என்று சொன்னேனே தவிர நாங்கள் யாரையும் மிரட்டவில்லை. அடி வாங்கியவர்கள் நாங்கள் ஆயிற்றே ? நானல்லவா அடி வாங்கினேன் உங்களிடம். எனவே அதைப்பற்றி மிரட்டுவதற்கு நான் ஒன்றும் அந்த அளவிற்கு ஒரு பெரிய ரவுடி அல்ல.



1989 மார்ச் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கு ஒரு நிமிடம் தரப்படுகிறது. இதன் தொடர்பாக ஏதாவது சொல்ல விரும்பினால் மட்டும் சொல்லுங்கள். அவைக்குத் தொடர்பில்லாத செய்திகளை அருள்கூர்ந்து சொல்ல வேண்டாம். அப்படிச் சொன்னால் மீண்டும் பிரச்சினை வரும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** * *

** **

(கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வார்த்தைகள் அத்தனையையும் சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று சட்டமன்றம் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். இங்கு பேசப்பட்டது முறையற்ற பேச்சு. சபாநாயகர் அவர்கள் அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. திருநாவுக்கரசு அவர்கள் இப்போது பேசிய அந்த வாக்கியங்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அவர்களைத் தொடர்ந்து தம்முடைய ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேச அழைக்கிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடந்த வன்முறையால்
சிறுபான்மை மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலைமை—தொடர்ச்சி.

**திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, வெளியே போகிற உறுப்பினர்கள் நான் சொல்வதைகேட்டு விட்டு போக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மதச் சார்பு உள்ளது. மைனாரிட்டி பிரச்சினை உள்ளது. இரண்டு உயிருக்கு ஐந்து உயிராக பலியானது. இதை கேட்டு விட்டு வெளிநடப்புச் செய்ய வேண்டும். இது என்ன சம்பவம் என்று எல்லோருக்கும் தெரிய வேண்டும். சபாநாயகர் அவர்களே திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரில் ஒரு பெரிய இராமாயணத்தையே வாசித்து

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விட்டார். இது பங்குனி உத்திரம் நடந்த போது 'டெய்ட்டி' போகும் போது நடந்த பிரச்சினை. இது எங்கேயும் சகஜமாக எப்படி இருக்கிறது என்றால்—மைனாரிட்டி என்று சொல்கிற முஸ்லீம்களுக்கும் இந்துக்களுக்கும் நடந்த கலவரம். இதில் போலீஸ் தலையிட்டிருக்கிறது கலவரம் நடக்கக்கூடாது என்று. நாட்டிலே பந்தோபஸ்திற்கு போலீஸ் தலையிடுவது வழக்கம். ஒரு தரப்பாக அவர் சொல்கிறார். திருச்சியிலிருந்து ஆர். எஸ். எஸ். களை ஏதோ ரெயிலிலோ, ஹெலிகாப்ட்டரிலோ ஏற்றிக்கொண்டு வந்து, இங்கே ஆத்தூர் பக்கத்தில் தம்மம்பட்டியில் இறக்கியிருப்பதாகச் சொல்கிறார் அதை நீங்கள் அனுமதித்து இருக்கிறீர்கள். நாங்கள் இரண்டு பேர்களும் இங்கே தான் இருந்திருக்கிறோம். நானும் பத்திரிகையில்தான் பார்த்தேன். அவரும் பத்திரிகையில் பார்த்தது தான். அவரும் கேட்டதைத்தான் சொல்கிறார். நானும் கேட்டதைத்தான் சொல்கிறேன். ஆக மொத்தத்தில் இறந்தது ஐந்து பேர்கள் ஒரே சமூகம், இந்துக்கள். அதை நீங்கள் உணர வேண்டும். மைனாரிட்டி சமூகத்தை துன்புறுத்தினார்களா? அங்கே என்ன நடந்தது? கலவரத்திற்கு என்ன காரணம்? போலீஸ் தலையிட வேண்டுமா, தலையிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டுமா என்கிற பிரச்சினை இருக்க, அவர் ஏதோ ஆர்.எஸ்.எஸ். எங்கேயோ இறங்கினதாகவும், பந்தோபஸ்தை டிஸ்டர்ப் பண்ணியதாகவும் சொல்கிறார். பந்தோபஸ்திற்குத். தானே போலீஸ் வருகிறது. பிறகு எதற்கு அடிப்பதற்கா வருகிறார்கள்? பந்தோபஸ்திற்குத் தான் போலீஸ் வருகிறார்கள். தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இண்டர்நேஷனல் லெவலில் பந்தோபஸ்திற்கு தான் எங்கேயும் போலீஸ் இருக்கிறது. அதைப்போல பந்தோபஸ்திற்கு வந்திருக்கிறார்கள். மைனாரிட்டி என்ற பெயரை அரசியல் சட்டத்தின் பெயரில் நாட்டில் சில பேர் வைத்துக்கொண்டு, அதனால் பலனை தாங்கள் அடைகிறார்கள். சௌகர்யம் அடைகிறார்கள். எங்கெங்கோ குடியேறுகிறார்கள். அந்தப் பக்கத்திலே மேளம் அடிக்கக் கூடாது என்கிறார்கள். எங்கே வேண்டுமானாலும் குடியேறுகிறார்கள். மேளம் அடிக்காமல் இருக்க முடியுமா? பங்குனி உத்திரத் திருவிழா என்பது இன்றைக்கு ஏற்பட்ட ஒன்றா? முருகன் கோவில் என்பது ஏற்பட்டது எத்தனையோ காலத்திற்கு முன்னால். அந்த உற்சவத்தில் மேளம் அடிக்கக் கூடாது என்கிறார்கள். அப்போதும் மேளம் அடிக்காமல் போகிறபோது நடுவில். வம்பு வந்து விட்டது. துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது. முதலில் இரண்டு ஆர்.எஸ்.எஸ். என்று போட்டது—ஏதோ பத்திரிகையை சொல்கிறார். மொத்தத்தில் இந்துக்கள் இறந்து போயிருக்கிறார்கள். அது ஐந்தாக உயர்ந்திருக்கிறது. அதைப் பற்றி சாங்கோபாங்கமாக இந்த அவையில் விவாதித்துப் பேசுவது நம்முடைய சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குத் தான். முஸ்லீம்—இந்துக்களிடையே எப்படி ஒற்றுமையை ஏற்படுத்துவது என்பதற்கு, இனிமேலாவது இது போன்ற சம்பவங்கள் ஏற்படக்கூடாது என்பதற்கு, இந்த சட்டமன்றத்தில் விவாதிப்பதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் நான் முதலில் கொடுத்தேன். என்னுடைய தீர்மானத்தை அப்படியே வைத்துவிட்டு திரு. லத்தீப் அவர்களுடைய தீர்மானத்தை முதலில்





எடுத்திருக்கிறீர்கள். அதிலேயும் ரொம்பவும் சந்தோஷம்தான். நாங்கள் இரண்டு பேர்களும் ஒன்றுதான். இங்கே மட்டும் சகோதரர்கள் என்றில்லை, எங்கேயும் சகோதரர்கள்தான். ஆகவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** தலைவர் அவர்களே,........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அருள்கூர்ந்து எல்லோருக்கும் உள்ள விதிமுறைகளை நீங்களும் கடைபிடிக்க வேண்டும். அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது திருமதி பாப்பா உமாநாத் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுடைய துணைத் தலைவரைப் பற்றிக் கூறியதை வாபஸ் வாங்காததால், அதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பின்னர் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

**திருமதி பாப்பா உமாநாத் :** பேரவைத் தலைவர் அவர்களே, காலை நேரத்திலே இவர்களுக்கு இது ஒரு வேலையாகவே போச்சு (சிரிப்பு).

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் கண்ணகியாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற பாப்பா அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே நான் பிரச்சினைக்கு வருவதற்கு முன்னாலே, இந்த இனிய காலை நேரம் சில தினங்களாக கெட்டுக் கொண்டே வருகிறது. மக்களுடைய பிரச்சினைகளை நாம் இங்கே கொண்டுவரவே முடியவில்லை. ஆகவே தலைவர் அவர்கள் இதற்கு முறையான ஒழுங்கு நடவடிக்கை முறைகளைக் கையாண்டு, முறையாக சபை நடக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சிறந்த பார்லிமெண்டேரியன், நன்றாகத் தெரியும். அவர்கள், மக்கள் பிரச்சினைகளை இது போன்ற அவைகளில் அணுகிடவேண்டும். அதற்குரிய வழிமுறைகளைக் காணவேண்டும், அதற்கு அரசு பொறுப்பேற்று நடத்த வேண்டும் என்பதில் ஆழமான நம்பிக்கையுள்ள ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இருந்த போதிலும் கூட இங்கே நடைபெறுகின்ற சம்பவங்களை

யொட்டி, நாம் மக்களுக்காக ஆற்றுகின்ற பணிகளைக் கிஞ்சிற்றும் மறந்துவிடப் போவதில்லை. என்ன நடைபெற்றாலும் நாம் என்ன திட்டங்களை வகுத்திருக்கிறோமோ, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் தயங்கப் போவதில்லை. எனவே அத்தகைய தயக்கமோ, அச்சமோ இல்லாமல் இந்த அவையிலே கருத்துக்களைக் கூற அம்மையார் அவர்களுக்கு உரிமையுண்டு.

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, 23–ஆம் தேதியன்று நடைபெற்ற துப்பாக்கிச் சூடு விஷயமாக சபையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டிருந்தோம். பொதுவாக பங்குனி உத்திரத் திருவிழாவையொட்டி, சேலம் மாவட்டம் தம்மம்பட்டி முருகன் கோவிலில் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்த விழாவையொட்டி, கலவரம் ஏற்பட்டு இருக்கிறது. அந்தத் தம்மம்பட்டியில் உள்ள முருகன் கோயில் பங்குனித் திருவிழாவை முன்னிட்டு ஆண்டுதோறும் ஊர்வலம் நடத்துவதுண்டு. பல ஆயிரம் மக்கள் கலந்துகொள்வதுண்டு. மேலும் மேளம் அடிக்கக்கூடாது என்பது, தெருவிலே அல்ல, மசூதி முன்பு யாரும் அடிக்கக்கூடாது என்பது மரபு. தொன்றுதொட்டு இருக்கக்கூடிய பழக்கம். இதில் போலீஸ் அதிகாரிகளும், தாசில்தாரும் அவர்களை அழைத்துப் பேசி ஒரு சமரச உடன்பாடு காண முயற்சி செய்திருக்கிறார்கள். ஆனால் ஜெகதீஷ் மற்றும் ரமேஷ் என்ற இருவர், ஆர்.எஸ்.எஸ். இந்து, முன்னணி பிரிவினர் என்று சொல்லப்படுகிறது—இதை, அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல், மீறி ஊர்வலம் நடத்துவதாகச் சொல்லி நடத்தியிருக்கிறார்கள். அதன் விளைவாக ஒரு துப்பாக்கிச் சூடும் ஏற்பட்டிருக்கிறது.

அதேபோல், அந்த இடத்திலே கூட அதிகாரிகள் தலையிட்டு சமாதானப்படுத்த விரும்பி இருக்கிறார்கள். அதையும் மீறி மசூதி முன்னால் மேளம் தட்டியதினுடைய விளைவாகத்தான் இந்தக் கலவரம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கேயிருக்கக் கூடிய அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. இப்படிப்பட்ட இந்த ஆர்.எஸ்.எஸ். பிரிவினர் தொடர்ச்சியாக அந்த ஊரில் கராத்தே போன்ற பல்வேறு பயிற்சி முகாம்களை நடத்தி ஒரு மதவெறியைத் தூண்டக் கூடிய செயல்களில் ஈடுபட்டு வந்திருக்கிறபோது, தாசில்தார் அவர்களும், உயர் அதிகாரிகளும், போலீஸ் அதிகாரிகளும் இதைக் கண்காணித்து வந்திருந்தால், இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் தடுத்திருக்க முடியும், முன் நடவடிக்கை எடுத்திருந்தால் என்பது நான் சார்ந்திருக்கிற கட்சியினுடைய கருத்தாகும். ஆகவே அந்த முறையில் ஏற்பட்டிருக்கக் கூடிய இந்தச் சம்பவம் இங்கு மட்டுமல்ல, உங்களுக்கு எல்லாம் தெரியும், சென்ற ஆண்டு நம்முடைய சென்னை நகரிலே பெரம்பூரிலே புளியந்தோப்பில் கிருஸ்தவ மக்கள் இருக்கக் கூடிய சர்ச்சுக்கு முன்னால், இதே ஆர்.எஸ்.எஸ். பிரிவினர் ஏற்படுத்திய தகராறின் விளைவாக அன்று நடந்த



விவகாரத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழகத்திலே நாம் பெருமைப்படக் கூடிய ஒரு விஷயம் என்னவென்றால், எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், ஒரு நட்புறவோடு, அன்போடு வாழக் கூடிய ஒரு பழக்கம் கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது என்பது தான். ஆனால் இந்த ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி பிரிவினர் சமீப காலமாக இது போன்ற மதவெறியைத் தூண்டக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10.30)

அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத் துப்பாக்கிச் சூடு பற்றி ஒரு பகிரங்கமான நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக பரபரப்பும் ஒரு பதட்டமும், மத வெறி தூண்டப்படக் கூடிய நிலையில், தங்கள் வீடுகள் தாக்கப்படுமோ என்று மக்கள் அஞ்சுறும் நிலையில், அவையை ஒத்தி வைத்து,) இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையில் திரு. அப்துல் லத்தீப் அவர்களும், திரு. தீட்சிதர் அவர்களும், மற்றும் திருமதி பாப்பா உமாநாத் அவர்களும் கொண்டு வந்து, கருத்துக்கள் சொல்லப்பட்ட, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது எனக்குக் கிடைத்த சில தகவல்களை இங்கே கூற விரும்புகின்றேன்.

சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் பெற்ற தகவல்கள் இவை. சேலம் மாவட்டம் தம்மம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு மண்மேடு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலில் 21–3–1989 முதல் பங்குனி உத்திரத் திருநாள் விழாத் தொடங்கி நடைபெற்று வந்தது. வழக்கமாக இவ்விழா தொடர்பாக நடத்தப்படும் ஊர்வலத்தின்போது பசார் சாலை வழியாக, முஸ்லீம் மசூதியைத் தாண்டிச் செல்லும் போது, மேள தாளங்கள் வாசிப்பதை நிறுத்தி விடுவார்கள். இதற்காக எல்லைக் கற்களாக இரண்டு கற்கள் மசூதி அருகாமையிலே நடப்பட்டு உள்ளன. எனினும் இந்த ஆண்டு சிலர் முதன் முறையாக இந்த விழாவையொட்டி தனியாக ஒரு ஊர்வலம் நடத்த வேண்டுமென்று ஏற்பாடு செய்திருந்தார்கள். அவர்களுக்கு ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களும், மிகுந்த ஆதரவு தந்தார்கள். எனவே ஊர்வலத்தினர் மசூதி முன் மேள தாளங்கள் வாசிக்க வேண்டுமென்று மிகவும் வலியுறுத்திக் கூறினார்கள். அவ்வூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், 23-3-89 அன்று இரு சமூகத்தினரையும் அழைத்து, இப்பிரச்சினை குறித்து விவாதிக்க ஒரு கூட்டத்தைக் கூட்டியிருந்தார்கள். அக்கூட்டத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த முதிய உறுப்பினர்கள் பழைய பழக்க வழக்கங்களையொட்டி இதற்கு ஒப்புதல் அளித்து, அப்படியே அவர்கள் செல்லலாம் என்று

சொன்னார்கள். ஆனால் இளைய தலை முறையைச் சேர்ந்த சிலர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். ஆனால் குழப்பம் ஏற்படலாம் என்று எதிர்பார்த்து, தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த ஒரு பிரிவும், உள்ளூர் காவல் துறையினரும், காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு காவல் துறை ஆய்வாளர், இரண்டு துணை ஆய்வாளர்கள், 10 சிறப்பு காவல் படையினர், 2 தலைமைக் காவலர்கள் மற்றும் 9 காவலர்கள் மூலம் பந்தோபஸ்துக்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்கு முன் இது போன்று நடந்த ஊர்வலங்களில் 200 முதல் 300 பேர் வரையில் தான் பங்கேற்றுள்ளதால் பாதுகாப்பு ஏற்பாடு போதுமானதாக இருக்கும் என்று நம்பப்பட்டது. ஆனால் அவ்வூரிலே நடத்தப்பட்ட வேறு ஒரு விழாவிலே பங்கு பெறுவதற்காக வந்து இருந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் ஊர்வலத்தில் கலந்து கொண்டதால், ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுடைய எண்ணிக்கை அதிகரித்து, இரவு 10 மணியளவில், சுமார் 1000 பேர் கொண்ட கூட்டமாக அது மாறியது. நிலைமை மோசமாவதை உணர்ந்து அவ்வூர் வருவாய் வட்டாட்சியர், அப்பகுதிக்கு உடன் வருகை தந்தார்கள். இரவு சுமார் 10-3/4 மணியளவில் ஊர்வலத்தினர் பசார் சாலையை அடைந்தார்கள். பசார் சாலையில் மசூதிக்கு முன் மேள தாளத்தை நிறுத்துவதற்கு என்றே நடப்பட்ட கற்கள் உள்ள பகுதிக்கு ஊர்வலத்தினர் வந்து சேர்ந்தார்கள். பழைய வழக்கப்படி மேள தாளங்கள் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும் ஊர்வலத்தினர் மேள தாளங்கள் அடிப்பதை நிறுத்தவில்லை. காவல் துறை துணைக் கண்காணிப்பாளரும், வருவாய் வட்டாட்சியரும் மேள தாளங்கள் அடிப்பதை நிறுத்தச் சொல்லி மன்றாடிக் கேட்டுக் கொண்டும், ஊர்வலத்தினர் மேள தாளங்கள் வாசிப்பதில் மிகவும் பிடிவாதமாக இருந்தார்கள். அந்த நேரத்தில் அருகாமையில் இருந்த மசூதியில் சுமார் 500 முஸ்லீம் சமுதாயத்தினர் 'ஷாவே பராக்' என்ற கூட்டு வழிபாட்டில் பங்கு எடுத்துக் கொண்டிருந்தார்கள். ஊர்வலத்தினர் தொடர்ந்து மேள தாளங்கள் வாசித்தனர். இரு சமுதாயத்தினரும் மோதி நிலைமை மிகவும் விபரீதமாகப் போகலாம் என்று எண்ணிக் காவல் துறையினர், வருவாய் வட்டாட்சியர், ஊர்வலத்தினரை மேள தாளங்கள் வாசிப்பதை நிறுத்துமாறு மீண்டும் வலியுறுத்தி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள். நிலைமை கட்டுக்கு அடங்காமல் ஊர்வலத்தினர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர், வருவாய் வட்டாட்சியர், மற்றும் இதரக் காவல் துறை அலுவலாளர்களைக் கற்களால் தாக்க ஆரம்பித்தார்கள். வருவாய் வட்டாட்சியரைக் கீழே தள்ளி, கற்களால் அடித்துக் காயப்படுத்தினார்கள். என்றாலும் வருவாய் வட்டாட்சியர் வன்முறையை விடும்படி ஊர்வலத்தினரை மிகவும் வேண்டிக் கொண்டார்கள். எவ்வித வேண்டுகோளையும் ஊர்வலத்தினர் செவி மடுக்கவில்லை. தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதால், வருவாய் வட்டாட்சியர் காவல் துறையினரை, போதுமான முன்னறிவிப்புக் கொடுத்து விட்டு,



கூட்டத்தைக் கலைக்குமாறு வேண்டிக் கொண்டார் காவல் துறையினரின் முன்னெச்சரிக்கைக்கு கூட்டத்தினர் செவி மடுக்கவில்லை. எனவே கூட்டத்தைக் கலைக்க தடியடிப் பிரயோகம் முதலில் செய்யப்பட்டது. என்றாலும் நிலைமை கட்டுக்கு அடங்கவில்லை. தடியடிப் பிரயோகத்திற்கும் பலன் கிட்டாததாலும், கூட்டத்தினர் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டதாலும், அவ்வாறு அவர்கள் தொடர்ந்து ஈடுபடுவார்களேயானால், காவல் துறையினருக்கும், இதர அரசு அலுவலாளர்களுக்கும் உயிருக்கு ஊறு விளைவிக்கும் என எண்ணி, சுமார் 10¾ மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வருவாய் வட்டாட்சியர் ஆணையிட்டார். போதிய முன்னெச்சரிக்கை கொடுத்த பின் இரு முறை காவல் துறையினர் சுட்ட பின் கூட்டத்தினர் கலைந்து ஓடினர். காவல் துறையினர் துப்பாக்கிச் சூட்டில் காயம் அடைந்தவர்களை உடனடியாக அவ்வூர் மருத்துவமனையில் சேர்த்தார்கள். ஆனால் இருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டாலும் வழியில் இறந்தனர். அவ்வூர் வருவாய் வட்டாட்சியர் திரு. டி. வி. ராமன் அவர்களின் புகாரின் பேரில் தம்மம்பட்டி காவல் துறையின் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆர். எஸ். எஸ். ஐச் சேர்ந்த திரு. ஜெகதீசன், அவரோடு 36 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். கூடுதல் காவல் துறையினர் தம்மம்பட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று பந்தோபஸ்து ஏற்பாடுகளை மேற்பார்வை செய்துள்ளார்கள். போதுமான அளவுக்குப் பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பிற பகுதிகளிலும் இது போன்ற அசம்பாவிதங்கள் பரவாமல் இருக்க தகுந்த முன் எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தை ஒட்டி முறைமையான விசாரணை ஒன்று சேலம் மாவட்ட வருவாய் அலுவலாளர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களை அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டது. இறந்தவரில் இருவர் திரு. செல்வராஜ், திரு. பழனியப்பன் என்பவர்கள் ஆவார்கள். ஊர்வலத்திலே கல் எறிந்ததால், அவ்வூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உள்ளிட்ட பலர் காயம் அடைந்தார்கள். காவல் துறைத் தலைவர், சென்னை மற்றும் வேலூர் பகுதி காவல் துறை துணைத் தலைவர் ஆகியோர் தம்மம்பட்டிக்குச் சென்று இது குறித்து விசாரணை நடத்தினார்கள். தற்போது நிலைமை கட்டுக்கடங்கி அமைதியாக உள்ளது. நிலைமை தற்போது கட்டுக்குள் அடங்கியிருப்பதால் யாருக்கும் எந்தப் பாதிப்பும் இல்லை. சிறுபான்மை சமூகத்தினர் பயமின்றி சுதந்திரமாக உள்ளார்கள். அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. ஊர் மக்களுக்கும் தகுந்த பாதுகாப்புத் தரப்பட்டுள்ளது.

இங்கே நம்முடைய லத்தீப் அவர்களும், தீட்சிதர் அவர்களும், அம்மையார் அவர்களும் எடுத்துக் கூறிய அந்தக் கருத்துக்களின் அடிப்படையில், தமிழ்நாட்டில் மதக் கலவரங்கள் கூடுமானவரையில் தவிர்க்கப்பட்டு வந்திருக்கிறது. இந்தியாவிலே வேறு பகுதிகளில் நடைபெறுகிற அளவுக்கு தமிழ்நாட்டிலே மதக் கலவரங்களுக்கு நாம் இடந்தருவதில்லை. அதிலே எல்லாக் கட்சிகளும் ஒத்துழைத்துத்தான் வந்திருக்கிறோம். பெருந்தலைவர் காமராசர் ஆனாலும், தந்தை பெரியார் அவர்களானாலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆனாலும், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களானாலும், கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் மறைந்த ஜீவானந்தம் அவர்கள் ஆனாலும், இவர்களெல்லாம் தமிழ்நாட்டிலே இப்படி மதக் கலவரங்கள் வரக் கூடாது என்பதற்காக எத்தகைய அரும் பணிகளை ஆற்றியிருக்கிறார்கள், எந்த அளவுக்கு சமத்துவம் இங்கே உருவாக வேண்டும், சகோதரத்துவம் இந்து முஸ்லீம்களிடையே உருவாகவேண்டுமென்று பாடுபட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது திடீரென்று ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு புத்துயிர் ஊட்டுவதென்பது, அதுவும் கடந்த காலத்திலே ஆர். எஸ். எஸ். இயக்கம் என்ற ஒன்று இருந்தால் என்ன என்றெல்லாம் அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களாலே அங்கீகரிக்கப்பட்டு, அது வந்து விட்ட காரணத்தால் இந்த நிலைமைகளெல்லாம் இன்றைக்கு உருவாகியிருக்கின்றன. இருந்தாலும் கூட இது போன்ற மதக் கலவரங்களை இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது, தகுந்த நடவடிக்கையை எடுக்கும் என்ற உறுதிமொழியை இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தந்துள்ள உறுப்பினர்கள் அனைவருக்கும் தந்து, எனவே இதற்கு மேலும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மேல் விவாதிப்பதற்குத் தேவையில்லை என்ற என்னுடைய கருத்தை தலைவர் அவர்களே, தங்கள் முன் வைக்கின்றேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 6. உரிமைப் பிரச்சினை.

## தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த அலுவல் அவை உரிமை மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தமிழ்நாடு மின் வாரியத் தலைவர் மீது அவை உரிமை மீறல் பிரச்சினைக்கான ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இது எவ்வாறு அவை உரிமை மீறிய செயலாகும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.





திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மார்ச் மாதம் 22 ஆம் தேதி தமிழக அரசின் சார்பிலே பத்திரிகைகளுக்கு ஒரு அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது. உயர் அழுத்த. குறைந்த அழுத்த மின்சார உபயோகிப்பாளர்களுக்கு மின் கட்டணத்தை அதிகரித்து அந்த அறிவிப்பு வந்திருக்கிறது. இந்தப் புதிய மின் கட்டண உயர்வால் தமிழக அரசுக்கு, மின் வாரியத்திற்கு ஆண்டொன்றுக்கு 120 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும் என்று அதிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இது விஷயமாக விளக்கம் சொல்வதற்கு பத்திரிகையாளர்களை மின் வாரியத் தலைவர் திரு.டி.வி. அந்தோணி அவர்கள் அன்று மாலையிலேயே சந்தித்து இருக்கிறார்கள். அப்போது அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

The Chairman is reported to have said, "We are an autonomous organisation exeept on tariff, which is the strict business of the Government", என்று அவர் சொல்லியிருக்கிறார். தமிழக அரசு தங்களுடைய இலாக்காத் தலைவர்களுக்கு தெளிவாக முன்பே சொல்லியிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் பத்திரிகையாளர்களுக்கு கொள்கைப் பிரகடனம் கொடுக்கக் கூடிய பணியை அவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது. அதற்கு அமைச்சர்கள்தான் பொறுப்பாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மின் வாரியத்தைப் பொறுத்தவரையில் மின் துறையைப் பொறுத்தவரையில் இங்கே ஒரு அமைச்சர் இருக்கிறார். அந்த அமைச்சர்தான் எந்தக் கொள்கைப் பிரக்டனமாக இருந்தாலும், எதுவாக இருந்தாலும் செய்ய வேண்டும். அதுவும் அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது முதலிலே அவையிலேயேதான் அந்த அறிவிப்பைக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் சென்ற முறை, சென்ற மாதம் இங்கே கூட்டம் நடைபெற்றபோது சில சலுகைகள் அறிவித்ததற்காக மின் துறை அமைச்சர் மீது உரிமை மீறல் தீர்மானம் கொண்டு வரப்பட்ட நேரத்தில் நீங்கள் மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறீர்கள். எந்தக் காரணத்தைக் கொண்டும் கொள்கைப் பிரகடனம் எதையும் சபை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் அவைக்கு வெளியே வெளியிடக்கூடாது என்று நீங்கள் அன்றையதினம் உத்தரவு பிறப்பித்திருக்கிறீர்கள். இப்போது சபைத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதி அன்று காலவரையறை இன்றி சட்டசபை ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் it was not prorogued by the Governor of the State, எனவே, மார்ச் மாதம் 22-ந் தேதி அன்று இந்தச் சபை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த விஷயம் ஏதோ ஒன்பது இலட்சத்து இருபத்தி ஓராயிரம் பேர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல. தமிழக மக்கள் அத்தனை பேரையும் பாதிக்கக் கூடிய ஒரு பிரச்சினை. அதுவும் 25 ஆம் தேதியன்று முதலமைச்சர் அவர்களால், நிதியமைச்சர் அவர்களால் நிதிநிலை அறிக்கை இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற நேரத்தில் மின் வாரியத் தலைவர் அவர்கள் பத்திரிகையாளரிடத்திலே போய்

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1989 மார்ச் 30

இந்த அறிவிப்பைக் கொடுத்திருப்பது நிச்சயமாக அவையினுடைய உரிமை மீறல் செயலாகும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அளித்த தீர்ப்புக்கு, நீங்கள் கொடுத்திருக்கின்ற உத்தரவுக்கு நிச்சயமாக அவர் எதிராகச் செயல்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையை அவமதித்திருக்கிறார். இந்த அவையின் மரியாதையைக் குறைத்திருக்கிறார். இந்த அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிக்க அவர் முயற்சித்திருக்கிறார். எனவே, நீங்கள் அவர் மீது, அவையினுடைய உரிமையை மீறிய குற்றத்திற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதுகுறித்து மின் வாரியத் தலைவரின் விளக்கத்தையும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்தையும் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிக்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (உ) சேரன்மாதேவித் தொகுதி நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள குடிநீர்ப் பிரச்சினை.

திரு. பி. எச். பாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் அப்போது எழுப்ப முயன்ற ஒரு ஒழுங்குப் பிரச்சனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசும்போது மக்களுடைய பிரச்சினையைப் பற்றி பேசக்கூடிய இந்த அவை என்று ஆரம்பித்தார்கள். நான் அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றுதான் ஒரு ஒழுங்குப் பிரச்சினையை பேசப் ஆரம்பித்தேன். மக்களுடைய பிரச்சினையைப் பேசக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு அரசாங்கமும் தனிச் சலுகை காட்டவேண்டும். சபாநாயகரும் தனிச் சலுகை காட்டவேண்டும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மக்களுடைய இன்றியமையாத, இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு அவசியமான பிரச்சினையை முதலமைச்சர் இங்கே இருக்கின்ற காரணத்தால் உடனே உத்தரவும் எனக்கு வழங்க வேண்டும் என்று நான் உங்கள் முன்னாலே வைக்கிறேன். இன்றைக்கு வறட்சி தாண்டவமாடுகிறது. என்னுடைய தொகுதியில் ஏழு நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கோபாலசமுத்திரம், மேலச்செவல், பத்தமடை, சேரன்மாதேவி, வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி, முக்கூடல் என்ற ஏழு நகரப் பஞ்சாயத்துக்களில் குடிநீர் பிரச்சினை இன்றைக்குத் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. ஆக, நான் மக்களுடைய பிரச்சினையைப் பேசிக்கொண்டிருக்கிறேன். மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் உடனே ஏதாவது ஒரு நிதியை குடிநீர்த் திட்டத்தை விஸ்தரிப்பதற்கு — சில தெருக்கள் விடப்பட்டிருக்கின்றன. இங்கே வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் இப்படி நீங்கள்



1989 மார்ச் 30] [திரு. பி. எச். பாண்டியன்]

ஊக்குவித்தால் யாருமே இங்கே வேறு எந்தப் பிரச்சினையையும் பேசமாட்டார்கள். இங்கே வேறு பிரச்சினையே வராது. ஆகவே, ஒழுங்காக மக்களுக்காக பேசக்கூடியவர்களுக்கு போனசாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—உதாரணமாக சேரன்மாதேவியை எடுத்து, விடுபட்ட தெருக்களுக்கு உடனே குடிப்பதற்கு தண்ணீரை வழங்குவதற்கு இன்றைக்கே ஒரு கோடி ரூபாயாவது வழங்குங்கள். நாடு பாராட்டும், எல்லா உறுப்பினர்களும் நாளையிலிருந்து சுமுகமாக இங்கே அமர்ந்து பேசுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் மட்டும் அல்ல, மாநிலம் முழுவதும் இருக்கின்ற வறட்சிப் பிரச்சினை குறித்து ஆராயவும், அதற்குரிய முடிவுகளை எடுக்கவும் வருகின்ற 15, 16 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி இருக்கிறேன். அப்போது நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் சொன்னது எல்லாம் உண்மைதானா என்பதை ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஊ) அவைக் குறிப்பிலிருந்து சில சொற்களை நீக்கக் கோருதல்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை கூறும்போது கடைசியாக நான் ஒரு மிக, மிக சாதாரணமானவன், கேவலமானவன், சூத்திரன் என்பதாலே என்ற வார்த்தைகள் பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. தயவு செய்து தங்கள் மூலம் அந்த வார்த்தைகள் குறிப்பேட்டில் வந்து அச்சடிக்கப்பட்டு பிற்காலத்தில் எல்லோரும் படிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மைக் காலத்திலிருந்த புராணங்களிலேயே இருக்கிறது. எனவே, இங்கே இருப்பது தவறு இல்லை.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூத்திரன் என்று இருப்பதை நான் மறுக்கவில்லை. சாதாரணமானவன், மிகவும் கேவலமானவன் என்ற வார்த்தைகளையாவது நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### (எ) பேரவை மரபுகளைக் கடைப்பிடித்தல் குறித்து.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற விதிகள் இருக்கின்றன. இப்போது இங்கே மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் மக்கள் குறைகளை எடுத்துப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு

முதல்மைச்சர் அவர்கள் கூட பதில் சொன்னார்கள். இங்கே மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்கு ஒரு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஒரு பட்ஜெட் விவாதம் இங்கே வைக்கப்பட்டி ருக்கிறது. இப்போது தான் நீங்கள் ஒரு உரிமைப் பிரச்சினைமீது பின்னால் தீர்ப்பு வழங்குவதாகக் கூறி அடுத்த நிகழ்ச்சிக்குப் போவ தற்கு முன்னதாக இப்படி அளவு கடந்த அதிகாரத்தைப் படைத்து ஒரு சபாநாயகராக இருந்த அவர் சட்டமன்ற விதிகளை முழுமை யாக நன்கு உணர்ந்தவர். இந்த நேரத்தை இப்போது பயன் படுத்துவதன் மூலமாக ஒரு முன் உதாரணத்தைக் கொண்டு வந் தால் அனைவரும் இந்த பிரச்சினையை எழுந்து பேசக்கூடிய ஒரு நிலைமை வரும். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அனுமதிக்க வேண்டாம். நேற்றே கூட நான் கூறினேன். ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்த உடனே அவையை எதற்காக ஒத்திவைக்க வேண்டும் என்ற அந்தக் காரணத்தை மட்டும் 2 நிமிடங்களில் பேசிவிட்டுப் போவதற்கு பதிலாக அதில் அடக்கப் பட்டு இருக்கக்கூடிய விஷயங்களை எல்லாம் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்று சொன்னேன். இப்படிப்பட்ட முறை யில் அனுமதிப்பது என்பது சபையை நல்லமுறையில் நடத்து வதற்கு உதவாது என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பிரச்சினைக்காக அவையின் விதியை மீறலாம். ஒரு தனி மனிதனுடைய பிரச்சினைக்காக அவையின் விதியை மீறக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதை நான் கவனத்தில் கொள்வேன். எல்லா உறுப்பினர்களும் அருள்கூர்ந்து மரபை இன்னும் இறுக்கமாகப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த அலுவல், 1988-89-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை.

### 7. அறிவிப்புகள்.

### (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை, 1988-89 முன்மொழிதல் (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1988-89-ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கை களைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிட மிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

" In pursuance of Article 205, clause (2), read with Article 203, clause (3) of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Further Grants for the year 1988-89. "





(முற்பகல் 10-50)

### 8. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1988-89—வாக்கெடுப்பு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1988-89-ஆம் ஆண்டுக்கு கூடுதல் செலவிற்கான மானிய கோரிக்கைகள் அடங்கிய, 28—3—1989 தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக் கோரிக்கை கள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகை களுக்கு மேற்படாத தொகையை 1988-89 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

நிறைவேற்றப்பெற்ற 1988-89 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை. | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| A. வருவாய்க் கணக்கில் செலவு. | |
| 4 பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்— நிருவாகம். | 1,39,85 |
| 5 முத்திரைத் தாள்கள்—நிருவாகம். | 45,82 |
| 6 பத்திரப் பதிவு. | 24 48 |
| 8 தேர்தல்கள். | 3,94,04 |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப்பணியாளர்கள். | 1.51,36 |
| 11 மாவட்ட நிருவாகம். | 8.34,21 |
| 13 நீதி நிருவாகம். | 1 |
| 14 சிறைச் சாலைகள். | 2,55,45 |
| 15 காவல் துறை. | 6,25,28 |
| 17 கல்வி. | 72,88,62 |
| 18 மருத்துவம். | 3,78,22 |

கோரிக்கை.

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| A. வருவாய்க் கணக்கில் செலவு— தொடர்ச்சி. | |
| 19 பொதுச் சுகாதாரம். | 2,78,96 |
| 20 வேளாண்மை. | 4,51,61 |
| 21 மீனளம். | 31.44 |
| 22 கால்நடை வளர்ப்பு. | 1,42,58 |
| 23 கூட்டுறவு. | 15,76 |
| 24 தொழில்கள். | 1 |
| 25 கைத்தறியும் துணித் தொழிலும். | 17,82,93 |
| 27 கதர்த் தொழில். | 4,91,70 |
| 28 சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிருவாகமும். | 44,73,90 |
| 29 தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும். | 11,44 |
| 30 சமூக நலன். | 8,64,60 |
| 31 பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 2,14,14 |
| 32 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன். | 34,19 |
| 33 வீட்டு வசதி. | 9,35,04 |
| 34 நகர்ப்புற வளர்ச்சி. | 1 |
| 35 நுகர் பொருள் வழங்கல். | 19,48,57 |
| 36 பாசனம். | 1,54 |
| 37 பொதுப் பணிகள்—கட்டிடங்கள். | 77,57 |
| 39 சாலைகளும் பாலங்களும். | 4,56,74 |
| 40 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 1,64,38 |
| 41 இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்த் தணிப்பு. | 4,59,50 |
| 42 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். | 33,23,21 |





கோரிக்கை :

| | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 43 பல்வகை. | 4 |
| 44 எழுதுபொருள்—அச்சுத் துறை. | 3,62,56 |
| 45 காட்டுவளத் துறை. | 98,48 |
| 46 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும். | 3,49,81 |
| 47 செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 1,03,51 |
| 48 ஊரகத் தொழில்கள். | 2 |
| 49 குடிநீர் வழங்கல். | 1 |
| மொத்தம்—A. வருவாய்க் கணக்கு | 2,72,11,59 |
| B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | |
| 50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 2,24,31 |
| 51 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 2 |
| 52 பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 1,87,25 |
| 53 பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 7 |
| 55 சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 1,92,28 |
| 56 காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு. | 3 |
| 58 பல்வகை மூலதனச் செலவு. | 22,36,23 |
| மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 28,40,19 |
| C. கடன்கள் முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும். | |
| 59 மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 85,11,02 |
| பெரு மொத்தம் .. | 3,85,62,80 |

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு, 1989 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

9. அரசினர் சட்ட முன்வடிவு.

நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஏ) அரசின் ஆணைகள், ஆவணங்களைத் தமிழில் தருதல்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எதுவும் விவகாரத்தை ஏற்படுத்தக் கூடிய விஷயத்தை நான் சொல்ல வரவில்லை. ஆங்கிலத்திலேயே அரசாங்கத்தினுடைய ஆணைகளும், ஆவணங்களும் இருக்கின்றன. நம்முடைய மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்கள், அவற்றைத் தமிழில் வைப்பதற்கு ஏற்பாடு செய்தால் உதவியாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாக வைக்கப் படும்.

10. வரவு-செலவுத் திட்டம், 1989-90, பொது விவாதம்—தொடர்ச்சி.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டத்தின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதில் பல



திட்டங்கள், நல்ல திட்டங்கள் என்றாலும்கூட, மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று இதையே நாம் எப்போதுமே சொல்லிக் கொண்டு இருக்கிறோம். இது ரொம்ப வேடிக்கையாகக் கூட இருக்கிறது. ஜனநாயக நாட்டில் தேர்தல் வைக்கிறோம். உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். எந்தக் கட்சி அதிகப்படியான அங்கத்தினர்களோடு வெற்றிபெற்று இங்கே வருகிறார்களோ அவர்களால் அரசு அமைக்கப்பட்டு இந்தஅரசாங்கம் நடந்து கொண்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் பாராளுமன்றத்திலே அதிகமான அங்கத்தினர்களைப் பெற்றிருக்கிற காரணத்தினாலே மதிப்பிற்குரிய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அதிக மெஜாரிட்டி அங்கத்தினர்கள் இருக்கிற காரணத்தினாலே அவர்கள் தனித்து இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் போல தமிழகத்தைப் பொறுத்தவரையிலேகூட கூட்டாட்சி இல்லாமல், தனித்து, அதிகப்படியான அங்கத்தினர்களைப் பெற்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தலைமையில், அதிகப்படியான அங்கத்தினர்கள் வந்திருக்கின்ற காரணத்தினாலே நீங்கள் தனித்து இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு இருக்கும் இந்த நிலை நீடிக்க வேண்டும். இந்தச் சுமுகமான சூழ்நிலையிலே இந்தச் சட்டமன்றம் நடக்கவேண்டுமென்றுநான் முதலில் என்னுடைய உரைக்கு போவதற்கு முன்பு பிரார்த்தனை செய்து கொண்டு என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன். இது இப்படியே நடக்க வேண்டும். இதிலே எந்த மாறுதலும் வரக் கூடாது. மறுபடியும் கலகங்கள் வரக் கூடாது. கலகங்கள் வராமல் மனசாட்சியோடு, சிரித்த முகத்தோடு, இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துச் சொல்லி, இருக்கின்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்யக் கூடிய அளவிலே இந்த மன்றம் நடைபெறவேண்டும் என்று நான் இந்த நாட்டிற்கு சுதந்திரம் வாங்கித் தந்த மகாத்மா காந்தியடிகளினுடைய, அந்தத் தலைவருடைய பாதங்களைத் தொட்டு, ஆண்டவனைப் பிரார்த்தித்து என்னுடைய உரையை நான் ஆரம்பிக்கிறேன். அந்த மாதிரி யார் அதிகமாக வருகிறார்களோ அவர்கள் ஆளுகிறார்கள்

அடுத்து, மொழிப் பிரச்சினை என்று வருகிறது. இந்த மொழிப் பிரச்சினையில், நம்முடைய இந்திய தேசிய மொழிகள் அத்தனையும் தேசிய மொழியாக ஆக்கப்படாமல், அந்தந்த மாநிலங்களிலே அதிகப்படியாக எந்த மொழியைப் பேசுகிறார்களோ அந்த மொழியே ஆட்சி மொழியாக இருந்து கொண்டு இருக்கிறது. அதுபோல நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த அளவிலே தமிழ்தான் ஆட்சிமொழியாக இருந்து கொண்டிருக்கிறது. இங்கிருப்பவர்கள், வெவ்வேறு மொழிகளைப் பேசுபவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். கன்னடம் பேசுகிறார்கள்; உருது பேசுகிறார்கள்; சமஸ்கிருதம் பேசுகிறார்கள்; தெலுங்கு பேசுகிறார்கள். அத்தனை மொழியையும் ஆட்சி மொழியாக ஆக்க முடியாது. ஆகையினால் அதிகப்படியான மக்கள் பேசக்கூடிய ஹிந்தி மொழியை அங்கே ஆட்சி மொழியாக வைத்திருக்கிறார்கள். இங்கே ஹிந்தி மொழியைத்திணிக்க

வில்லை. ஹிந்தி மொழியைத் திணிப்பதற்கு நாம் யாருமே இடம் கொடுக்கமாட்டோம். ஆனால் ''நவோதயா'' பள்ளி களில் படிக்கக் கூடியவர்களை, அங்கு விரும்பிப் படிக்கிறவர்களை நாம் தடுக்கக் கூடாது. சமஸ்கிருதத்துறகு நாம அனுமதி கொடுக்கவில்லையா? தெலுங்கிற்கு அனுமது கொடுக்கவில்லையா? கன்னடத்திற்கு அனுமது கொடுக்கவில்லையா? மலையாளத் திற்கு அனுமதி கொடுக்கவில்லையா? அந்த அடிப்படையிலே, படிப்பதைத தடுக்காமல் அவர்களுக்கு எந்தவகையில் பாதுகாப்புக் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அவர்களுக்கு உதவ வேண்டு மாய் நான் கேட்டுக் கொள்கிறேன். நாம் எல்லோரும் தமிழ் மக்கள். ஒரு தமிழ் மூதாட்டி சொன்னார்; ''திரை கடல் ஓடியும் திரவியம் தேடு'' என்று.

படிக்கின்ற அத்தனைபேர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க முடியாது. வெளியே சொல்வோம் வேலை வாய்ப்பு கொடுப் போம் என்று. அந்த அந்த பாஷையை மட்டும் படித்தால் பயனில்லை. இந்தியை நான் விடமாட்டேன், விடமாட்டேன் என்று சொல்வதில் நியாயமில்லை. இந்தி படிப்பவர்கள் படிக் கட்டும். நான் இந்தி படிக்கவில்லை. என் பிள்ளையும் இந்தி படிக்கவில்லை. என் பேரன், பேத்தி படித்தால் படிக்கட்டுமே. ஆகவே, இந்தி படிப்பவர்கள் படிக்கட்டும்; அவர்களுக்கு இந்தி படிக்க இந்த அரசு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே பல நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அவற்றை எல்லாம் எப்படி அமுல்படுத்தப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. தீபாவளி, பொங்கல் பண்டி கைகளுக்கு எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர் களுக்கு அரிசி கொடுக்கிறோம், வேட்டி கொடுக்கிறோம், சேலை கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதிலே பல சிக்கல்கள்இருக்கின்றன. இனாமாகக் கொடுப்பதில் பல தொந்தரவுகள் இருக்கின்றன. ஏற்கெனவே இருந்த அரசும் இப்படிக் கொடுத்தது. இனாமாகக் கொடுக்கின்ற சேலை, வேட்டிகளை விநியோகம் செய்யக் கூடிய காலத்தில் எவ்வளவு தவறுகள் நடந்தன என்பதைப் பார்த்து இருக்கிறோம். அதை எல்லாம் பார்த்த பிறகும் இப்படிப் பட்ட நிலைமை உருவாகக் கூடாது.

அப்படியே கொடுக்க வேண்டுமென்று விரும்பினால் எல் லோருக்கும் கொடுக்க முடியாது. எல்லோருக்கும கொடுத்தால் சிக்கல் ஏற்படும். ஓரளவுக்காவது சீராகக் கொடுக்க வேண்டு மென்று சொன்னால், பஞ்சாயத்து யூனியன் சார்பிலே கொடுக்க லாம். அங்கே இருக்கிற சேர்மன், பஞ்சாயத்துத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர், அங்கே இருக்கிற அதிகாரிகள் ஆகிய எல்லோரும் கண்காணித்து விநியோகம் செய்வதாக இருந்தால் இனாமாகக் கொடுக்கின்ற அந்தப் பொருள்கள் ஒழுங்காகப் போய்ச்சேரும்; தேவையானவர்களுக்கு போய்ச் சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





மாநகராட்சித் தேர்தலை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதிலே கூட இன்றைக்கு இளைஞர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் செய்கிறீர்கள். 18 வயதானவர்களுக்கு எல்லாம் ஓட்டுரிமை அளித்திருக்கிறோம். மத்தியிலும் அதை ஒத்துக்கொண்டிருக்கி றோம்; மாநிலத்திலும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு ஓட்டுரிமை அளித்த பின்னால், அவர்கள் ஓட்டுப் போட முடியாமல் மாநகராட்சித் தேர்தலை நடத்துவது சரியாக இருக்காது. 18 வயது நிரம்பிய இளைஞர்களுக்கும் ஓட்டுப் போடும் வாய்ப்பை உருவாக்கிவிட்டு, தேர்தலை நடத்தினால் சாலச்சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் பெண் களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு அளிப்போம் என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். நானும் ஒரு பெண் என்ற முறையிலே சொல்கிறேன். ஏராளமான பெண்கள் படித்துவிட்டு, பட்டம் பெற்றுவிட்டு, வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். படித்து பட்டம்பெற்ற பின்னாலும் வேலை கிடைக்காத காரணத் தால்தான் வேறு வழியில்லாமல் கடைசியில் சில பெண்கள் அரசியலுக்கு வந்திருக்கிறார்கள். இப்போது 30 சதவீதம் வேலை வாய்ப்பு கொடுக்கப்படும் என்று இந்தத் திட்டத்திலே சொல்லியிருக்கிறீர்கள். எப்படி கொடுக்கப் போகிறீர்கள்? எப்படி கொடுக்க முடியும்? அதற்கு என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? பாரதப் பிரதமர் மாண்புமிகு திரு. ராஜீவ்காந்தி அவர்கள் சொன்னார்கள். நாங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டால் 25 இலட்சம் பேர்களுக்கு 5 ஆண்டுகளுக்குள் வேலைவாய்ப்பு கொடுப்போம்; அதற்கான திட்டம் போ வோம் என்று சொன்னார்கள். உங்களுடைய திட்டத்தி அப்படிப்பட்ட திட்டம் ஒன்றும் இல்லை.

இப்போது கூட இளம்பிள்ளை வாதம்பற்றி சர்வே செய்ய சொல்லப்பட்டிருக்கிறது. சோஷியல் வெல்பேர் டிபார்ட்மென் டில் அதற்காக 30 பேர்களை எடுத்தார்கள். அதிலே 11 பெண் களுக்குத்தான் வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது போதாது. பெண்களுக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு கொடுக்கவேண்டும். 10, 12 இலட்சம் பேர்கள் வேலையில் இருக்கிறார்கள். இந்த 30 சதவீதம் என்பதை அந்த அளவுக்கு உயர்த்த வேண்டும். அதற்கு இந்தத் திட்டத்திலே வழியே இல்லை. வரக்கூடிய வேலை வாய்ப்பை எல்லாம் பெண்களுக்குக் கொடுத்தால்தான் அந்த அளவுக்கு எதிர்காலத்தில் கொடுக்க முடியும். அதற்காக நான் ஆண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. வரக்கூடிய வேலை வாய்ப்பு களில் 30 சதவீதம் பெண்களுக்கு கிடைக்கின்றவரையில் பெண் களுக்கே அந்த வாய்ப்புகளைக் கொடுக்கவேண்டும்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 மார்ச் 30

அது மட்டுமல்ல, கிராமப்புறங்களில் 'கிரச்' இருக்கிறது. அங்கே அதிகமான பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். அங்கே வேலைவாய்ப்பு கொடுத்து, அவர்களுடைய சம்பளத்தையும் 500 ரூபாய்க்கு குறையாமல் கொடுத்து, அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் தங்களையும் காப்பாற்றி, தங்கள் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ள முடியும். ஆகவே, அந்த திட்டம் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதன் பிறகு மில்கள் பிரச்சினை இருக்கிறது. 39 மில்களைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஏற்கெனவே மூடிக் கிடக்கின்ற இந்த 39 மில்களையும் திறப்பதற்கான வழிவகைகளைக் காண்பதற்காக ஆளுநர் ஆட்சி காலத்தில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டியின் சார்பிலே மில்களைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இன்னும் அந்தப் பணி நடக்கவில்லை. 3 மில்களைத் திறந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது மட்டும் போதாது. 39 மில்களையும் திறக்க வேண்டும். அதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூடிக் கிடக்கின்ற மில்களிலே பணியாற்றிய தொழிலாளர்களுக்கு 250 ரூபாய் வீதம் போனஸ் கொடுப்பதாக அறிவித்திருக்கிறீர்கள். சில பத்திரிகைகளிலே அந்தச் செய்தி வந்திருக்கிறது. இது எப்படி இருக்கிறது என்று பார்த்தால், 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது' மாதிரி இருக்கிறது. 250 ரூபாய் கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருப்பது யாருடைய பணம்? அந்தத் தொழிலாளர்களுடைய 'வெல்பேர் ஃபண்டு' இருக்கிறதே, அதிலிருந்து தான் கொடுப்பதாக இருக்கிறது. 250 ரூபாய் என்று விளம்பரம்தான் பெரிதாக இருக்கிறது. அவர்களுடைய நிதியிலிருந்து கொடுப்பதற்குப் பதிலாக முதலமைச்சர் 'ரிலீஃப் பண்ட்'டிலிருந்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

(முற்பகல் 11-00)

அடுத்து பால்வளத் துறையிலே ஏற்கெனவே 1,500 பேர் வேலை செய்தார்கள். அவர்கள் ஸ்ட்ரைக் செய்த காரணத்தால் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். பிறகு அவர்கள் அத்தனை பேரும் எங்கெங்கோ போய் வேலையில் சேர்ந்துவிட்டார்கள். அவர்களில் 800 பேருக்கு கவர்னர் ஆட்சியில் திரும்ப வேலை கொடுக்கபட்டிருக்கிறது. பாக்கி பேர்களுக்கும் வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலையை நாம் உருவாக்கினால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைதத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 மார்ச் 30] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

அடுத்து கூட்டுறவுக் கடன்கள் 39 கோடி ரூபாய்க்கு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பாக்கிப் பணம் எல்லாம்—நான் கேள்வி நேரத்திலே கேட்டபோது கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். இந்தக் கடன்களைப் பொறுத்தவரையில் கூட்டு வட்டி என்று போடுகிறார்கள். வட்டிக்கு வட்டி என்று போடுகிறரர்கள். அப்படி வட்டிக்கு, வட்டி என்று போடுகிறபோது, மழை இல்லாமல், கிணற்றிலே தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகின்ற நிலைமையில் சாதாரண, நடுத்தர விவசாயிகளால் கூட அவற்றைக் கட்ட முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஏழைகளுக்குத் தள்ளுபடி செய்ததை நான் வரவேற்கிறேன். ஆனால் நடுத்தர விவசாயிகளும் மழை இல்லாத காரணத்தால், கிணற்றிலே தண்ணீர் இல்லாத காரணத்தால் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிறார்களே, அப்பேர்ப்பட்டவர்களின் பாக்கிகளையும் கணக்கில் எடுத்து அந்தக் கடனாளிகளுக்கு வட்டி, கூட்டு வட்டி என்றெல்லாம் போடுவதைத் தள்ளுபடி செய்து உதவிட வேண்டும். மூன்றாண்டுக்கு என்று கடன் கொடுத்திருந்தால் அதை ஐந்தாண்டுக்கு என்றும், ஐந்தாண்டுக்கு என்று கடன் கொடுத்திருந்தால் அதை 10 ஆண்டுக்கு என்றும் நீட்டித்துக் கொடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வறட்சி, வறட்சி மிகவும் கொடுமையாக இருக்கிறது. அதிகம் எங்களுடைய ஜில்லா வறட்சியால் மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஏன்? மாநிலம் முழுவதும் மழை இல்லாத காரணத்தால் மிகவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. எனவே, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மட்டும் 5,000 குழாய் கிணறுகள் போட வேண்டுமென்று குறிப்பிலே இருக்கிறது. அப்படி 5.000 குழாய்க் கிணறுகளைப் போட்டால் கூட நிலத்தடி நீர் இல்லை. டிப்பார்ட்மெண்டிலே இருந்து போர் போட்டால் அதாவது 100 அடி, 150 அடி என்ற அளவுக்கு போர் போட்டாலும் கூட தண்ணீர் இல்லை என்றுதான் சொல்கிறார்கள். எனவே இதனை ஓரளவுக்கு மாற்றி, வீணாகப் போர் போடுவதைத் தடுத்து நிறுத்தி எங்கே தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து அதாவது ஒரு பெரிய ஆறு இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; அந்த ஆற்றிலே தண்ணீர் வற்றாமல் வந்து கொண்டிருக்கிறது. என்றால் அங்கே ஒரு பெரிய ராட்சஸ கிணற்றை வெட்டி பக்கத்திலே 5 மைல், 10 மைல் தூரத்தில் இருக்கின்ற கிராமங்களை எல்லாம் இணைத்து ஒரு 'காம்ப்ரஹென்சிவ்' திட்டம் என்ற வகையிலே கூட்டுத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு ஊருக்கும் குடிதண்ணீர் கிடைக்கக்கூடிய வகையில் தேர்ந்தெடுத்துச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இன்றைக்கு ஸ்வீடன் நாட்டின் உதவியோடு மரங்களை நாம் வளர்க்கிறோம். உண்மையிலேயே இந்த மழை எல்லாம் வராமல் இருப்பதற்குக் காரணம் மலையிலே உள்ள மரங்களை வெட்டி விடுவதும், ரோடு ஓரங்களிலே இருக்கின்ற மரங்களை வெட்டி விடுவதும்தான். எனவே இந்தக் கொடுமையான நிலைமையைப் பற்றி நாம் சற்று ஆராய்ந்து பார்த்து எங்கெங்கு கம்மாய்கள் இருக்கிறதோ, எங்கெங்கு இணைப்பு ரோடுகள், பஞ்சாயத்து ரோடுகள், யூனியன் ரோடுகள், சர்க்கார் ரோடுகள் ஆகியவை இருக்கின்றனவோ அங்கெல்லாம் மரங்களை நட வேண்டும. அவவாறு மரங்களை நடுவதற்கு ஓராண்டு, ஈராண்டு எனறு திட்டங்களைத் தீட்டிக் கொள்ள வேண்டும். மரங்களை யாராவது வெட்டினால் நிச்சயமாக அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கிற நிலைமையை உருவாக்கினால்தான் மழை வருவதைத் தடுக்காத நிலைமை ஏற்பட்டு எங்களைப் போன்ற சாதாரண விவசாயிகள, நடுத்தர விவசாயிகள் படக்கூடிய கொடுமை இருக்கிறதே, அது மிகப் பெரிய கொடுமை. அந்தக் கொடுமையிலிருந்து பாதுகாக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பட்டு வளர்ப்பைப் பொறுத்தவரையில் 30,000 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டைச் செடி வளர்க்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அது பாராட்டப்படக்கூடிய ஒன்றுதான். ஆனால் அந்தப் பட்டு வளர்ப்பதிலே மிகக் கடுமையான பணிகள் இருக்கின்றன. அதற்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். மேலும் அந்த பட்டு நூலைக் கொண்டு வந்து போட்டால் அதற்குப் போதிய விலை கிடைக்கக்கூடிய நிலைமை இல்லை. எனவே போதிய விலை கிடைக்கக்கூடிய நிலைமையை உருவாக்கினால் நல்லது. அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் ஆள் வைத்துச் செய்ய முடியாது. கொஞ்சம் நிலம் வைத்திருப்பவர்கள் அதனை அவர்களாகவேதான் செய்ய வேண்டும். நான் கூட வளர்த்திருக்கிறேன். இரவு நேரங்களில் எல்லாம் சென்று பார்த்து இலைகளைப் போட வேண்டும். அது கறீச், கறீச் என்று மெல்கிறதா அல்லது, மெல்லாமல் இருக்கிகிறதா என்பதை எல்லாம் கவனிக்க வேண்டும். அப்படிப்பட்ட கடுமையான தொழிலை நாம் ஊக்குவிக்க வேண்டும்.

அடுக்கு பாசனத் திட்டங்களில் நடந்திருக்கக்கூடிய கொடுமை உண்மையிலேயே மிக வேதனை அளிப்பதாக இருக்கிறது. தண்ணீர் உற்பத்தி ஆகிற இடத்திலேயிருந்து வேறு ஏதோ ஒரு ஜில்லாவுக்குக் கொண்டு போகிறார்கள். அந்த அடிப்படையிலே தான் எங்களுடைய திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எங்கோ மலையிலே இருந்து வருகின்ற தண்ணீரை, வைகையிலே விழுகின்ற தண்ணீரை ராமநாதபுரம் மாவட்டத்திற்குக் கொண்டு செல்கிற நிலைமை இருக்கிறதே தவிர இந்தப் பகுதிகளுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இந்த அடிப்படையிலேயே சென்ற முறை வைகை-பெரியாறு 'இம்ப்ரூவ்மெண்ட் ஸ்கீம்' என்ற ஒரு திட்-





டத்தைப் போட்டார்கள். அப்படி ஒரு திட்டத்தைப் போட்டு நிலக்கோட்டைப் பகுதிக்கு 3,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று 'சாங்ஷன்' செய்யப்பட்டது. 'கெஜட் நோட்டிஃபிகேஷன்' எல்லாம் வந்தது. அதற்கான எல்லா வேலைகளும் செய்யப்பட்டன. பிறகு என்ன காரணத்தாலோ தெரியவில்லை, உலக வங்கி அதனைப் பார்த்து 'அன்எக்கனாமிக் ஸ்கீம்' என்று சொல்லி அதாவது கட்டுப்படியாகாத திட்டம் என்று சொல்லி நிறுத்திவிட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது நியாயம் அல்ல; தர்மம் அல்ல. அப்படியே இலாபகரமான திட்டமாக அது இல்லை என்றாலும் கூட ஏற்கெனவே அறிவித்த பிரகாரம் 3,000 ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் கொடுத்துவிட்டுச் சென்றால்தான் அந்த மக்கள் பொறுத்துக் கொண்டிருப்பார்கள். அப்படியில்லாமல், அவர்களே வாய்க்கால்களை உடைக்கக்கூடிய சூழ்நிலை வந்தால் நம்முடைய போலீஸ் துறையே சென்றாலும் அடக்கமுடியாத சூழ்நிலை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, கண்மாய்கள், அதை ஏழு ஜில்லாக்களில் மட்டும் எடுத்திருக்கின்றார்கள். உண்மையிலேயே இந்த வறண்ட காலத்திலே, வறட்சியான சூழ்நிலையிலே நாம் அந்த 'லேபர்' அதாவது ஓரியண்டட் புரோகிராம் மூலமாக வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்களே, மழையின்மை காரணமாக, பஞ்ச நிலைமைகள் காரணத்தினாலே, வேலையில்லாமல் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அப்படி இருக்கக்கூடிய சூழ்நிலையிலே நாம் ஏழு ஜில்லாக்களில் மாத்திரம் 206 கண்மாய்கள் என்று நினைக்கிறேன், எடுத்திருக்கிறோம். அது இல்லாமல் எல்லா பகுதிகளிலே மாநிலம் முழுவதும், எல்லா ஜில்லாக்களிலேயும் இருக்கின்ற கண்மாய்களை எல்லாம் எடுத்து அவையெல்லாம் ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தி, வரத்து வாய்க்கால்களை சீர் செய்யக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கினால், பல பேர்களுக்கு, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். அது மாத்திரமில்லை. இங்கே 18,500 ஏக்கர் பாசனவசதி அதன் மூலமாக அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இதையும் கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வரவுசெலவுத் திட்டத்திலேகூட வரும் என்று நினைத்தேன். சிறுமலை அருவி 19.1 கோடி ரூபாய் என்று இங்கே வந்திருக்கிறது. அதே சமயத்தில் சொல்கிறேன். மழை பெய்கின்ற காலத்திலே, ரெயில் தண்டவாளங்கள் எல்லாம் உடைந்து பெரிய ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே அதற்கு பிரையாரிட்டி பேசிஸ் கொடுத்து, அந்த சிறுமலை அருவி திட்டத்தை நிறைவேற்ற எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1989 மார்ச் 30

அடுத்து, மின்சக்தி, மின்சக்தி உற்பத்தியிலே இப்போது கூடுதலாக தூத்துக்குடியிலே 420 மெகாவாட், சென்னையிலே 2050—மெகாவாட் உற்பத்தி செய்வோம் என்று இருக்கிறது. அப்படி உற்பத்தி செய்வதிலே நாம் விநியோகம் அதிகமாக மக்களுக்கு செய்யவேண்டும். பல்லாயிரக்கணக்கான பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கொடுக்க வேண்டும். மக்களுக்கு எல்லாம் மின் இணைப்பே இல்லாமல் இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும். இந்த சூழ்நிலையிலே தண்ணீர் இல்லாமல் பம்பு செட்டுகள் வைத்திருப்பவர்கள் அவற்றைக் கழற்றி வீட்டிலே வைத்திருக்கின்றார்கள். அதற்கும் சேர்த்து பணம் கட்டக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அதை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு அரிசன மக்களைப் பொறுத்தவரையில் 18 சதவிகிதம் வேலைவாய்ப்பு என்று இருக்கிறது. மொத்தப் பாப்புலேஷனிலே 18 சதவிகிதம். இன்றைக்கு 1987 ஜனத்தொகை அடிப்படையிலே 23 சதவிகிதம் இருக்கிறோம். அந்த ஜனத்தொகையிலே 18 சதவிகிதத்திற்குத்தான் வேலைவாய்ப்பு. அதை 20 சதவிகிதமாக, 18 சதவிகிதம் என்று இருப்பதை, சற்று உயர்த்திக் கொடுத்தால் தலைசிறந்ததாக இருக்கும்.

அதோடு, இங்கேகூட 45 ஆயிரம் வீடுகள் அரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள். அதற்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்தாலும் கூட ஏற்கெனவே மத்திய அரசு மூலமாக என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜீ.பி. திட்டங்கள் மூலமாக அதாவது மாநிலம் முழுவதுமாக ஆண்டு ஒன்றுக்கு 65 ஆயிரம் வீடுகள் என்று கொடுத்திருக்கின்றார்கள். அது தனியாக வருகிறதா? அது குறித்து எனக்கு சொல்லவேண்டும். அப்படி தனியாக வந்தால்தான் நல்லது. ஏனென்றால் மத்திய அரசு அதற்கு உதவித் தொகை கொடுக்கிறது. இது மாநில அரசு கொடுக்கக்கூடிய பணம் இல்லை. அந்தப் பணத்தில் தனியாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே அப்பார்ட்மெண்டிலே, அதாவது கிராமங்களிலே நிலம் எடுக்கிறோம், அந்த நிலத்தை எடுப்பதிலே மிக சிரமம் இருக்கிறது. அந்த இடத்தை எடுக்கும்போது சில பேர்கள் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். கோர்ட்டுக்கு சென்றுவிட்டால் அவர்களுக்கு அவுஸ் சைட்ஸ் கிடைக்க சிரமம் இருக்கிறது. முடியவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே அவர்களுக்கு டவுன்களிலே, அதாவது குடிசை மாற்று வாரியத்திலே கொடுக்கின்றார்கள் அல்லவா, அதுபோல அந்த அடிப்படையிலே அவர்களுக்கு, அப்பார்ட்மெண்ட், அதுதான் அடுக்குமாடி கட்டிடங்கள், அவைகளைக் கட்டிக் கொடுத்து அந்த ஏழை மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு மட்டுமல்ல, வறுமைக் கோட்டுக்கு கீழேயுள்ள விவசாயிகளுக்கு எல்லாம், ஏழையெளிய மக்களுக்கு எல்லாம், எந்த சாதியாக இருந்தாலும், சாதி, மத இன வேறுபாடுகள்



1989 மார்ச் 30] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இல்லாமல் அத்தனை ஏழை மக்களுக்கும் இந்த அப்பார்ட்மெண்ட் திட்டம் மூலமாக வீடுகள் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் கொடுக்கக்கூடிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டும். ஏற்கெனவே 1967லே கொடுத்ததுபோல இருக்கக்கூடாது. ஏற்கெனவே சொல்லியிருக்கிறீர்கள். அன்றைக்கு உடனே ஒருபடி, படிப்படியாக 3 படி கொடுப்போம் என்றும் இல்லாவிட்டால் முச்சந்தி என்று சொல்லி இருந்தீர்கள். அது நடைபெறவில்லை. அப்படி நடைபெறாமல் இந்த திட்டம் போய்விடக்கூடாதே என்ற கவலை எனக்கு இருக்கிறது. அப்படி இல்லாமல் இந்த திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

### 7. அறிவிப்புகள்.

#### (இ) பேரவை நடவடிக்கைகளைக் காண வருகை தந்துள்ள டாஸ்மேனியாப் பாராளுமன்றத் தலைவருக்கு வரவேற்பு.

Mr. SPEAKER : I am glad to inform the House that Mr. Tony Rundle Hon. Speaker of Tasmanian Parliament and Mrs. Rundle, are now witnessing the proceedings of the Legislative Assembly.

I, on my own behalf and on behalf of all Members of the Legislative Assembly wholeheartedly welcome them to the State of Tamilnadu. (Cheers)

(முற்பகல் 11-10)

*திரு. மா. பன்னீர்செல்வம் : தமிழனின் பெருமையை உயர்த்திப் பிடித்து தமிழின் இனிமையை பறைசாற்றுகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டிற்கு முதலமைச்சராய் வருதல் வேண்டும்'' என்கிற பாவேந்தர் பாரதிதாசன் விருப்பம் மட்டுமல்ல கோடிக் கணக்கான தமிழர்களின் விருப்பத்தை நிறைவேற்றி மீண்டும் தமிழக முதல்வராய் பொறுப்பேற்றிருக்கிற எங்களையெல்லாம் இயக்கிக்கொண்டிருக்கிற தமிழனத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களே, வணக்கம்.

''வன்கன் குடிகாத்தல் கற்றறிதல், ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு'' என்கிற வள்ளுவர் பெருந்தகையின் இலக்கணத்திற்கொப்ப அஞ்சாமையும், குடிப்பிறப்பும், முயற்சியும் கொண்டு தமிழகத்தை மீண்டும் பொற்காலமாக மாற்ற 1989—90 ஆம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கையை நாட்டிற்கு சமர்ப்பித்துள்ளீர்கள்.

இந்த நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்காக சீர்காழி தொகுதி சட்டமன்ற தொகுதியில் வாக்காளராக நிற்க என்னைத் தேர்ந்தெடுத்தமைக்கும், என்னை உறுப்பினராக தேர்ந்தெடுத்த சீர்காழி தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்வதுடன் நான் இங்கே பேசுவதற்கு வாய்ப்பளித்தன்மைக்கும் நான் இந்த அவையில் வருவதற்கு உறுதுணையாக இருந்தமைக்கும் தமிழ் இனத் தலைவர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட செயலாளரான வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே, குறிப்பாக பெண்கள் நலனில் அக்கறைக் கொண்டு அவர்களுக்கென்று வேலைவாய்ப்புத் துறைகளில் இட ஒதுக்கீட்டை கொண்டு வந்திருப்பது மறுமலர்ச்சியை உருவாக்கக்கூடிய ஒன்றாகும்.

''அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு'' என்று கேட்ட காலம் போய், வீட்டினில் பெண்களை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதன் மாய்ந்து விட்டார் என்ற நிலையாகி பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்று சொல்கிற அளவிற்கு மாற்றத்தை உருவாக்குவதற்கு தங்கள் ஆட்சி திட்டமிட்டிருக்கிறபோது அதை உணர்ந்து மனப்பூர்வமாக மகிழ்ச்சி அடைகிறேன்.

ஏழையெளியவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஆதிதிராவிடர்கள், ஆலைத் தொழிலாளர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், வணிகர்கள், இவர்கள்பால் ஆழ்ந்த கவனம் செலுத்தி மனிதாபிமானத்தோடும், மனித நயத்தோடும், தொலை நோக்கோடு ஆழ்ந்து சிந்தித்து புரட்சிகரமான, புத்துயிரை, புத்துணர்ச்சியை தரக்கூடிய, ஒரு நிதிநிலை அறிக்கையை நாட்டு மக்களுக்குத் தந்திருக்கிற தங்களை என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும் பாராட்டுகிறேன். நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி நன்றி சொல்கிற நேரத்தில் என்னைத் தேர்ந்தெடுத்து சட்டப் பேரவைக்கு அனுப்பியிருக்கிற என் தொகுதி மக்களின் பிரச்சினைகளை தேவைகளை, எதிர்பார்ப்புகளை இப்பேரவையில் நான் பிரதிபலிக்காவிட்டால் என் கடமையினின்று தவறியவனாவேன்.

சீர்காழி தொகுதி நூற்றுக்கு நூறு விவசாயத்தையே நம்பிக்கொண்டிருக்கிற மக்கள் வாழ்கின்ற பகுதியாகும். அங்கே தஞ்சை மாவட்டத்திலேயே பெரிய இரண்டு ஏரிகள் உள்ளன. ஒன்று பெருந்தோட்டம் ஏரி, மற்றொன்று திருவாலி ஏரி. இந்த இரண்டு ஏரிகளும் பல ஆண்டுகாலமாக





ஆழப்படுத்தப்படாமலும், தூர் எடுக்கப்படாமலும் போய் விட்டதனால் ஒரு வாரத்திற்குக் கூட பாசன நீரைத் தேக்கி வைத்து விவசாய நிலங்களுக்கு பாய்ச்சக் கூடிய நிலை இல்லை.

சற்றேறக்குறைய 200 ஏக்கர் பரப்பளவு உடைய அந்த இரு ஏரிகளையும் ஆழப்படுத்தி, கரைகளை உயர்த்தினால் காவிரி நீரையும், மழை நீரையும் பல மாதங்களுக்குத் தேக்கி வைத்து பல ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுக்கு நிரந்தரமாக பாசன நீரை வழங்கி விவசாயிகளைப் பாதுகாக்க முடியும்.

சீர்காழி கடைமடை பகுதி விவசாய நிலங்கள் மழைக் காலங்களில் கடற் பெருக்கினால் கடல்நீர் விவசாய நிலங்களுக்குள் புகுந்து பெருஞ்சேதத்தை ஆண்டுதோறும் ஏற்படுத்திக் கொண்டு வருகின்றது. எங்கெங்கே தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமோ அங்கெல்லாம் தடுப்புச் சுவர் கட்டி கடற் பெருக்கின் சீற்றத்தை தடுத்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க வேண்டுகிறேன். விவசாயம் பாதிக்கப்படாமல் மாற்றுத் தொழிலாக தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கபட வேண்டும்.

குடிநீர்ப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. பல இடங்களில் நிலத்தடி நீரும் உப்பு நீராகி விட்டது. ஏற்கெனவே போடப்பட்ட பல ஆழ் குழாய் கிணறுகளும் தண்ணீரின் தன்மை மாறியதனால் பயன் இல்லாமல் போய் விட்டது. எனவே, குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க நிரந்தரமாக குடித் தண்ணீர் கிடைத்திட—தொலை நோக்கோடு ஆழ்ந்து சிந்தித்து குடிநீர் மேல்நிலைத் தொட்டிகளைக்கட்டித் தர வேண்டுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் உள்ள உணர்வின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பே ''பூம்புகார் கலைக்கூடம்''. எழில்மிகு பூம்புகாரிலிருந்து சென்னைக்கு திருவெண்காடு, சீர்காழி வழியாக திருவள்ளுவர் பேருந்து ஒன்று விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

''சீர்காழி என்கிற இடத்தில் பெயரை உலகமே தெரிந்து கொள்கிற அளவிற்கு இசையில் மேன்மையுற்று, இசைத் துறைக்கே பெருமையை உருவாக்கி ''இசைமாமணி'' ''இசையமுதம்'', ''இசைக் கடல்'', ''இன்னிசை அரசு'' முதலான 42 சிறப்புப் பட்டங்களை பெற்ற திருமிகு சீர்காழி கோவிந்தராசன் அவர்களை மேன்மேலும் சிறப்பிக்கிற வகையில் சீர்காழியில் அவருடைய பெயரால் ''கலைக் கல்லூரியை'' உருவாக்கி அதில்இசைத் துறையையும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் அங்கே இசைப் பயிற்சி கற்று கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. மா. பன்னீர்செல்வம்] [1989 மார்ச் 30

எங்கள் தொகுதியில் ஒரு தீவு உள்ளது. மூன்று பக்கங்கள் ஆறுகளாலும், ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்டு, இயற்கை எழில் கொஞ்சும் பிச்சாவரம் காட்டிற்குப் பக்கத்திலுள்ள கொடியம் பாளையம் என்னும் கிராமம் எந்தவித சாலை வசதியும் இல்லாமல் துண்டிக்கப்பட்டு இருக்கின்றது. ஏறத்தாழ 2,500 மீனவர் மற்றும் விவசாய மக்களை உள்ளடக்கிய அக்கிராமத்தை பின் தங்கிய கிராமமாக அறிவித்து சாலை மற்றும் பாலம் அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். சீர்காழி தொகுதிக்கு வடக்கே உள்ள பழையார் துறைமுகமும், சீர்காழித் தொகுதிக்கு தெற்கேயுள்ள பூம்புகார் கலைக் கூடமும் கடற்கரையோர சாலை மூலம் நேரடியாக இணைக்கப்படுமேயானால் வர்த்தக ரீதியாகவும், சுற்றுலா ரீதியாகவும் மிகவும் பயனுடையதாக அமையும்.

கொள்ளிடம் கடைமடைப்பகுதியாக புதுப்பட்டினத்தில் கிட்டியணை வடிகால் உள்ளது. கடல் பெருக்கு சமயத்தில் கடல் நீர் கொள்ளிடம் ஆற்றிலிருந்து பெருகி, இவ்வடிகாலின் மூலம் உள் புகுந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களை வருடந்தோறும் பாழடித்து வருகிறது. இந்த வடிகாலின் குறுக்கே தடுப்பு அணை கட்டித் தர வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

சீர்காழிப் பகுதியில் இருக்கும் அரசு அலுவலகங்கள் தனித் தனியாக தனியார் இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் அரசு புதிதாக ஒரு கட்டிடத்தைக் கட்டி, அந்த இடத்திலே அந்த அலுவலகங்களை ஒன்றாக வைத்தால், மிகச் சிறப்பாக இருக்குமென்று நினைக்கிறேன் அங்கே பணி புரியும் அரசு அலுவலர்களுக்கு குடியிருக்க வீடுகள் இல்லாமல் இருப்பதால், வீட்டு வசதி வாரியத்தை ஏற்படுத்திக் வீடுகளைக் கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதியில் உள்ள அரசு அலுவலர்களுக்கு அது மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்குமென்பதால் இதைச் செய்ய வேண்டுமென்று அரசை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பகுதியில் உள்ள சீர்காழி மருத்துவ மனை, தாலுக்கா ஹெட் குவார்ட்டர்ஸ் மருத்துவமனை ஆகியவை 1976க்குப் பிறகு கவனிக்கப்படாமல் இருக்கின்றன. சீர்காழி மருத்துவ மனையைச் சுற்றி தடுப்புச் சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. பிரேத பரிசோதனைக் கூடம் மருத்துவ மனையில் நடுவில் இருப்பதால் மருத்துவ மனைக்கு வரும் நோயாளிகளுக்குப் பெரிதும் பாதிப்பாக உள்ளது. அதை ஒரு புறமாக மாற்றி அமைத்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்த மருத்துவ மனையிலே ஜெனரல் சர்ஜன், ஈ.என்.டி. சர்ஜன் உள்ளார்கள். அந்த இரண்டு அறுவைசிகிச்சை நிபுணர்களுக்கு உதவியாக மயக்குநர் (அநெஸ்தசிஸ்ட்) இல்லாமல் இருக்கிற காரணத்தால், உடனடியாக ஒரு அநெஸ்தசிஸ்ட் நியமிக்கப்பட வேண்டுமென்று நான் அன்புடன் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 30] [திரு. மா. பன்னீர்செல்வம்]

என்னுடைய பகுதியில் உள்ள மருத்துவ மனைகளில் மின்சார விசிறிகள், மின் விளக்குகள் இல்லாமல் இருக்கிறது. படுகைகளும் மோசமாக இருக்கின்றன. அவைகளை எல்லாம் பார்த்து, நல்ல படுக்கைகளையும், மின் வசதிகளையும் செய்து தந்து, அந்த மருத்துவ மனையை நவீனப்படுத்த வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சீர்காழித் தொகுதியிலுள்ள நெடுஞ்சாலைகள், ஒன்றியச் சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளன. அதைச் சீர் செய்து கொடுக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறேன். கொள்ளிடம் கரையை ஒட்டி இருக்கக் கூடிய அளக்குடி, முதலைமேடு கிராமங்கள் வெள்ளக் காலங்களில் கரைகள் உடைப்பெடுத்து விடுகிறது. அப்படி வெள்ளச் சேதம் ஏற்பட்ட காலத்தில் நமது தானைத் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்தது குறிப்பிடத் தக்கது. அந்தப் பகுதியின் கரைகளுக்கு தடுப்புச் சுவர் கட்டி, கரையை உயர்த்தித்தர பனிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலுள்ள அரசினர் உயர்நிலை பள்ளிகளுக்கு, புதுப்பட்டினம், கொண்டல், வைத்திஸ்வரன் கோயில் போன்ற பகுதிகளில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் எந்தவிதமான லேபரட்டரி வசதிகளும் இல்லை. மேலும் சுற்றுச் சுவர்கள், லேபரட்டரி வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே இந்த வசதிகளை எல்லாம் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொண்டு, கொடுத்த வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–20)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற ஒரு வாய்ப்பைப் பெற்றமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காருக்கு பிரேக் எப்படியோ, மாட்டுக்கு மூக்கணாங் கயிறு எப்படியோ, அதுபோன்று ஜனநாயகத்தின் எதிர்க்கட்சியினுடைய பங்கு முக்கியமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில், இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு கருத்துக்களை எடுத்து வைக்கிற ஒரு வாய்ப்பினை அளித்த என்னுடைய தொகுதியைச் சார்ந்த மக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அதனுடைய செயல்பாடுகளை வருகிற ஆண்டுகளில்தான் நிர்ணயிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வறுமையில் உழலும் பெண்களுக்கு — அவர்களுடைய திருமணத்திற்காக ரூ. 5,000 வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்

காக மொத்தம் ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி பார்த்தால் ஆண்டொன்றுக்கு 12.000 பெண்களுக்குத்தான் அந்தச் சலுகையை வழங்க முடியும். ஆனால் நம் நாட்டை எடுத்துக் கொண்டால்—தமிழகத்தைக் பொறுத்த வரை ஆண்டொன்றுக்கு ஏழைக் குடும்பங்களைச் சாந்தவர்களின் ஒரு லட்சம் பேர் திருமணம் செய்து கொண்டு வருகிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் சொல்லுகின்றன. அந்த நிலைமையில் 12,000 பேருக்கு மட்டும்தான் இந்த வசதி என்று சொன்னால் மீதமுள்ள 88,000 பெண்களுக்கு என்ன வசதி செய்யப்பட்டிருக்கிறது என்பது எதுவும் இதிலே குறிப்பிடப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே, ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ஒரு சிறிய அளவில் அவர்களுக்கு ஊதியம் என்கிற வகையில் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மாதத்திற்கு அவர்களுக்கு ரூ. 200 தான் வழங்கப்படும் என்றும் அப்படி 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 200 ரூபாய் மாதத்திற்கு ஊதியம் என்று சொன்னால் அதை வைத்துக் கொண்டு ஒருவர் எப்படி குடும்பத்தை நடத்த முடியும்? அது ஒரு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம் என்று எப்படி எடுத்துக் கொள்ள முடியும் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

அரசாங்கமே சொல்லுகிறது— ஆண்டொன்றுக்கு ரூபாய் 4,800 க்கு குறைவாக யார் யாருக்கு வருவாய் வருகிறதோ அப்படிப்பட்ட குடும்பங்கள் எல்லாம் ஏழைக் குடும்பங்கள் என்று சொல்லுகிறது. அப்படிப்பட்ட நிலையில் மாதத்திற்கு ரூ. 200 மட்டுமே ஊதியம் என்று சொன்னால் ஆண்டொன்றுக்கு ரூ. 2,400 தான் வருமானமாக வருகிறது. அப்படிப்பட்ட நிலைமையில் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம் என்பது வெறும் 'காற்றாகத்தான்' இருக்கும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்குத் தலையாய பிரச்சினையாக விளங்குவது காவிரிப் பிரச்சினை. காவிரி நீர்ப் பிரச்சினைதான் தமிழக மக்களுக்குக் கவலை தரும் பிரச்சினையாக இருந்து வருகிறது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்னாலே பேசியதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. "காவிரிப் நீர்ப் பிரச்சினையைக் குறித்து, சட்டமன்றம் கூடுவதற்கு முன்னாலேயே கருநாடக மாநிலத்தைச் சார்ந்த முதலமைச்சரோடு பேசி தீர்ப்பதற்கு வழிவகை செய்வேன்" என்று அப்போது சொல்லி இருக்கிறார். ஆனால் அப்படிப்



பேசப்பட்டதா என்றால், இதுவரை பேசப்படவில்லை. என்றே நாங்கள் அறிகிறோம். அந்தப் பிரச்சினையின் முனைப்பு காட்டி விரைவில் முடிக்கிற அளவுக்கு அவர் காரியமாற்ற வேண்டும்என்று இந்த மன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் பழைய கூட்டுறவு கடன்களைத் தள்ளுபடி செய்வோம் என்று தேர்தலுக்கு முன்னாலே வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் அதுபற்றிய அறிவிப்பைப் பார்க்கிறபோது, குறுகியகால கடன்கள், தவணை தவறிய கடன்கள் ஆகியவை மற்றுமே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. மற்ற கடன்களைப் பொறுத்தவரையில் வட்டி மட்டும்தான் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் இந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்கிற நிகழ்ச்சி என்பது மேலும் மேலும் தொடருகிற அளவுக்கு—அடுத்த ஆண்டும் தொடருகிற அளவுக்கு இருக்கும் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. அப்படி இல்லாமல் அவைகளையெல்லாம் இதோடு முடித்துவிட வேண்டும். ஏனென்றால் தேர்தலில் நாங்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் இதோடு முடித்துக் கொள்ளப் போகிறீர்களா அல்லது தொடரப் போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது சத்துணவு மையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படுபவர்கள் என்று. ஆனால் அவர்கள் இன்றைக்கு பகுதிநேர ஊழியர்களாகத்தான் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக அரசு ஊழியர்களாக ஆக்கப்படவில்லை....................

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் அரசு ஊழியர்களாக ஆக்குவது—அந்த முறையில் நிரந்தரம் செய்வது என்பதில்லை. அவர்கள் எந்தப் பணியாற்றுகிறார்களோ, அந்தப் பணியில் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்றுதான் சொல்லப்பட்டது. அந்த வகையிலேதான் உறுதி வழங்கப்பட்டது. அதையேதான் நிதிநிலை அறிக்கையிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எஸ்.டி. உகம்சந்த்: தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அறிவிக்கப்பட்ட தேர்தல் அறிவிப்பிலே சத்துணவு கூட ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் பகுதிநேர ஊழியர்கள் என்று சொல்லப்படவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, ஏற்கெனவே அவர்கள் பகுதிநேர ஊழியர்களாகத்தான் இருக்கிறார்கள் அவர்களின் அந்த ஊழியமும் நிரந்தரமாகவில்லை; இப்போது அந்த ஊழியம் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவரவர்களே, அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி, அதே நேரத்தில் அவர்களுடைய கோரிக்கைகளாக இருக்கின்ற "தங்களை நிரந்தர அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்பதை" அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் இன்றைக்கு கட்டிடத் தொழிலாளர்களுக்கு விபத்து நேர்ந்துவிட்டால் அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமென்று தேர்தல் வாக்குறுதியாக சொல்லப்பட்டிருக்கிறது அதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படவில்லை.

அதோடு மட்டுமல்லாமல் நகரங்களுக்கும், அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்துதரப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு நிதிநிலை அறிக்கையை பார்க்கின்ற நேரத்தில் அது இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுகளில் முடிந்தால் பரவாயில்லை; ஆனால் 5 ஆண்டுகளுக்குள்ளாவது முடிக்கின்ற அளவுக்கு பணிகள் செய்யப்பட்டால் ஏற்றுக்கொள்ளமுடியும்.

வறட்சியானது இன்றைக்கு தமிழகத்தில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் 5 ஆயிரம் கைப் பம்புகள், போர்கள் போடுவதற்கு அரசாங்கம் உத்திரவு வழங்கியிருக்கிறது என்ற குறிப்புகளை நாங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் வறட்சி நிவாரணத்திற்கு வேண்டிய பணிகளை செய்திருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்கும்போது அதற்கு எந்த விதமான முனைப்பும் செய்யப்படவில்லை என்றுதான் நாங்கள் சொல்லவேண்டும். அதற்குமுன்பெல்லாம், வறட்சி என்று வரும்போது தமிழகத்தில் அரசாங்கம் ஜனவரி, பிப்ரவரி மாதத்திலேயே அதற்கு உத்திரவு வழங்கி, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி, எங்கெல்லாம் வறட்சி இருக்கிறது என்று விவாதித்து, பொது மக்களுடைய கருத்துக்களையெல்லாம் கேட்டு நடவடிக்கை எடுத்ததை நாங்கள் பார்க்கின்றோம். ஆனால் இந்த மாதம் 19-ம் தேதி வறட்சி நிவாரணம்பற்றி விவாதிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கூட்டம் கூட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் என்னவோ தெரியவில்லை. அது இன்றைக்கு நிறுத்தப்பட்டு மீண்டும் ஏப்ரல் 15ம் தேதி றட்டுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இந்த காலதாமதம்? ன்எட்சியில் சடுமையானது அரசிடைய காதுக்கு எட்டவில்லையா? ன்வறுதான் இன்றைக்கு மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்சன் கூஎபதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



மீனவர்களுக்கு இலவசமாக வீடுகள் வழங்கப்படுமென்று தேர்தல் வாக்குறுதியிலே சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இதுவரை அதற்கு வேண்டிய அறிவிப்புகள் எதுவும் வரவில்லை. அட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கான வழிவகைகள் இதுவரை செய்யப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புக்களைப் பொறுத்த வரையில், முன்பு சொல்லப்பட்டதெல்லாம் உள்ளாட்சி அமைப்புக்களுக்கு அதிகமான அளவில் நாங்கள் அதிகாரங்கள் வழங்க இருக்கிறோம், அதனுடைய நிதி ஆதாரங்களையெல்லாம் பெருக்குவதற்கு வழிவகைகள் செய்வோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது ஆனால் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஏற்கனவே இருந்த ஒரு அதிகாரத்தை உள்ளாட்சி நிறுவனங்களிமிடருந்து பறிக்கின்ற அளவுக்கு அதைப் பரிசீலனை செய்கிறோம் என்ற முறையிலே அரசாங்கம் அறிவிப்பு செய்திருக்கிறது. உள்ளாட்சி நிறுவனங்கள் அதற்குமுன்பெல்லாம் அவைகளினுடைய பணி, தொழில்கள், வாணிபங்கள், பொன் தொழில்கள் மற்றும் வேலை வாய்ப்பு மீதான வரிகளை அவைகளே விதித்துக்கொண்டு வந்தன. அதை மறுபரிசீலனை செய்து அரசாங்கம் வசூல் செய்து, செலவு போக மீதியை வழங்க இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். முதலில் அரசாங்கம் சொல்லலாம், நாங்கள் வசூல் செய்து எங்களுடைய செலவு போக வழங்குகிறோம் என்று சொல்வார்கள். காலப்போக்கில் அதிலே ஒரு பகுதிதான் அந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் போய் சேருமேயொழிய அதிலே பெரும் பகுதியானது அரசாங்கத்தின் நிதிக்கு வந்துவிடும். உள்ளாட்சி நிறுவனங்களின் உரிமையானது பறிக்கப்படும் அளவுக்கு இந்த நிகழ்ச்சிகள் அமையுமென்று சொல்கிறேன். ஏனென்று சொன்னால், முன்பு கேளிக்கை வரியிலே பெரும்பகுதியானது உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை இருந்தாலும், அதிலே பெரும் பகுதியாவது அரசுக்குத்தான் சென்று கொண்டிருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் இன்றைக்கு சொல்லப்பட்டிருக்கிற ஸ்டாம்ப் டியூட்டி அவைகளையும் உள்ளாட்சி மன்றங்கள் வசூலிப்பதில்லை. அவைகளை அரசாங்கம் வசூல் செய்து வெறும் 5 சதவீதமோ 10 சதவிதமோ தான் உள்ளாட்சி நிறுவனங்களுக்குப் போகிறது. மீதி 90 அல்லது 95 சதவிதம் அரசாங்கமே எடுத்துக்கொள்கிறது. இப்படி உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிதிகள் காலப்போக்கிலே அரசாங்கம்தன்னுடையநிதிக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டு உள்ளாட்சி நிறுவனங்கள் மேலும்நலிவடைகின்ற ஒரு காலம் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக் கொண்டு, நீங்கள் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகமான நிதியை வழங்க இருக்கிறோம் என்று சொல்வீர்கள். அது இல்லை என்ற நிலைமை தான் ஏற்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு சமமாக சம்பளம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் அதற்கு முன்பெல்லாம் 8 முறை அகவிலைப்படியே அன்றைக்கு நடைபெற்ற தி.மு.க. ஆட்சிக் காலத்திலே கொடுக்காத காரணத்தாலே தான் இந்த வேற்றுமைகள் வந்திருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் களைகின்ற அளவுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதோடு இதற்கான நிதிவசதி செய்யப்படவில்லை என்பதையும் நான் பார்க்கின்றேன். நீங்கள் மே மாதத்தில் அந்தப் பணத்தைக் கொடுப்பதாக இருந்தால் பல கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு தேவை. அதற்கு என்ன வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதுபற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.30)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய பேச்சில் குறுக்கிடுவது என்னுடைய நோக்கம் அல்ல. ஏற்கனவே இருந்த அரசு, நிர்வாகம் நடத்திய அரசு பொறுப்பிலே இருந்தவர்கள் சிறிதும் நிதி மிச்சமில்லாமல் செய்துவிட்டுப் போய்விட்ட காரணத்தால் இப்பொழுது தாமதம் ஆகிறது.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** நான் காலதாமதத்தைச் சொல்லவில்லை. நான் சொன்னதெல்லாம் இன்றைக்கு நீங்கள் அறிவிப்புகளைச் சொல்லியிருக்கிறீர்கள். மே மாதத்திலே அந்த அறிவிப்பின்படி, 1988 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதற்கொண்டு வழங்குவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். இதற்கு நிதி வசதிகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன். ஏற்கனவே இருந்த அரசுகள் செலவு செய்திருக்கின்றன என்று சொன்னால் செலவுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், பணம் இல்லை என்று சொன்னால் அது விரயமாக்கப்படவில்லை என்ற வகையிலே அவைகள் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தால் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலே இருக்கலாம். ஆனால் அதை விட்டுவிட்டு நம்முடைய ஜனாதிபதி ஆட்சியின் காலத்திலே மீதி வைக்கவில்லை என்ற முறையிலே குற்றச்சாட்டுகள் இருந்தாலும், அந்தக்





குற்றச்சாட்டுகளுக்கு வேண்டிய நிவாரணங்களைப் பெறுகின்ற அளவிற்குக் காரியங்களை ஆற்றி, இந்த ஒரு அறிவிப்பினை நீங்கள் செய்திருக்கிறீர்கள், நிதி ஆண்டிலே அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சென்ற கூட்டத் தொடரிலே ஒரு உறுதியைச் சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் நடைபெறுகின்ற கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்கின்ற அளவிற்கு நாங்கள் வாய்ப்பினைத் தருவோம், அவர்களுக்கு உரிய மரியாதையைத் தருகின்ற அளவிற்கு நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். நான் அன்றைக்குக்கூடச் சொன்னேன் ; நீங்கள் அந்த உத்தரவைப் போடாதீர்கள் ; சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று விதியையே அமைத்து விடுங்கள் என்று. ஏனென்று சொன்னால், மரியாதை இல்லை என்று சொன்னால் எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் உள்ளே செல்ல முடியாது. நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர்கூட ஒருசில தினங்களுக்கு முன்பு, பத்திரிகையிலே சொல்லியிருக்கின்றார்கள், நகரத்தினுடைய, மாதவரம், மணலி போன்ற நகரங்களினுடைய கூட்டங்களிலே கலந்து கொள்ள முடியவில்லை என்ற அவருடைய ஆதங்கத்தைக்கூடச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அருமைச் சகோதரர், புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மருங்காபுரி சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களும் ஊராட்சி ஒன்றியக் கூட்டத்திலே கலந்து கொள்ளச் செல்லுகின்ற நேரத்திலே அவர்களுக்குச் சொல்லப்பட்டது, நீங்கள். பார்வையாளர்தான் ; கோடியிலே ஒரு மூலையிலே உட்காருங்கள், கீழே, எல்லா ஊராட்சி மன்றங்களினுடைய தலைவர்களுக்குக் கீழே கடைசியிலே, கோடியில்தான் நீங்கள் உட்கார வேண்டும் ; நீங்கள் எதுவும் பேசக்கூடாது என்று சொன்னால் முதலமைச்சருடைய அறிவிப்பை, அவருடைய உத்தரவை அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே ஏற்றுக் கொள்ளவில்லையா என்பதைத்தான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், சமீபத்திலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் 27ஆம் தேதி என்னுடைய தொகுதியைச் சேர்ந்த லத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலே ஊராட்சி ஒன்றியத்தினுடைய கூட்டமானது கூட்டப்பட்டிருக்கிறது ; அந்தக் கூட்டத்திற்கு எனக்குக்கூட அழைப்பு வழங்கப்படவில்லை. அந்தக் கூட்டத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினருக்கு அழைப்பு இருக்கிறது ; மற்றவர்களுக்கும

அழைப்பு இருக்கிறது. ஆனால் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு அழைப்பு வரவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஆதிதிராவிட மக்கள் பல்வேறு புறம்போக்கு நிலங்களில் பல ஆண்டுகளாக வீடுகளைக் கட்டி வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். அப்படிப் பட்ட அந்த வீடுகளுக்கெல்லாம் பட்டா வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். யாரெலலாம் பத்தாண்டுகளுக்கு முன்பு, இருபதாண்டுகளுக்கு முன்பு மேய்க்கால் புறம்போக்கு நிலமாக இருந்தாலும் சரி அல்லது குட்டை புறம்போக்கு நிலத்திலே அவர்கள் இருந்தாலும், அதையெல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து அங்கே குடியிருப்பதன் காரணமாக இந்தக் குட்டைப் புறம்போக்கில் எந்த ஆபத்தும் இல்லை என்று சொன்னால் அவர்களுக்கு பட்டா வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு உள்ள நிலைமை, யெல்லாம் செங்கல்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரை வைத்திருக்கிறீர்கள். ஆனால் இதன் மூலமாகத் திண்டுக்கல் மாவட்டத்திற்கு அதனுடைய பெயரை மாற்றியிருக்கிறீர்கள். இதிலே கவுரவத்தைப் பார்க்காமல், இருக்கின்ற நிலைமை களை உணர்ந்து கொண்டு—ஏனென்று சொன்னால் மக்கள் ஒரு பழக்கத்திற்கு வந்துவிட்ட நிலைமையிலே, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்கனவே இருக்கின்ற பெயர்களை வைக்கின்ற அளவிற்கும், இன்றைக்குச் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு நாங்கள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சரவர்களிடம் அந்தக் கோரிக்கையானது வற்புறுத்தப்பட்டிருக்கிறது. ஏற்கனவே எங்களுடைய டி.டி.சி.யிலே அதற்காகத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையிலே அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், வடார்க்காடு மாவட்டம் இன்றைக்கு இரண்டாக. . . . ]





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவரவர்களே, பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே செங்கை மாவட்டத்தினு டைய மாவட்ட வளர்ச்சிக் குழுவிலேயே அறிஞர் அண்ணா அவர் களுடைய பெயர் அந்த மாவட்டத்திற்கு வைக்கப்பட வேண்டு மென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அது என்ன காரணத்தினாலோ இடைக்காலத்தில் மறக்கப்பட் டிருந்தது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில்தான் இப்போது செங்கை மாவட்டத்திற்கு அறிஞர் அண்ணா அவர்கள் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அது மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட இப்போது இருந்தால் மகிழ்ச்சி அடையக் கூடிய, அவர் போற்றுகின்ற அண்ணா அவர்களுடைய பெயர் தான். எனவே, அதற்கு மாறாக இன்னொரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் சொல்வது ஒரு வேளை எம். ஜி. ஆர். அவர்களுக்கே கூட குறை ஏற்படுத்துவதாக ஆகிவிடும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரை மாண்புமிகு புரட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் திண்டுக்கல்லை தலைநகராகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு சூட்டினார்கள். அண்ணா அவர்களுடைய பெயர் இருக்கவேண்டும் ; அவர் தமிழகம் முழு வதிற்கும் சொந்தமானவர் ; ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல என்ற முறையில்தான் அவரின் பெயர் இருக்க வேண்டும் என்று போக்குவரத்து கழகத்திற்கும், மாவட் டததிற்கும் அண்ணா அவர்களின் பெயரை புரட்சித் தலைவர் சூட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல வடாற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அவைகளை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கேரளா மாநிலத்தில் மேற்கு நோக்கிபாய்ந்து வீணாக கடலில் கலக்கிற நதி நீரை தமிழகத்திற்கு திருப்பிட வேண்டுமென்ற முறையில் ஏற்கெனவே முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் மத்திய அரசிற்கு கடிதங்கள் எழுதி வற்புறுத்தியிருக்கிறார்கள். அதை நீங்கள் வற்புறுத்திப் பெற வேண்டும். அபபடி பெற்றால்தான் தென் மாவட்டங்களில் இருக்கிற குடிநீர் பிரச்சினை தீரும் என்று தெரிவித்துக் கொள் கிறேன். (மணியடிக்கப் பெற்றது) இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் பேசுகிற போது ஒன்றைச் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் வழங்குகிறீர்கள், அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதனை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவீதம் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். முன்பு மிகவும் பிற்பட்டுத்தப்பட்டவர்கள் என்று சொன்னால் 39 ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் அதிலே சேர்க்கப்பட்டிருந்தார்கள். இன்றைக்கு அது 107-ஆக மாற்றப்பட்டு அவர்களுக்கு 20 சதவீதம் என்று நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். அதன காரணமாக வெளியே மனகசப்பு இருக்கிறது. அதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த அரசாங்கங்கள் எந்தப் பட்டியலை மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியல் என்று ஏற்றுக் கொண்டிருந்தனவோ, எந்தப் பட்டியல் இடம் பெற்றிருந்ததோ அந்தப் பட்டியலை ஒரு சிறிதும் இந்த அரசு மாற்றவில்லை. இருந்த பட்டியலின்படி காணப்படும் மக்கள் தொகை கணக்கின் அடிப்படையில் எந்த அளவிற்கு வழங்க முடியுமோ அது வழங்கப்பட்டிருக்கிறது. பட்டியலில் எந்த ஒரு பெயரும், எந்த ஒரு ஜாதியும், எந்த ஒரு பட்டியலிருந்தும், வேறு எந்த ஒரு பட்டியலுக்கும் மாற்றப்படவில்லை என்பதைத் திட்டவட்டமாக நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் ;** பேராசிரியர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குள்ள நிலை என்னவென்றால் பின்னால் அந்த 69 ஜாதிகள் சேர்க்கப்பட்டு 107 ஜாதிகளாக மிகவும் பிற்படுத்தப்பட்ட ஜாதிகள் இருக்கின்றன. மக்கள் தொகை அடிப்படையில் அவைகள் சரியாக இல்லை, அவர்களுக்கு போதிய சதவீதம் கொடுக்கப்படவில்லையென்ற குறைபாடு இருக்கிறது. அதைப் பேசி தீர்க்க வேண்டும். ஏனென்றால் நாட்டிலே ஒரு கசப்பான, குழப்பமான நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டியது என்னுடைய கடமையென்ற முறையில் இதை நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** ஒரு சிறு விளக்கம். இப்படி செய்யப்பட்ட இந்த ஏற்பாட்டை அந்தச் சமூக சங்கத்தைச் சேர்ந்த சில பெருமக்கள் வரவேற்று இருக்கிறார்கள், குறிப்பாக அரசியல் சாராத, பொது நோக்குடைய, இந்தத் துறையில் ஏற்கெனவே பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேற்றத்துக்கும் பல வழி வகைகளைத் தேடித் தருவதற்கு முன்வந்த திரு சட்டநாதன் அவர்கள், திரு. அம்பாசங்கர் அவர்கள், அதைப்





போல அந்த சமுதாயத்தைச் சேர்ந்த திரு. வன்னிய அடிகளார், இப்படி பலபேர். இது இப்போது செய்யக்கூடிய ஒரு நல்ல காரியமாகத்தான் தோன்றுகிறது. நடைமுறையில் வேறு என்ன செய்ய வேண்டுமென்பனத எதிர் காலத்தில் பரீட்சார்த்தமாக இதை நடைமுறைப்படுத்திப் பார்த்து, அதற்குப் பின்னர்தான் ஆலோசிக்க வேண்டும். இப்போது இந்தத் திட்டத்தை வரவேற்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், எனவே நல்ல எண்ணமும் உருவாகி இருக்கிறது. தீய எண்ணமும் உருவாக்கப்படுகிறது.

(முற்பகல் 11–40)

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** இரண்டு கருத்துக்களும் உள்ளது என்பதை அரசு கவனத்தில் கொண்டிருக்கிறது என்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு உள்ள நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரும்பாக்கம் என்ற ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் அவர்கள் சமீபகாலத்திலே, அவர்கள் ஊராட்சி மன்றத்திலே தன்னுடைய பணிகளைச் செய்கின்ற நேரத்திலே தாக்கப்பட்டார்கள். அப்படி தாக்கப்பட்டதற்குக் காரணம், அவர்கள் வன்னிய சங்கத்தைச் சேர்ந்த ஒரு தலைவர் என்ற முறையில் அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே 100க்கும் மேற்பட்டவர்கள் (மணி அடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. பெ. சீனிவாசன்) :** நீங்கள் பேச ஆரம்பித்து 21 நிமிடங்கள் ஆகிவிட்டன. சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். டி. உகம்சந்த் :** அந்த முறையிலே அவர்கள் வன்னிய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தினால் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு மருத்துவமனையில் பொதுமக்களால் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். புகாரும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இரவே அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். 2 தினங்களுக்குப் பிறகு அவர்கள் மாவட்ட காவல்துறை அதிகாரியைச் சந்தித்து வேறு புகாரைக் கொடுத்து, என்னை ஜாதியின் பெயரால் தாக்கினார்கள் என்று சொல்லி, புகார் சொல்லியும், அதன் மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். 100-க்கு மேற்பட்ட அரசு ஊழியர்களும், பொது மக்களும் சேர்ந்து அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவரை மருத்துவ மனையில் சேர்த்தார்கள். புகாரும் கொடுக்கப்பட்டது. அதன் மீது நடவடிக்கை இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. எஸ். டி. உகம்சந்த்] [1989 மார்ச் 30

இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையாக இருப்பது ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளர்கள் பிரச்சினை, அதிக அளவில் இருந்து கொண்டு வருகிறது. சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். கதவடைப்பு சட்டவிரோதமாக செய்யப்பட்டு இருக்கிறது. அரசாங்கம் இது சட்ட விரோதக் கதவடைப்பு என்று இதுவரையில் அறிவிப்புச் செய்யவில்லை.

இந்த அரசாங்கம் பதவியேற்றவுடன் ஒரு பத்திரிகையிலே நான் பார்த்தேன். அந்தப் பத்திரிகையிலே ஒரு செய்தியாக சொல்லப்பட்டு இருந்தது. ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் கம்பெனியில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுடைய பிரச்சினையை இந்த அரசாங்கம் முடித்திருக்கிறது. அந்த முறையிலே அங்கே வேலையில் இருக்கின்ற அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளித்து, அவர்களை மீண்டும் வேலையில் சேர்க்கின்ற அளவிற்கு, அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படாத அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று அந்த அறிவிப்பில் செய்தி வந்திருந்தது. ஆனால் நடந்தது என்ன என்று சொன்னால், அந்த அறிவிப்பு வந்த 4, 5 தினங்களுக்குப் பிறகு அந்த கம்பெனி மூடப்பட்டு, இன்றைக்கு மூன்று ஆயிரம் பேர்கள் வீதியிலே நிற்கின்ற அளவிற்கு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தினம் தினம் மறியல் செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களில் இன்றைக்குப் பலர் கைது செய்யப்பட்டு இருந்தாலும், அவர்களுடைய பிரச்சினை இன்னும் ஒரு சில தினங்களில் முடிக்கப்படவில்லை என்றால், அவர்களில் பலர் வேலைவாய்ப்பை இழக்கின்ற அளவிற்கு நிலைமைகள் ஏற்படும். நிரந்தரமான வகையில், அவர்கள் வேலையை இழக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. எனவே இதையெல்லாம் கவனத்திலேகொண்டு, நீங்கள் காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மதுராந்தகம் தொகுதியில் 200-க்கும் மேற்பட்ட ஏரிகளை ஆழப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பழையனூர் ஏரியினுடைய வரத்துக் கால்வாய் தூர்ந்துவிட்டது. இந்த வாய்க்கால் சீர் செய்யப்பட்டால்தான் 1,500 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைக்கும். அதையும் நீங்கள் செய்து தரவேண்டும்.

செய்யூர் வட்டம் புதியதாக ஆரம்பிக்கப்பட்டு இருக்கிறது. அங்கே ஆதிதிராவிட நல வட்ட ஆட்சியர் அலுவலகம் இல்லை. அதையும் நீங்கள் உடனடியாக துவக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1989 மார்ச் 30] [திரு. எஸ். டி. உகம்சந்த்]

மதுராந்தகம் நகரத்திலே ஒரு தொழில் கூடத்தை அமைத்து வேலைவாய்ப்பை அதிகப்படுத்துகின்ற அளவிற்கு நீங்கள் காரியங்களைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே காகித ஆலை ஒன்றைத் துவக்க வேண்டும் என்று ஏற்கனவே இருந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதையும் நீங்கள் முடித்துத் தரவேண்டும்.

குன்னம்குளத்தூர் என்ற கிராமத்திலே இருக்கின்ற பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற வேண்டும் என்று சொல்லி அரசுக்குச் செலுத்தவேண்டிய நிதியை அங்குள்ளவர்கள் டெபாசிட் செய்திருக்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்து நீங்கள் முடித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பாலாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவர 3 கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆய்வில் இருக்கிறது. அவைகளை பரிசீலனை செய்து உடனடியாக முடித்துத்தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் நான் பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், இன்றைக்கு உள்ள நிலைமையிலே அரசாங்கத்தினுடைய வரவு-செலவுத் திட்டத்தை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞர் அவர்கள் முன்பு ஒரு திரைப்படம் எடுத்தார்கள். பாலைவன ரோஜாக்கள் என்ற திரைப்படத்தில் கூட அவர்கள் சொன்னார்கள். அமைச்சர்கள் எல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில், ஒரு மாவட்ட பெண் கலெக்டர் அவர்களுக்கு ஏற்பட்ட துயரத்தை எல்லாம் சொன்னார்கள் (குறுக்கீடுகள்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்) : எவ்வளவு நேரம் கொடுக்க வேண்டும் என்பது பேரவைத் தலைவருடைய அதிகாரத்திற்கு உட்பட்டது. நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : அந்த பெண் கலெக்டருக்கு நேர்ந்திருக்கின்ற அந்தக் கொடுமைகளை எல்லாம் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். அந்தக் கதைகள் எல்லாம் இன்றைக்குத் தொடர்கின்றன என்ற முறையிலே பல்வேறு சம்பவங்கள் பற்றிய செய்திகள் பத்திரிகையிலே வருகின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருக்கின்ற அளவிற்கு நீங்கள் ஆட்சியை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய சென்னையைச் சேர்ந்த சூளைமேட்டு பகுதியில் ஒரு பெண்ணானவள் மானபங்கப்படுத்தப்பட்ட செய்தியானது, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிறது. அவைகளை எல்லாம் நீங்கள் உரிய முறையிலே பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சீனிவாசன்): மாண்புமிகு உறுப்பினர் அவருடைய கட்சியைச் சேர்ந்த இன்னொரு உறுப்பினரின் நேரத்தை எடுத்துக்கொண்டு பேசிக் கொண்டிருக்கிறார். அதே மாதிரி நீங்களும் பேசலாம். உங்களுடைய கட்சி கொறடா சம்மதித்தால் நீங்களும் அவ்வாறு பேசலாம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக கட்சியிலே உறுப்பினர்கள் ஏராளமாக இருக்கிற காரணத்தால் பேசும் வாய்ப்பும் நேரமும் குறைவாகத்தான் இருக்கும். எதிர்க்கட்சியிலே உறுப்பினர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தாலும் மேலும் அவர்களே ஒருவர் நேரத்தை ஒருவர் எடுத்துக்கொண்டு பேசுவார்களேயானால், அது அவர்கள் கட்சியினுடைய உரிமை என்று தான் கருதப்படும். நமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகள் உள்ள அளவுக்கு முழு நேரத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. ஜி. ஜி. குருமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணை சபாநாயகர் அவர்களே, இன்று இந்தச் சபையில் விவாதத்தில் இருக்கக்கூடிய 1989–90ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே விவசாயிகள் நிவாரணம் என்ற தலைப்பின்கீழ் சிறு விவசாயிகளுக்கான கடன் வஜா செய்யப்பட்டிருப்பது பற்றி நான் வரவேற்கிறேன். ஆனால் அதே சந்தர்ப்பத்திலே மற்ற விவசாயிகளுக்கும் இந்த நிவாரணம் கொடுக்கப்படவில்லை என்று சொன்னாலும், இந்த கடன்களை தவணைமுறையிலே கொடுப்பதற்கான வகையில், முயற்சிகளை மேற்கொண்டு அவர்களுக்கு உதவ வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் விவசாயிகளுக்கான இன்னொரு நிவாரணமான 5 எச்.பி. மோட்டார் பம்ப்செட்டுகளுக்கான விற்பனை வரியை குறைத்திருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதையும் நான் வரவேற்கிறேன். ஆனால் விவசாயிகளுடைய அடிப்படைப் பிரச்சினைகள் இதனால் தீர்க்கப்படவில்லை என்பதைப்பற்றி நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் குறிப்பாக விவசாயிகளுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை நிச்சயமாக கிடைக்கப்பட வேண்டும். இன்று அது போன்ற நிலைமை இல்லை. அதுவும் குறிப்பாக விவசாயக் காரியங்களுக்கான பயிர் இடுபொருள்களுடைய விலை அதிகமாக ஏறிவருகிறது. ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், விவசாய கருவிகள் மற்ற விலைகள் அதிகமாக உயர்ந்து கொண்டேயிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு, அதை ஒரு நிலையில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் ஏதும் இல்லை. அதைவிட விவசாயிகளுக்கு ஒரு நெருக்கடியான நிலைமை எங்கள் பகுதியில் ஏற்பட்டு வருகின்றது. விவசாயக் கூலிகள் வேறு பணிகளுக்குச் செல்வ



தாலும், அவர்களுக்கு அதிகமான கூலி கிடைப்பதில்லை என்ற காரணத்தாலும், விவசாயப் பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. ஆக இப்படிப்பட்ட நிலைமைகளில் குறிப்பிட்ட காலங்களிலே விவசாயம் செய்ய முடியாத நிலைமையில், விவசாய உற்பத்தி குறைந்து வருகின்றது என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே சமயத்தில் ஒரு விவசாயியானவன், ஒரு பொருளை விளைவிக்கின்றபோது, அந்தப் பயிருக்கு என்ன விலை கிடைக்கிறதோ, அந்த விலை அந்தப் பயிர் அறுவடையாகி மார்க்கெட்டிற்குச் செல்கின்றபோது, கிடைப்பதில்லை. அதுவும் இயற்கையாக மார்கெட்டிற்கு அதிகமாக விளைபொருள்கள் வரும்போது விலை குறையும் என்று சொல்வார்கள். ஆனால் அதைப்பற்றி விவசாயிகள் கவலைப்படுவதில்லை. ஆனால், விலையை பார்க்கின்றபோது, அநேகமாக, பாதிக்கு பாதியாக பொருள்களின் விலை வீழ்ச்சியடைகின்றது.

உதாரணத்திற்குப் பார்ப்போமேயானால், சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால், அது பணப்பயிராக இருந்தாலும் சரி, மற்ற எந்தப் பொருளாக இருந்தாலும் சரி, மஞ்சள் போன்ற பொருள்கள் ரூ. 1,400, ரூ. 1,300 ஆக விற்றுக்கொண்டிருந்த பொருள்கள் இன்றைக்கு திடீரென்று ரூ. 700, ரூ. 800 என்று விற்பதனாலே விவசாயிகள் நஷ்டப்படுகிறார்கள். எனவே, எந்தப் பயிரையும் பயிர் செய்வதற்கு இல்லாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

எனவே நான் அரசாங்கத்தைப் பணிவோடு கேட்டுக் கொள்வது என்னவென்று சொன்னால், நமது மாநில அளவிலாவது விவசாய விளை பொருள்களுக்கான ஒரு விலை நிர்ணயக் கமிஷனை ஏற்படுத்தி, மத்திய அரசாங்கத்திற்கு அப்போதைக்கப்போது எடுத்துச் சொல்வதற்கும், அது மட்டும் அல்லாமல் விலை வீழ்ச்சியைத் தடுப்பதற்குமான முயற்சிகளை எடுத்துக் கொள்வதற்கும், விவசாயிகளுக்கான நல்ல ஆலோசனைகளைச் சொல்வதற்குமான கமிஷனை, அதாவது ஒரு உயர்நிலைக் கமிட்டியை அமைக்கவேண்டுமென்று விவசாயிகளின் சார்பாக அரசாங்கத்தை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு மிக முக்கியமாக இருக்கக்கூடிய தண்ணீர் பிரச்சினை, காவிரி பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்நாடக அரசோடு பேசி முடிவு செய்ய இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. அதைச் சீக்கிரமாக, எவ்வளவு முக்கியமான பல பணிகள் அரசாங்கத்திற்கு இருந்தாலும், உடனடியாக செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவிரி டெல்டாப் பகுதியில் மட்டுமல்லாது எங்கள் பகுதியில், குறிப்பாக பெரியார் சேலம் மாவட்டங்களில் சில பகுதிகள் பாசனம் பெற்று வரு

[திரு. ஜி. ஜி. குருமூர்த்தி] [1989 மார்ச் 30

கிறது. எங்களுக்குக் கீழ் பவானி பாசனத்தினால் கொஞ்சமும், மேட்டூர் வலது கரை, இடது கரை வாய்க்கால்களினால் சில பகுதிகளும் பாசனத்தைப் பெறுகின்றன. ஆனால் இவைகளில் எல்லாம் தண்ணீர் வரும் என்ற நிரந்தரமே கிடையாது. இப்போது கர்நாடக மாநிலத்திலேயிருந்து வரக்கூடிய தண்ணீர் எப்படியாவது தஞ்சாவூருக்கு, காவிரி டெல்டாவிற்கு விடுகிற நிர்ணயம் இருக்கிறது. ஆனால் எங்கள் பகுதியிலே இந்த இரு கால்வாய்களிலே தண்ணீர் விடப்படும் என்ற நிரந்தரம் கிடையாது. சில ஆண்டுகளில் தண்ணீரே விடுவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்திடம் வந்து கேட்டு, வேண்டி அவர்கள் எப்போது உத்தரவை கொடுக்கிறார்களோ அப்போது தான் தண்ணீர் வாய்க்கால்களிலே விடப்படுகிறது. ஆகையினால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு விவசாய வேலைகளை உடனடியாகச் செய்வதற்கான நிலை இல்லாமல் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல பவானி தாலுக்காவிலும் மற்ற பெரியார் மாவட்டம் மற்ற பகுதிகளில் இருக்கும் கீழ் பவானி விவசாயிகளுக்கும் 2-வது டர்ன் நிலங்களுக்கு தண்ணீர் விடப்படுவதில்லை. அதேபோல காளிங்கராயன் பகுதிகளிலே கூட மூன்றாவது போகத்திற்கு நிரந்தரமாக தண்ணீர் கிடைக்குமா என்ற ஐயப்பாடும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் நிபுணர்கள் என்ன காரணம் சொல்லுகிறார்கள் என்று சொன்னால் மின்சார உற்பத்திக்காக எமரால்டு, அவனாஞ்சி போன்ற அணைகளிலே தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அந்த நிலையைப் பரிசீலனை செய்து தண்ணீர் விடப்படுமேயானால் 3, 4 ஆண்டுக்காலமாக தண்ணீர் கிடைக்காத கீழ் பவானி 2-வது டர்ன் பகுதி விவசாயிகள் மிகவும் பயன் அடைவார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மின்சாரம். விவாசாயிகளைப் பொறுத்த வரையில் நீர்ப்பாசன வசதியற்ற பெரும்பாலான விவசாயிகள் மின்சாரத்தை நம்பித்தான் இருக்க வேண்டியிருக்கிறது. கிணற்று பாசனத்தை வைத்து விவசாயம் நடத்தி வருகிறார்கள். அதிலே மின்சார பம்பு செட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அந்த உபயோகப்படுத்தி வருகிறார்கள். ஆனால் இங்கே சபையில் பல முறைகள் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட அனுபவத்திலே பார்க்கிறபோது, குறிப்பிட்ட நேரத்திற்கு அவர்களுக்கு மின்சாரம் கிடைப்பதே இல்லை. பகலிலே 6 மணி நேரம் இரவிலே 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும் அனுபவ ரீதியாகப் பார்க்கிறபோது நிச்சயமாக அது மாதிரியான காலக் கட்டங்களில் மின்சாரம் கிடைப்பதில்லை. அதற்கு காரணம்



1989 மார்ச் 30] [திரு. ஜி. ஜி. குருமூர்த்தி]

என்னவென்று கேட்டால் எனக்குத் தெரியாது அவரைக் கேளுங்கள், இவரைக் கேளுங்கள் என்றுதான் சொல்லுகிறார்களே, ஒழிய நிவாரணம் கிடைக்கவில்லை. அதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்.

அது மட்டும் அல்லாமல் கொடுக்கக்கூடிய மின்சாரத்தில் கூட வோல்டேஜ் என்று சொல்லக்கூடிய 440 வாட்ஸ் வரக்கூடிய அளவிற்கு மின்சாரம் கொடுப்பதில்லை. ஆகையினால் விவசாய காரியங்களிலே ஈடுபட்டிருக்கக்கூடிய விவசாயிகளை, ஒரு பண்ணையிலே இருக்கக்கூடியவர்கள் அவர்களுடைய கிணற்று மேட்டிலேயே உட்கார வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால் அவர்களுடைய மோட்டார் பம்ப் செட்டுகளின் காயில் கருகி போய் விடுகிறது, இந்தச் சிரமங்கள் விவசாயிகளுக்கு இருக்கின்றன.

அடுத்து மின்சாரக் கட்டணத்தை எடுத்து பார்க்கிறபோது அரசாங்கத்தினுடைய புதிய திட்டத்தின் பிரகாரம் எச்.பி-க்கு 75 ரூபாய் என்று வசூல் செய்து வருகிறார்கள். அப்படி இருப்பதனால் பெரும் பகுதியான விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசாங்கத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அரசாங்க நிதிநிலை அறிக்கையிலே கூட பல பகுதிகளிலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இருக்கின்றன. ஆனால் வறட்சி ஏற்பட்டிருக்கக்கூடிய பிரதேசங்களில் இருக்கக்கூடியவர்கள், கிணற்றிலே இருந்து பம்ப் செட் மூலம் ஒரு மணி நேரம் கூட ஓட விட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களும் கூட, இந்த 75 ரூபாயைக் கட்டியாக வேண்டும். அதை தண்டமாக ஒரு காரியமும் செய்யாமல், கிணற்றிலிருந்து தண்ணீரை மேலே இறைக்காமலேயே அதற்கான மின் கட்டணத்தை செலுத்த வேண்டிய துர்ப்பாக்கியமான நிலையில் விவசாயிகள் இருக்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகளிடத்திலேயிருந்து இந்தப் பகுதியில் வறட்சி ஏற்பட்டிருக்கிறது அல்லது கிணற்றிலே தண்ணீர் இல்லை என்று சர்டிபிகேட்டாவது வாங்கி வந்தால், அவர்களுக்கு நிவாரணம் கிடைப்பதற்கான முறையிலே சிந்தித்து அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

விவசாயிகளுக்கு இன்னொரு சிரமம் இருக்கிறது என்பதை பற்றியும் நான் சபையிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் விவசாய உற்பத்திக்காக அவர்கள் தங்களுடைய சொந்தப் பணத்தைப் போட்டு 200, 300 அடி ஆழ்துளை கிணறுகளை வெட்டி அதிலே தண்ணீர் எடுத்து விவசாய உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும் அவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படுகிறது. எப்படி தண்டம் என்று சொன்னால் 5 எச்.பி. இருக்கக்கூடிய மோட்டாரோ அல்லது 7½ எச். பி. இருக்கக்கூடிய மோட்டாரோ வைத்து, சேன்ஜ் ஓவர் ஸ்விச் வைத்து, கம்ப்ரசர் வைத்து அவர்கள் அந்த போரி

விருந்து தண்ணீர் எடுத்து கிணற்றிலே இறைத்து கிணற்றிலே இருக்கக்கூடிய தண்ணீரை எடுத்து விவசாயம் செய்து உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். அவர்கள் ஓட்டுவது, அவர்களுக்கு என்ன சாங்ஷன் இருக்கிறதோ அந்த லோடுதான். ஆனால் அவர்களிடம் சார்ஜ் வாங்குவது என்னவென்றால் இரண்டு பங்கு. ஒரு ஆழ்துளை கிணறு வெட்டி அதிலே கம்ப்ரசர் வைத்து, சேன்ஜ் ஓவர் ஸ்விச் என்று மின்சார இலாக்காவிடமிருந்து அனுமதி வாங்கிக்கொண்டுவந்து, கம்ப்ரசரிலிருந்து தண்ணீர் எடுத்து கிணற்றிலே இறைத்ததும் அந்த கம்ப்ரசரை நிறுத்திவிடுவார்கள். பிறகு மோட்டார் பம்ப் செட்டிலிருந்து தண்ணீர் இறைத்தார்களானால் அவர்களிடத்திலே 10 எச்.பிக்குண்டான சார்ஜ்களை வசூல் செய்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கடன் நிவாரணம் என்று அவ்வப்போது கொடுப்பதைவிட நிரந்தரமாக விவசாயிகளுக்கு விவசாய விளைபொருள்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய விலையும், நிவாரணங்களும் நிச்சயமாகக் கொடுக்கவேண்டும். இல்லை என்று சொன்னால் நீங்கள் எதிர்பார்க்கக்கூடிய உணவு உற்பத்தியும் நிச்சயமாக வராது. விவசாயத் துறையைப் பொறுத்த வரையிலும் தமிழ்நாட்டினுடைய எதிர்காலம் மிகவும் சிரமமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக விவசாயத்தை விட்டுவிட்டு, தமிழகத்தில் இருக்கக்கூடிய பெரியத் தொழிலாகிய நெசவுத் தொழிலை நாம் எடுத்துக்கொண்டு பார்க்கின்றபோது, பல நிவாரணங்கள் இந்த பட்ஜட்டிலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு ஏதோ கூட்டுறவுச் சங்கங்களிலே சேர்ப்பது போன்ற சிறு சிறு உதவிகள் தான் இருக்கின்றனவே ஒழிய அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகள் இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கத்தினர்களாக சேராதிருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு இருக்க கூடிய சிரமங்களையும் நாம் பார்க்க வேண்டும். அவர்களுக்கு நூல் கிடைப்பதில்லை. நூலினுடைய விலை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. ஒரு சந்தர்ப்பத்திலே உள்ள விலை இன்னொரு சந்தர்ப்பத்திலே எப்படி ஏறுகின்றது என்று ஒரு நிர்ணயம் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. ஆகையினால் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு விலையை நிர்ணயித்து, அவர்களுக்கு நூல் கொள்முதல் செய்து கொடுப்பதற்கான முயற்சிகளை நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும். முன்பு திராவிட முன்னேற்றக் கழக கட்சியினுடைய ஆட்சி இருந்தபோது கூட அதற்கென திட்டங்கள் இருந்தன என்று நான் அறிந்தேன். அந்த முறையிலே இந்த நெசவாளர்களுக்கான நிரந்தரமான பரிகாரத்திற்காக, நூல் பாங்குகள் என்று சொல்லக்கூடிய அமைப்புகள் ஏற்படுத்தி நூலைக் கொள்முதல் செய்யுமாறு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அந்த நூலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமல்லா



மல் மற்ற தறியாளர்களுக்கும் கொடுப்பதற்கான முயற்சிகளை நிச்சயமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது நடைமுறையிலே இருக்கக்கூடிய நிதிநிலை அறிக்கையிலே பல நிவாரணங்கள் நெசவாளர்களுக்குக் கொடுக்கின்றபோது, நடைமுறையில் இருக்கின்ற சில சிரமங்களையும் பார்க்கவேண்டும். தற்போது அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அதாவது கூட்டுறவுத் துறையினால் நடத்தப்படும் ப்ராஸஸிங் மில்-அதாவது சாயம் போடுதல், ப்ளீச்சிங் செய்தல் போன்றவை நடைபெறக்கூடிய ப்ராஸஸிங் மில்களில் இருந்துதான் அந்த மில்லிலிருந்து 30 கிலோமீட்டருக்குள்ளே இருக்கக்கூடிய எல்லா நெசவாளர் சங்கங்களும் அந்தப் ப்ராஸஸிங் மில்லிலேதான் நூல்களை ப்ராஸஸிங் செய்துகொள்ள வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் இந்த 30 கிலோ மீட்டருக்குள்ளே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் பூராவுமே கொண்டுவந்து, அந்த ப்ராஸஸிங் மில்லிலே நூலை கொடுத்தால், அவர்களால் சாயம்போட்டுக் கொடுக்க முடியாது. அவர்களிடத்திலே இருக்கக்கூடிய வேலையாட்கள், அவர்களிடத்திலே இருக்கக்கூடிய சாயம் போட்டுக் கொடுக்கக்கூடிய சக்தி எல்லாம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் பல கூட்டுறவுச் சங்கங்களிலே நூல் விநியோகம் செய்து கொடுக்காமல், தறியாளர்களோடு மற்ற சங்கங்களும் நஷ்டத்திலே செயல்படுகின்றன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12—00)

ஆனால் அங்கே இருக்கக்குடிய உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் இன்று பவானிசாகர் போன்ற பெரிய நகரங்களில் இருக்கக்கூடிய 30, 40 ஆண்டுகளாக இருக்கக்கூடிய பள்ளிகளுக்குகூட கட்டிடவசதி இல்லை. ஒரு நகரத்தில் 2 பகுதியில் ஒரு பள்ளிக்கூடம் நடக்கிறது என்று சொன்னால் அதனுடைய நிலைமை எப்படி இருக்கும் என்பதைப்பற்றி நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையில் கொடுத்து இருக்கக்கூடிய அந்த விவரங்களைப் பார்ப்போமானால் (மணியடிக்கப்பெற்றது) டைம் ஆகிறது என்றால் முடித்துக் கொள்கிறேன். அதனால் என்ன; இவ்வாறு நல்ல காரியங்களைச் சொன்னதற்கு இந்தச் சபையில் நேரம் இருக்கப்போகிறதா; அது எனக்குத் தெரியும். நான் பொறுமையோடு இருக்கிறேன். அதிகமாக நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. காரணம் என்னவென்று சொன்னால் இங்கே 1957 விருந்து இருக்கிற மாதிரியே அப்படியே இருக்கும் என்று நினைத்து தான் நான் வந்தேன். இங்கே வந்ததற்கு அப்புறம் தான் அதற்கு எல்லாம் நேரம் இல்லை என்பதை பூரணமாக தெரிந்து கொண்டேன். ஆகவே நான் மேற்கொண்டு அதிகமாக பேச விரும்பவில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இரண்டொரு விவரங்களை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பவானியையும், காளிங்கராயபாளையத்தையும் இணைக்கின்ற ஒரு பழைய பாலம் பவானி ஆற்றில் கட்டப்பட்டு இருக்கிறது. பல போக்குவரத்துகள் வரக்கூடிய அந்த ஒரு முக்கியமான இடத்தில் ஒரு நல்ல பாலம் இல்லை. அங்கே இருக்கக்கூடிய பழைய கால திப்புசுல்தான் காலத்து பாலம் என்று சொல்வார்களே, அந்தப் பாலம் தான் இருக்கிறது. அதிலே பஸ் போக்குவரத்து நடை பெறுவது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதிலே எதிர் எதிராக மாட்டிக்கொண்டால் 1/2 மணி நேரம் 1 மணி நேரம் ஆகும் வெளியே வருவதற்கு. பிரசவ தாய்மார்கள் அதில் வந்துவிட்டால் அந்த பாலத்தின் மத்தியில் சிக்கி விட்டால் அவர்கள் உடனே திரும்பிப் போக முடியாது. 15 நிமிடம், 1/2 மணி நேரம் ஆகி விடும் அவர்கள் போவதற்கு. ஆகவே, இது போன்ற சாலைகளை, பாலங்களை நிச்சயமாக எடுத்து செப்பனிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துச் செயல் படுத்தவேண்டும். இதிலே குறிப்பாக ஏரியை நவீனப்படுத்துவது போன்ற திட்டங்கள் நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. அதைப்பற்றி நான் சபைக்கு சொல்லிக்கொள்ள விரும்புவது, இதில் சில மாவட்டங்களைப் பற்றி தான் இருக்கிறது. இதில் எங்கள் மாவட்டங்களில் சில பகுதிகள் நீர்ப்பாசனம் பெற்று இருந்தாலும் கூட மற்ற பகுதிகளில் எல்லாம் ஏரிப் பாசனம் தான் இருக்கிறது. அவைகளை நவீனப்படுத்தும் முயற்சி களை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பல திட்டங்கள், நீர்ப்பாசன திட்டங்கள், பெரிய குளங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளுக்கு எல்லாம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் வழுக்குப்பறை பள்ளம் என்ற திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. அன்பில் பொய்யாமொழி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்''

என்கின்ற பொய்யாமொழிக்கு ஒப்ப என்னை இந்த சட்டமன்றத் திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்து இருக்கின்ற என்னுடைய ஞான தந்தை 'My God Father' கலைஞர் அவர்களுக்கு என்னு டைய இதயமார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் என்னை மனிதனாக உட்கார வைத்து இருக்கின்ற என்னுடைய அன்புத் தந்தை அன்பில் தர்மலிங்கம் அவர்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். என்னை வெற்றிபெறச் செய்து இந்த மன்றத்தில் அமரவைத்து இருக்கின்ற திருச்சி



2 சட்டமன்றத் தொகுதி வாக்காள பெருமக்களுக்கு என்னுடைய இதயமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 4 நாட்களாக இந்த நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்றாலும் கூட அதிலே கலந்து கொள்ளாமல் இன்றைக்கு என்னுடைய உரையை கேட்பதற்காக அமர்ந்து இருக்கின்ற, எதிர்க்கட்சியில் இருக்கின்ற அத்தனை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை தெரி வித்துக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டை ஆண்ட ஆங்கிலேயன் கூட இந்த இந்திய திருநாட்டை விட்டு சென்ற நேரத்தில் இவ்வளவு ஒரு வறட்சியான நிலைமையில் கஜானாவை காலி செய்துவிட்டுச் செல்லாமல் நல்ல நிலைமையோடு தான் இந்திய திருநாட்டை நமக்கு விட்டுச் சென்றான். ஆனால் இன்றைக்கு நம்முடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சி ஏற்றபோது கஜானா காலியானது மட்டும் அல்லாமல் மைனஸ்-ல் செல்லுகின்ற அளவுக்கு நிதிநிலை இருந்தாலும் கூட இன்றைக்கு பல்வேறு பொருளாதார நிபுணர் கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிச் சொல்லுகிற நேரத் தில் இப்படி ஒரு நிதிநிலை அறிக்கையை இதுவரை எந்த முத லமைச்சரும் சமர்ப்பிக்கவில்லை என்கின்ற ஒரு கருத்தை இன் றைக்கு இந்திய நாட்டிலுள்ள பொருளாதார நிபுணர்கள் அத்தனை பேரும் தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று பேசுகின்ற நான் ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழன்றும் உழவே தலை'' என்ற வள்ளுவனுடைய பொய்யாமொழிக்கொப்ப என்னுடைய தந்தையார் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் இந்த அவையிலே அடிக்கடி இதைப்பற்றி பேசும்பொழுதெல்லாம் ''உழு தவன் கணக்குப் பார்த்தால் உழக்கும் மிஞ்சாது'' என்கிற அந்த பழமொழிக்கு ஒப்ப இன்றைக்கு என்னுடைய தந்தையார் அடிக்கடி சுட்டிக்காட்டியதை நினைவுபடுத்தி நம்முடைய கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அதை மனதிலே நிறுத்தி, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற நாலாந்தர குடிமகன்கூட வரவேற் கத்தக்க வகையிலே இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருக் கிறது. நிதிப் பற்றாக்குறை பட்ஜெட் என்றாலும்கூட மக்களின் மனம் நிறைந்த பட்ஜெட்டாக இது விளங்கிக் கொண்டிருக்கிறது. ''சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்'' என்ப தற்கு அடையாளமாக, முந்தைய அரசால் கலைக்கப்பட்ட மேலவையை மீண்டும் கொண்டுவரப்படுவதற்கான சட்டத்தை நிறைவேற்றியது. ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பதவிக்காலத்தை 3 ஆண்டி லிருந்து 5 ஆண்டாக உயர்த்தியது. அதன் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியது. கூட்டுறவு இயக்கங்களுக்கு தேர்தல் நடத்த முடிவு செய்தது. மூன்று மாநகராட்சிகளுக்கு உடனடி யாக தேர்தல் நடத்த முன்வந்தது. இது போன்றவைகளை யெல்லாம் நிறைவேற்ற முன் வந்ததன்மூலம், அரசுக்கு, கழ கத்துக்கு ஜனநாயகத்தின் மீது எந்த அளவிற்கு பற்று இருக்கிறது

என்பதை அது காட்டுகிறது. இப்படிப்பட்ட அரசைக் கலைத்து விட்டு மீண்டும் ஆட்சிக்கு வர பலர் துடித்துக்கொண்டு இருக்கிறார்கள். இது நடக்காத, நடக்க முடியாத காரியமாகும். கழகத்தின் தலைவர் கலைஞர் பதவிக்காக இந்த இயக்கத்தில் சேர்ந்தவரல்ல. பதவியே கூடாது என்ற காலத்தில் கழகத்தில் சேர்ந்து கழகத்தை வளர்த்த தலைவர் கலைஞர் ஆவார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக இதே சட்டமன்றத்திலே உறுப்பினராக இருந்த கழகத் தலைவர் கலைஞர் அவர்களும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் தங்களுடைய சட்ட மன்ற உறுப்பினர் பதவியையே தூக்கியெறிந்தவர்கள். அப்படிப் பட்டவர்கள், பதவி சுகத்தைவிட்டு மக்கள் சுகமே பெரிது என்று பாடுபடக்கூடியவர்கள் அமர்ந்திருக்கிற சபை இது. அவர்கள் தலைமையில் பணியாற்றுவதை நாங்களெல்லாம் பெருமையாக கருதுகிறோம்.

என்னுடைய தந்தையார் இந்தச் சட்டமன்றத்திலே விவசாயத் துறை அமைச்சராக இருந்த காலகட்டத்தில் கோவை நகரிலே முதன்முதலாக வேளாண்மைத்துறைக்கு என்று வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவியது கழக அரசு. அதற்குப்பிறகு தொடர்ந்து பல்வேறு முறை என்னுடைய தந்தையார் வற்புறுத்தியும் கூட, 1975ஆம் ஆண்டு இந்த ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, வேளாண்மைக் கல்லூரி தொடங்க வேண்டுமென்ற இந்த உணர்வே இல்லாமல் இருந்துவிட்டு இன்றைக்கு மீண்டும் கழகத் தலைவர் ஆட்சிக்கு வந்தவுடன் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, திருச்சியிலே அந்த வேளாண்மைக் கல்லூரியை நிறுவுவதற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அனுமதி அளித்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அனுமதி அளித்தது மட்டுமல்லாமல் இந்தத் திட்டத்திற்குத் தேவையான நிதியையும் ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. அதிலும் சோழ நாட்டிலே, ''சோழ நாடு சோறுடைத்து'' என்பதற்கேற்ப, சோழநாட்டினுடைய தலைநகரமாக இருக்கின்ற திருச்சியிலே இந்த வேளாண்மைக் கல்லூரியை நிறுவுவது வரவேற்கத் தக்கது. அதையும் நான் சட்டமன்ற உறுப்பினராக வந்த பிறகு, இந்தச் செயல் நடைபெறுவதை நான் மனதார வர வேற்கிறேன்.

அதைப்போல விவசாயிகளுடைய கடன்களையெல்லாம் பலமுறை ரத்து செய்து, தேர்தல் அறிவிப்பாக இருந்தாலும், கூட அவற்றையெல்லாம் மாற்றி, நம்முடைய அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தர வேண்டிய ஏறத்தாழ 107 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதும் வரவேற்கத்தக்கது.

அதைப்போல நம்முடைய கழக அரசை நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுவது, திருச்சியிலே வாத்தலை, முக்கொம்பு பகுதியிலே, கழக அரசு இருந்த காலத்திலே, முக்கொம்பு கட்டப்பட்டு, வெள்ளத் தடுப்புச் சுவராக அது இன்றைக்கும்



இயங்கி வருகிறது. அந்த வெள்ளத் தடுப்புச் சுவரின் மூலம் அதிகமாக வருகின்ற தண்ணீரை அந்த அணையிலே தேக்கி தஞ்சைப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் வெள்ளத்திலே மூழ்கி விடக் கூடாது என்பதற்காக அந்த அணை நிறுவப்பட்டது. அந்த அணை நிறுவப்பட்ட பிறகு, தஞ்சை வளநாடு அந்த முக்கொம்பு அணையினால் இன்றைக்கு வளம் பெற்று வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், கழக அரசையும் கேட்டுக்கொள்ள ஆசைப்படுவது, அரசு ஆணைப்படி, எங்கள் பகுதியில் திருச்சி மாவட்டத்திலே இருக்கிற காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடிக்கு என்று மேட்டூர் அணையிலிருந்து 1,500 கன அடி தண்ணீர் தரவேண்டுமென்று இருக்கிறது. அதன்படி, இந்த அரசினுடைய ஆணைப்படி, 1,500 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12—10)

நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வது, இன்னும் ஒரு 1,500 கன அடி தண்ணீரை குறுவை சாகுபடிக்குத் திறந்து விடுவீர்களேயானால் எங்களுடைய திருச்சி காவேரி டெல்டா பகுதியிலிருந்து மேலும் 20,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று, ஏறத்தாழ 50,000 டன் நெல் கொள்முதல் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதால் நம்முடைய கழக அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தத் தண்ணீரை திறந்து விடுவதினால் தஞ்சை பகுதி மக்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது. காரணம் தஞ்சைக்கு ஒரு நாளைக்கு கல்லணையிலிருந்து திறந்து விடப்படுகின்ற நீரின் அளவு 15,000 கன அடி; எங்களுக்கு 1,500 கன அடி நீர்தான். 30 நாட்களுக்கும் சேர்ந்துதான் 45,000 கன அடி வரும். ஆனால் இந்த நீர் தஞ்சை மாவட்டத்திற்கு 3 நாட்களுக்கு மட்டுமே பயன்படும் நீர் என்பதால் தஞ்சை மாவட்டத்திற்கு எந்தவிதமான பாதிப்பும் இராது என்ற அடிப்படையில் இந்தக் கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.

அதைப்போன்று எங்களுடைய திருச்சி நகரின் நீண்டநாள் கோரிக்கை, திருச்சி நகராட்சியை இந்த முறையாவது மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்பது. இந்த மையக் கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மேலும் தமிழ்நாட்டில் திருச்சி தான் மையப் பகுதி என்பதை யாரும் மறுக்க முடியாது. அதுதான் தென் பகுதி மக்களுக்கும் வட பகுதி மக்களுக்கும் மையமாக இருக்கிறது. தென் பகுதி மக்கள் திருச்சியைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அதை மாநிலத்தின் தலை நகரமாக்கும் உத்தேசம் இருந்தாலும் கூட, நிதி நெருக்கடி

காரணமாக அந்தப் பணியை நிறைவேற்ற முடியாவிட்டாலும் கூட எங்களுடைய நகராட்சியை மாநகராட்சியாக ஆக்க வேண்டுமென்ற அன்பு வேண்டுகோளைஅவை முன் வைக்கிறேன்.

அதைப்போன்று, என்னுடைய தொகுதி மக்களுக்கு-தமிழ் நாட்டிலே பல்வேறு இடங்களில் குடிநீர் பிரச்சினை இருக்கிறது என்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். திருச்சி மக்களுக்கு குடிநீர் பிரச்சினை எப்போதும் ஏற்பட்ட தில்லை. அதற்குக் காரணம், முன்னால் கழக அரசு இருந்த நேரத்தில் காவேரி ஆற்றில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு தோண்டி, அதன் மூலம் திருச்சி மக்கள் என்றைக்கும் குடிநீருக்கு அலையக் கூடாது என்பதற்காக என்னுடைய தந்தையார் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் கழக அரசும் திட்டம் தீட்டி, செயல் படுத்தியதால் தமிழ்நாடே குடிநீருக்காக அவதிப்பட்டபோது கூட திருச்சி மக்கள் பிரச்சினை இல்லாமல் இருந்தார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் திருச்சி நகரை இணைத்து ஒரு பேரூராட்சி வருகிற காரணத் தால் அந்தக் கோ அபிஷேகபுரம் பேரூராட்சி மக்களுக்கு இந்தக் குடிநீர் கிடைக்காத குறை இருந்துகொண்டிருக்கிறது. அது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பலமுறை தாக்கீது அனுப்பி, அது இன்றும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிற நம்முடைய கழக அரசு அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்கிறேன்.

அதைப்போன்று குடிசைமாற்று வாரியத்தின் மூலமாக அடுக்கு மாடி வீடுகள் கட்டித் தருகிறோம் என்ற திட்டம் இருந்தாலும், நீண்டகாலமாக சில தனியார் இடங்களில் நம்முடைய ஏழை எளிய மக்கள் குடிசைகள் போட்டு வாழ்ந்தாலும் கூட சில தனியார்கள் அவர்களை காலி செய்யக்கூடிய நோக்கத்தோடு செயல்படுகிறார்கள். அவர்களுடைய குடிசைகளை காலி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு உயர்நீதி மன்றத்திலும் உச்ச நீதிமன்றத்திலும் ஆணை பெற்று, அனுமதி பெற்றிருக் கிற இந்த நேரத்தில் நான் கழக அரசைக் கேட்டுக்கொள்வது, குடிசைமாற்று வாரியம் அமைக்கப்பட்டபோது, எப்படி நட வடிக்கை எடுத்து நம்முடைய சென்னை மாநகரிலே தனியாக குடிசை மாற்று வாரியம் அமைத்து அதன் மூலம் பல்வேறு அடுக்குமாடிகளைக் கட்டிக்கொடுத்தோமோ அதைப் போன்று திருச்சியில் இருக்கிற பல்வேறு பிரச்சினைகளை அகற்ற அங்கு இதைப் போன்றதொரு குடிசைமாற்று வாரியம்அமைத்து அடுக்கு மாடிக் கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்தத் துறை அமைச்சர் அவர்களையும் கழக அரசையும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போன்று தொழில் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் ஏற்கனவே கழக அரசு இருந்தபோது இந்தியத் திருநாட்டிலே மூன்றாவது இடத்தில் இருந்தது. அதற்குப் பின்னாலே 13 ஆண்டு ஆட்சிக்குப் பின்னால் 13-வது இடத்திற்கு வந்திருக்கிறது. மீண்டும், இன்றைக்கு வெளி மாநிலத்திலிருந்து வெளிவருகின்ற ஒரு பத்திரிகையில் இந்த நிதிநிலை அறிக்கை யைப் பார்க்கும்பொழுது, தொழில் துறைக்குத் கொடுத்திருக்கிற திட்டத்தைப் பார்த்துவிட்டு, நிச்சயமாக இந்த முறை தமிழ் நாடு தொழில் துறையில் இரண்டாவது இடத்திற்கு வரும் என்று கணித்திருக்கிறது. அதைப் போன்று பல்வேறு தொழில் அதிபர்களும் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையை வரவேற்றிருக்கிறார்கள்.

மேலும் இந்த நிதிநிலை அறிக்கையில் ஹோசூரிலும் ராணிப்பேட்டையிலும் தொழில்பேட்டை அமைப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தொழில்பேட்டைகள் என்பதை மாற்றி, திருச்சியிலும், ஒரு தொழில் பேட்டையை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். திருச்சியில் ஏற்கனவே பாரத் ஹெவி எலக்டிரிகல்ஸ் லிமிடெட் இருக்கிறது. அது தவிர பல்வேறு தொழில் நிறுவனங்களும் அங்கே இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு தொழில்பேட்டையை நிறுவ வேண்டு மென்று நம்முடைய கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று என்னுடைய தொகுதியில் திருச்சி நகரில், நீண்டநாள் கோரிக்கையான பாதாளச் சாக்கடைத் திட்டம் கடந்த பத்து ஆண்டு காலமாக வற்புறுத்தப்பட்டு வந்தும் இன்னும் நிறைவேற்ற முடியாமல் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கான காரணத்தை ஆராய்கிற நேரத்தில் மெயின் குழாய்கள் எல்லாம் செய்யப்பட்டு வேலைகள் எல்லாம் முடிக் கப்பட்டுவிட்ட நேரத்தில்—வீடுகளிலிருந்து வருகிற சாக்கடை நீரை இந்த மெயின் குழாய்களோடு இணைக்கவேண்டுமானால் ஏறத்தாழ ஒரு அடி அல்லது இரண்டடிதான் இருக்கும். அந்த ஒரு அடி, இரண்டு அடி என்ற அளவில் இணைப்பதற்கு—அந்த வீட்டின் சொந்தக்காரர் ஏறத்தாழ ஆயிரம் ரூபாய், இரண் டாயிரம் ரூபாய் கட்டவேண்டுமென்ற விதி இருப்பதன் காரண மாக அந்த வீட்டின் சொந்தக்காரர்கள் அந்தப் பணத்தைக் கட்ட மறுக்கிறார்கள். ஒன்று அவர்களைக் கட்ட வைப்பதற்கு அவர் களைத் தீவிரப்படுத்த வேண்டும் அல்லது அந்தக் கட்டணத் தைக் குறைத்திட வேண்டும். இப்படி ஆவன செய்து அந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவாக இந்த ஆண்டு முடிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்

நம்முடைய கழக அரசு இன்றைக்குப் பல்வேறுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது. அதிலும், குறிப்பாகப் படித்த இளைஞர்கள் யாரும் வேலையில்லாமல் இருக்கக்கூடாது, அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு பல்வேறு சுயவேலை வாய்ப்புத் திட்டங்களைக் கொண்டு வந்தாலும் கூட நான் கழக அரசை ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கல்வி இலாக்காவின் கீழ் வருகின்ற பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தொழில் கல்வியை முதன்மையாக வைத்து மற்ற பிரிவுகளை எல்லாம் பின்னுக்குத் தள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நான் சொல்வது எங்களுடைய கழக அரசுக்கு மட்டும் அல்லாமல் தமிழக மக்கள் அனைவருக்கும் நன்மை பயக்கும் என்ற காரணத்தால், பொங்கல் போன்ற திருவிழா நாட்களில் ஏழைகளுக்கு 5 கிலோ அரிசியுடன் சேர்த்து 2 லிட்டர் மண்ணெண்ணையும், ஒரு கிலோ சர்க்கரையும் இலவசமாகக் கொடுப்பதாக அறிவிக்க வேண்டுமென்றும், ஒரு ஜோடி வேட்டி, சட்டை, புடவை என்பதற்குப் பதிலாக இரண்டு ஜோடி வேட்டி, சட்டை, புடவை இலவசமாகத் தரப்படும் என்று அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியில் செயற்கை வைரம் என்பது மிக முக்கியமானதாகும். தமிழகத்திலேயே திருச்சியில்தான் செயற்கை வைர வியாபாரிகளும், அந்தச் செயற்கை வைரத்திற்குப் பட்டை தீட்டுகிற பட்டறைகளும் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே இந்தத் தொழில் பரவலாக நடைபெற்று வருகிறது. அப்படிப்பட்ட அந்தத் தொழிற்சாலைகளுக்கு நம்முடைய கழக அரசு இருந்த நேரத்தில் அதாவது 1970 ஆம் ஆண்டு அதன் மீது இருந்த வரியை முழுவதுமாக விலக்கியது. அதன் மூலமாக அங்கே இருக்கின்ற தொழிலாளர்களும், வியாபாரிகளும் அன்றைய தினம் நன்மை பெறச் செய்தது நம்முடைய கழக அரசு. அதற்குப் பிறகு இடையிலே வந்த அரசு ஆண்ட நேரத்தில் அவர்கள் மீது பலமுனை வரி என்ற வகையில் 15 சதவீதம் விதித்து அவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகி, இப்போது கழக அரசை அவர்கள் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கழக அரசு, கருணை மிக்க கழகத் தலைவர் இருக்கின்ற இந்த அரசு நிச்சயமாக அவர்கள் மீது கருணை வைத்து அந்த வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நிதிப் பற்றாக்குறை என்றாலும்கூட அந்தத் தொழிலாளர்களுடைய வாழ்வு உயர்வதற்காக இவைகளை அறிவிக்க வேண்டுமென்று நான் கழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு 3 ஸ்டார், 5 ஸ்டார் ஹோட்டல்களில் தங்குகின்ற மக்கள் வரி கட்டினால் பரவாயில்லை என்ற நல்ல நோக்கத்தோடு ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் ஈட்டக்கூடிய அந்த ஹோட்டல் பண்டங்களுக்கும், அந்த ஹோட்டல்களுக்கும் 5 சதவீதம் வரி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் நல்ல திட்டம் என்றாலும்கூட ஒரு நாளைக்கு





5,000 ரூபாய்க்குக் குறையாமல் வருமானம் வருகின்ற ஹோட்டல்களுக்கும், அந்த உணவுப் பண்டங்களுக்கும் அதாவது ஒரு நாளைக்கு 5,000 ரூபாய் என்றால் ஆண்டுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கும் மேல் வருமானம் வருகின்றது என்ற வகையில் 5 சதவீதம் வரி என்று போட்டிருக்கிறோம். இவ்வாறு 5 சதவீதம் வரி என்று நிர்ணயித்திருக்கின்ற நிலைமையில் அரசுக்கு வருகிற இலாபத்தைவிட ஒரு சில அதிகாரிகளுக்கு வருகின்ற வரவுதான் அதிகமாகச் சென்றுவிடக்கூடும் என்ற பயத்தின் அடிப்படையில் அந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்த 5 சதவீத வரி என்பது நாம் நாளைக்குக் குடிக்கின்ற காபி, டீ ஆகிய எல்லாவற்றிலும்தான் வரும். அதைக் கட்டுவது மக்கள்தான் என்பதை மனதில் கொண்டு தயவு செய்து அதைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய கழக அரசு, மாணவ சமுதாயம் பயன்படுத்துகிற அன்றாடப் பொருட்களான பேனாவுக்கும், பால் பாயின்ட் பேனாவுக்கும், பென்சிலுக்கும், ரீ.·.பிலுக்கும், கலர் பென்சிலுக்கும், அழிப்பானுக்கும், கரும்பலகைக்கும் முழுமையாக வரிச் சலுகை அறிவித்திருக்கிறது. ஆனால், எழுத்தையே மூலதனமாகக் கொண்ட பிறவி எழுத்தாளர் ஆன கழகத் தலைவர் தமிழகத்தின் முதல்வர் அவர்களுக்குத் தெரியாததல்ல இது. இவற்றுக்கெல்லாம் ஆதாரமானப் பொருளான ''ரைட்டிங் இங்க்''-க்கு வரி விலக்கு உண்டா என்று அந்தத் திட்டத்தில் இல்லாத காரணத்தினால் அதற்கும் வரி விலக்கு உண்டு என்று கழக அரசு அறிவிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–20)

அடுத்து பொங்கல் நாளில், தமிழ் வருடப் பிறப்பான சித்திரை வருடப் பிறப்பு நாளில் என்றிருப்பதைப் போல் அண்ணா பிறந்த நாளுக்கும் இலவச வேட்டி, சேலைகளை அளிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய உரையை, நீங்கள் மணியடித்து, முடிக்கும் முன்பு என்னுடைய பணியை நானே முடித்துக் கொள்ள மனதில் எண்ணம் கொண்டு முடிப்பதற்கு முன்பாக நான் படித்த இந்திய சரித்திரத்தில் குப்தருடைய காலம் பொற்காலம் என்றுதான் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால், இன்றைக்கு நான் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக பதவி ஏற்ற பிறகு இன்றைக்கு சொல்லப்பட்டிருக்கின்ற இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வருங்காலத் தமிழகத்தின் வரலாற்றில், இந்திய சரித்திரத்தில் கலைஞருடைய இந்த நிதிநிலை அறிக்கை நிச்சயமாகப் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தை மனமார பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

[1989 மார்ச் 30

*திரு வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அத்தனை பேர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலே கலந்து கொண்டு கருத்து சொல்கின்ற அளவுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த என் திருவாரூர் தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் கூறுகிறேன்.

பொதுவாக இன்றைய தினம் சட்டப் பேரவையிலே முன் வைக்கப்பட்டிருக்கக்கூடிய வரவு-செலவுத் திட்டத்தில் மாநகராட்சித் தேர்தல், ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி மன்றத் தலைவர்களுடைய பதவிக் கால நீடிப்பு, ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பறிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்தை வழங்குவது போன்ற நல்ல அம்சங்களை நான் வரவேற்கிறேன்.

அதோடுகூட ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அதிக அதிகாரம் வழங்கப்படுவதாக இருந்தாலும், ஊராட்சிகள் திடீரென்று கலைக்கப்பட்டு தனி அதிகாரிகள் காலத்திலே ஊராட்சிகளை செலவு செய்ததாக கணக்கு எழுதப்பட்டு அதிலே வரக்கூடிய தொகை இன்றைய தினம் கடன் கணக்காக இருக்கின்ற காரணத்தினால், பஞ்சாயத்துக்கு வரக்கூடிய ஈட்டு மானியம் முழுவதும் இன்று கடனிலே வரவு வைக்கப்பட்டு, பஞ்சாயத்துக்கள் சாதாரண குடிநீர்ப் பிரச்சினைகளைக் கூட சீர் செய்ய முடியாத நிலைமையில் இருக்கின்றன. அந்த நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் அந்த பஞ்சாயத்திலே இருக்கக்கூடிய ஊர் ஜனங்களுக்கும், தலைவர்களுக்கும் ஒரு வெறுப்புணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி இருக்கின்றது. இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், பஞ்சாயத்துக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற, அந்த அதிகாரி காலத்திலே கணக்கு எழுதப்பட்ட அந்தத் தொகையை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்

அதோடு வேலை வாய்ப்புப் பற்றிச் சொல்கின்றபோது, அலுவலக வேலைகளுக்கு, அரசுப் பணிகளுக்கு வரக்கூடியவர்கள் வயது வரம்பை 5 ஆண்டுகள் உயர்த்தி தற்போது 30 ஆண்டுகளாக உயர்த்தியிருக்கிறார்கள். பெண்களுக்கு 30 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையில் அரசு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு விவசாயிகளுக்கு மின் வாரியத்தில், காலம்கடந்து, காலதாமதமாக மின் கட்டணம் கட்டியதற்கு வசூலிக்கப்படுகின்ற அபராதம் வட்டித் தொகையை தள்ளுபடி செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.



1989 மார்ச் 30] [திரு. வி. தம்புசாமி]

அதுபோலவே வறட்சியின் காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு கடுமையாக இருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக எல்லா கிராமங்களிலும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது உண்மை. அதன் விளைவாக கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு, உற்பத்தி பாதிக்கப்பட்டு பொருளாதார நிலை குலைந்து இருக்கின்றார்கள் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருவாரூர் தொகுதியில் தற்போதுள்ள குடிநீர்த் தொட்டிகள் முழுவதும் பழுதடைந்து செயல்படாமல் இருக்கின்ற காரணத்தினால், இந்தக் கோடையிலே இன்றைக்கு குடி தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனடியாக அரசு அந்தக் குடிநீர்த்திட்டத்தைநிறைவேற்றி குடிதண்ணீர் வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல விவசாயிகளின் காலம் கடந்த கடன் தவணைகளை தள்ளுபடி செய்வோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது வறட்சிப் பகுதிக்கு மட்டும்தான் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதி மட்டுமல்ல, அத்துடன் வெள்ளப் பகுதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றையதினம் எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அது கடலோர மாவட்டம். மழைக் காலங்களில் திடீரென்று தெரு வெள்ளம் ஏற்பட்டு பயிர்கள் முழுமையையும் அழித்து சேதம் ஏற்பட்டு உற்பத்தி அனைத்தும் அழிந்துவிடுகிற நிலைமை ஆண்டுதோறும் இருக்கிறது. எனவே வறட்சிப் பகுதி என்று இருப்பதுடன் கூடவே வெள்ளப் பகுதியையும் சேர்த்து அதற்குண்டான சலுகைகள் அனைத்தையும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல வட்டி, அபராத வட்டி தள்ளுபடி வரவேற்கத் தக்கதாக இருந்தாலும் பல காலங்களாக, நீண்ட காலமாக கட்ட வேண்டிய வட்டி, அபராத வட்டி போன்றவற்றை எல்லாம் ஏற்கனவே செலுத்தியிருக்கும் விவசாயிகளுக்கு அபராத வட்டியை அசலாக மாற்றி, வாங்கியிருக்கிற கடனிலேயே வரவு வைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உணவு நிலைமை. மத்திய அரசைப் பொறுத்த வரையில் 80 ஆயிரம் டன் அரிசி மாதந்தோறும் முன்பு வழங்கி வந்ததை இப்போது 40 ஆயிரம் டன்னாக குறைத்துள்ளது. மீண்டும் 40 ஆயிரம் டன் அரிசியையும் மத்திய அரசிடமிருந்து கோரி பெற்று தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரிசி பற்றாக்குறை நிலைமையை நல்ல முறையில் சமாளிக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. தம்புசாமி] [1989 மார்ச் 30

அடுத்து, அரிசி உற்பத்திந் திட்டத்திற்கு நாம் திட்டமிடுகிறோம். அதற்காக பல்வேறு வழிகளில் திட்டங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. விவசாய தொழிலை நம்பகரமான தொழில் என்று விவசாயிகள் நம்பிக்கொண்டிருந்த நிலை இன்றைக்கு மாறியிருக்கிறது. அதிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகள் இன்றைக்கு அந்தத் தொழிலை விட்டு அகல முடியுமா என்று சிந்திக்கிற நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, இன்றைக்கு நகர் பகுதிகளைச் சுற்றியிருக்கிற நிலங்களை, விவசாய நிலங்களை விற்று கட்டிடம் கட்டும் நிலங்களாக மாற்றியிருக்கிறார்கள் அல்லது குடியிருப்பு நிலங்களாக மாற்றியிருக்கிறார்கள். விவசாயத்திலிருந்த நம்பிக்கையான நிலை மாறிவிட்டது. விவசாயிகள் அரிசி உற்பத்தி செய்வதற்கு அவர்களுக்கு நம்பிக்கையையும், உத்தரவாதத்தையும் அரசு அளிக்க வேண்டும். இந்த நம்பிக்கையும், உத்தரவாதமும் அவர்களுக்கு மூலாதாரமான சொத்தாக இருப்பதனால் அதற்குரிய ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவிரி நீர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் இதனால் சிக்கல்கள் ஆண்டுதோறும் அதிகமாகிக்கொண்டு வருகின்றன. ஆகவே, இதற்கு உடனடியாக தீர்வு காண வேண்டும். நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. நடுவர் தீர்வுக்கு இப்பிரச்சினையைக் கொண்டு சென்றால் தீர்வு காண நீண்ட காலமாகும். காலதாமதம் ஏற்படும். ஆகவே, பொருளாதார நிலையில், ஏற்கெனவே பின்தங்கியிருக்கிற விவசாயிகள், சிக்கலில் இருக்கிற விவசாயிகள் மேலும் பாதிக்கப்படுவார்கள். அவர்களுக்கு அபாயகரமான பொருளாதார பாதிப்புகள் ஏற்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது. ஆகவே, பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்றாக பிரிப்பதாக அறிவிப்பு வந்து, பின்பு அறிவிப்போடு அது நின்று விட்டது. தஞ்சை மாவட்டத்தை மூன்றாக பிரித்து, மூன்று மாவட்டங்களாக அது செயல்படுவதற்கு உத்திரவாதம் செய்ய இந்த அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர், அரசு ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் அரசு முழு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதுபோல பகுதி நேர ஆசிரியர்களாக நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் முழு நேர ஆசிரியர்களாக அங்கீகரித்து அவர்களுக்கு உரிய ஊதியத்தையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வி ஆசிரியர்களாக பணியாற்றுபவர்கள் கடந்த 3 ஆண்டுகளாக ஊதியம் ஒன்றும் பெறாமல் அவஸ்தை பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஊதியம் இல்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கும் அவர்களுக்கு உடனே ஊதியத்தை வழங்க



1989 மார்ச் 30] [திரு. வி. தம்புசாமி]

நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் பார்த்தால் தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் 135 கைத்தொழில் ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள். அதுபோல வேளாண்மை அபிவிருத்தி குறித்து பல்வேறு நல்ல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும் கடந்த மார்ச்சு 4, 5 தேதிகளில் குடந்தையில் வேளாண்மை சம்பந்தமான மாநாடு ஒன்று நடந்தது. அதில் வேளாண்மை வளர்ச்சி, அதன் அபிவிருத்திக்காக பல்வேறு பரிந்துரைகள் அரசுக்கு செய்யப்பட்டிருக்கின்றன. அந்தப் பரிந்துரைத் திட்டங்களை முழுமையாக இந்த ஆண்டிலேயே நிறைவேற்றும் வகையில் வேளாண்மைத் துறை சிறப்பாக துரிதமாக, செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

144356

அடுத்து, உபரி நிலம் வழங்குவது அடிப்படையான பிரச்சினை. இந்தப் பிரச்சினையைப் பற்றி வரவு செலவுத் திட்டத்திலே சொல்லப்படவில்லை. அது சம்பந்தமான திட்டங்களை நிறைவேற்றவும், அதில் உள்ள இடர்பாடுகள், முரண்பாடுகள் சம்பந்தமாக முழுமையும் எதிர்காலத் திட்டங்களாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் சம்பந்தமாக சொல்லியிருக்கும் திட்டங்களை விரைவில் அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நீர் பற்றாக்குறை காரணமாக, ஜனவரி மாதத்திலேயே வறட்சி நிலை ஏற்படுவதால், குளங்கள், ஏரிகள், இதர பகுதிகளை ஆழப்படுத்தி, நீர்நிலைகளில் நீர்ப்பிடிப்பை ஏற்படுத்த உடனடியாகத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சாலைகள் பராமரிப்பு. சாலைகள் என்று சொல்கிறபோது, வேகமாக சாலைகள் பராமரிப்பு வேலைகளைச் செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அது கடைமடைப் பகுதியாக, கடலோரப் பகுதியாக இருக்கிறது. ஆண்டுதோறும் பெய்யும் மழை காரணமாக சாலைகள் கரைந்து போய்விடுவதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படி மழையால் பாதிக்கப்படும் சாலைகளை பராமரிக்க அதிக நிதி ஒதுக்கி, அந்தச் சாலைகள் மழையால் பாதிக்கப்படாத அளவுக்கு திட்டங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அதிகமாக இருப்பது மண் சாலைகள்தான். என்னுடைய தொகுதியில் 3 ஒன்றியங்கள் இருக்கின்றன. கீவளூர் ஒன்றியம், திருவாரூர் ஒன்றியம், கொரடாச்சேரி ஒன்றியம். கீவளூர் ஒன்றியத்தில் இருப்பதுதான் அதிகமான நீளமுள்ள சாலைகள். அதிலே 72 கிலோ மீட்டர் மண் சாலைகள்; 62 கிலோ மீட்டர் கப்பிச் சாலைகள்; 1.4 கிலோ மீட்டர் தார்ச்சாலை. இந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன. அதைச் சீர் செய்ய

D
V 211,31'N89
N89-6.2

[திரு. வி. தம்புசாமி] [1989 மார்ச் 30

வேண்டுமென்றால், அதற்குப் பொறியாளர் அவர்களுடைய மதிப்பீடு 25 இலட்சம் ரூபாய் தேவை. திருவாரூர் ஒன்றியச் சாலைகளை சீர் செய்ய 26 இலட்சம் ரூபாய் தேவை. அதே மாதிரி கொரடாச்சேரி ஒன்றியச் சாலைகளை சீரமைக்க 30 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று சொல்கிறார்கள். கிராமப் புற சாலைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராம மக்கள் நகரத்தோடு இணைந்து, அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை நகரத்தில் விற்பனை செய்யவும், நகரத்தில் உள்ள மருத்துவ வசதி, கல்வி வசதிகளைப் பெறவும் வசதியாக இருக்கும். அந்த அடிப்படையிலே கிராமப்புறச் சாலைகளை சீரமைக்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவாரூர் நகரத்தைப் பொறுத்தவரையில், அந்த நகரத்திலே ஒரு பெண்கள் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது அந்த நகர மக்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல கல்வியைப் பொறுத்த வரையில், ஏற்கெனவே சொல்லியுள்ள காரணங்களை விட, மோசமான நிலைமை இருக்கிறது. கிராமப் புறங்களில் பள்ளிகள் கீற்றுக் கொட்டகைகளில் நடக்கின்றன. அவையும் விழுந்துவிடுகின்றன. அவற்றைச் சீரமைக்க முடியவில்லை. அதைச் சீரமைக்க வேண்டுமென்றால் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தை நாட வேண்டியிருக்கிறது. அவற்றை எல்லாம் சீர் செய்ய அரசு நடவடிக்கைகளை துரிதமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்களைப் போட வேண்டும். அங்கேயுள்ள குறைபாடுகளை நீக்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும். இருக்கின்ற மருத்துவமனைகளில் டாக்டர்கள் இல்லாத நிலைமை இருக்கிறது. உதாரணமாக கொரடாச்சேரி ஒன்றியத்திலே குளிக்கரையில் மருத்துவ மனை இருக்கிறது. அங்கு டாக்டர் கிடையாது. நான் எவ்வளவோ முயற்சி பண்ணியும் டாக்டர் போடாத நிலைமை இருக்கிறது. அரசு அந்த ஏற்பாட்டையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் தேவையான இடங்களில் பாலங்களை அமைக்க வேண்டும். 2 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இடத்திற்கு வர 15 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டியிருக்கிறது. பழையவலத்திலிருந்து திருவாரூர் வர 15 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டியிருக்கிறது. இதை தவிர்க்க வெட்டாற்றில் பாலம் கட்டவேண்டும். மேலவாழக்கரையையும் வல்லாங் கோட்டகத்தையும் இணைக்க வெள்ளையாற்றில்



1989 மார்ச் 30] [திரு. வி. தம்புசாமி]

ஒரு பாலத்தை அமைக்க வேண்டியிருக்கிறது. கிராமங்கள் அனைத்தும் நகரங்களுடன் தொடர்பு கொள்ள இப்படிப்பட்ட பாலங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் நகரத்தில் இருக்கக்கூடிய மருத்துவமனையில் செப்டிக் டாங்க் சுத்தம் செய்யப்படாமல் பொங்கி வழிந்து அங்கே இருக்கும் நோயாளிகளுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும், சீர் செய்யப்படாமல் இருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திருவாரூர் நகரத்தில் அண்ணா சாலையில் உள்ள மருத்துவ மனைக்கு 6 ஆண்டுகளாக தண்ணீர் இல்லை. தண்ணீர் இல்லாமல் கண் ஆப்பரேஷன் நடந்து கொண்டிருக்கிறது. வெளியிலே இருந்து கிடைக்கும் தண்ணீரை நோயாளிகள் பயன்படுத்தும் சூழ்நிலை இருக்கிறது.

அடுத்து வீட்டு வசதியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தற்போது கிராமத்தில் இருக்கிற ஹரிஜனங்களுக்குக் கிடைப்பதுபோன்ற வீட்டு வசதி, நகரத்தில் உள்ள ஹரிஜனங்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். அவர்களுக்கும் குடியிருப்பு மனைப் பட்டா வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஹரிஜனங்கள் என்கிறபோது, தற்போது கிறிஸ்துவ ஹரிஜனங்களுக்கு எந்தச் சலுகைகளும் கிடைப்பதில்லை. அவர்களுக்கும் ஹரிஜனங்களுக்குள்ள அனைத்துச் சலுகைகளும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைய தினம் கிறிஸ்துவ ஹரிஜனங்களுக்கு, இந்து ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்படும் எந்தச் சலுகைகளும் கிடைக்காமல் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றி அவர்களுக்கும் அனைத்துச் சலுகைகளும் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இப்போது கட்டப்போகிற வீடுகள் கான்க்ரீட் வீடுகளாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முன்பு கட்டப்பட்டவை எல்லாம் ஒட்டு வீடுகளாகும். அதிலே ஓராண்டுக்கு மேல் குடியிருக்க முடியாதபடி பழுதடைந்து இருக்கிறது. எனவே அவற்றையெல்லாம் சீர் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஹரிஜனப் பகுதிகளுக்கு இன்னும் முறையான ரோடுகள் கிடையாது. அதைப்போலவே அவர்கள் சுடுகாட்டுக்குப் போவதற்கும் ரோடுகள் கிடையாது. இதையெல்லாம் ஒரு தீவிர திட்டமாக எடுத்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கிராமப்புறங்களில் குடிநீர்த் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. திருவாரூர் தொகுதி

திவனூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படாது இருக்கிற காரணத்தால், பொது மக்கள் குடிநீர் இன்றி அவதிப்படுகிறார்கள். உடனடியாக அதைச் செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் பள்ளிகளுக்காகப் பணம் கட்டியும்கூட சில பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படாமல் இருக்கின்றன. வைப்பூர் என்கிற கிராமத்தில் 2 ஆண்டுகளுக்கு முன்பே பணம் கட்டப்பட்டு இருக்கிறது. இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாததால் உயர்நிலைப் பள்ளியாக ஆகாமல் இருக்கிறது. அதை போலவே கொரடாச்சேரியில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்குப் பணம் கட்டிய பிறகும் கூட நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்து, இதற்கெல்லாம் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டுகிறேன் என்று கூறி அமர்கிறேன், வணக்கம், நன்றி.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

டாக்டர் சி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழாய்ந்த தமிழன்தான் இந்த தமிழகத்தில் முதலமைச்சராய் வருதல் வேண்டும், தமிழ்ப் பகைவர் தமிழகத்தின் முதலமைச்சர் வராது தடுத்தல் வேண்டும்'' என்ற பாவேந்தர் பாரதிதாசன் கூறியதை நினைவு கூறி, உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் ஒப்பற்ற தலைவராய், ஒளி விளக்காய், விடிவெள்ளியாய்த் திகழும் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக உள்ள இந்த அமைச்சரவையும் தாங்கள் சட்டப்பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிற இந்த சட்டமன்றத்தில், ஒரு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றுகிற வாய்ப்பை அளித்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், என்னைத் தேர்ந்தெடுத்து வெற்றிபெறச் செய்த திண்டிவனம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைக் கூறி, என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

13 ஆண்டுக் காலம், பாலைவனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த தமிழக மக்களுக்கு, திடீரென்று இடையிலே ஒரு பாலைவனச் சோலை தென்படுவதைப் போல், இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மக்கள் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறது. இப்படி ஒரு நிதிநிலை அறிக்கை, தமிழகத்தில் இதுவரை தாக்கல் செய்யப்படடதேயில்லை என்கிற அளவுக்கு பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய, வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையைத் தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு, குறிப்பாக வறுமைக்





கோட்டிற்குக் கீழே வாழுகிற மக்களுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்ததன் மூலமாக இது ஒரு பொதுஜன அரசு என்பதை நிருபித்திருக்கிறார். குறிப்பாக, முதியோர், ஆதரவற்றோர், மற்றும் உடல் ஊனமுற்றோருக்கெல்லாம் உதவித் தொகையை உயர்த்தியதன் மூலமாக, அதற்கான உச்ச வரம்பை நீக்கியும், கட்டிடத் தொழிலாளர்கள், தனியார் கார் ஓட்டுநர்கள், ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் விபத்தில் இறந்தால் ரூபாய் 10,000 குடும்பப் பாதுகாப்பு நிதியளித்தல் போன்றவையும் வரவேற்கத் தகுந்த அம்சங்களாகும். அதைப்போலவே பெண்களுக்கு சமநீதி உரிமை கிடைக்க வேண்டுமென்று பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவன் தந்தைப் பெரியார் அவர்களுடைய கனவை நனவாக்கும் வகையில் இன்றைக்குப பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 30 விழுக்காடு, மற்றும் 2ம் வகுப்புவரை எழுகிற பணியிடங்களில் பெண் ஆசிரியர்களே நியமிக்கப்பட வேண்டும். என்கிற உத்தரவும் பரம்பரைச் சொத்து தொடர்பாக பெண்களுக்குச் சம உரிமை வழங்குவது மற்றும் 8ம் வகுப்பும் அதற்கு மேலும் தேறிய ஏழை மகளிரின் / திருமணத்திற்கு 5,000 ரூபாய் நிதியுதவி அளித்தல் என்கிற திட்டமும் வரவேற்கத் தகுந்த திட்டங்களாகும். ஏழை எளிய நடுத்தரப் பெண்களுக்கு இளங்கலை வரை இலவசக் கல்வி அளிக்கின்ற திட்டமும், கர்ப்பிணிப் பெண்களுக்கு 4 மாத காலம் உதவித் தொகை அளிக்கின்ற திட்டமும் பெண் சமுதாயத்தினர் அனைவராலும் வரவேற்கக்கூடிய திட்டங்களாகும்.

(பிற்பகல் 12–40)

விவசாயிகளின் குறுகிய காலக் கடன்கள் ரத்துச் செய்தலும், மேலும் மத்திய, நீண்டகாலக் கடன்களின் வட்டி; அபராத வட்டி, ஆகியவைகளும் அறவே ரத்துச் செய்தும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை வறுமையின் கோரப் பிடியிலிருந்து இன்றைக்கு அரசு காப்பாற்றியிருக்கிறது.

அதேபோல் முந்தைய அரசால் கூட்டுறவு சங்கங்களுக்குத் தரவேண்டிய 67 கோடி ரூபாயை இந்த அரசே தீர்க்குமென அறிவித்ததும் பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். ஏழை எளிய மக்கள் மீது வரிச் சுமையைச் செலுத்தாமல், தாங்கும் சக்தி உள்ளவர்களுக்கு மட்டுமே வரி விதித்து, நிதி ஆதாரத்தைப் பெருக்கியிருப்பது இந்த அரசு என்றென்றும் ஏழை எளிய மக்களுக்காக பாதுகாப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்திருக்கிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறையிலும் அக்கறைகொண்டு இந்த நேரத்தில் கூடுதலாக 164 ஆரம்ப சுகாதார நிலையங்களை திறக்க இருப்பதும், மற்றும் ஏழை எளிய நோயாளிகளுக்கு இலவசமாக மருந்துகள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்காக ஒரு கோடி ரூபாய் நிதியை அளித்திருப்பதும், எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர்கள் நியமனம் செய்து

இருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இன்றைக்கு குறிப்பாக சிறப்பு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் சென்னை போன்ற பெரிய நகரங்களுக்கு வெளியே சென்று பணியாற்ற விரும்பவில்லையென்ற ஒரு பரவலான குற்றச்சாட்டும், அதிருப்தியும் மக்களிடையே இருந்துவருகிறது. ஆனால் சென்னை, மதுரை, கோவை மருத்துவமனைகள் தவிர மாவட்ட அல்லது வட்ட அளவில் இருக்கிற மருத்துவமனைகளில் பல்வேறு துறைகளில் சிறப்புப் பயிற்சிபெற்ற மருத்துவர்களும் சென்று பணியாற்ற வேண்டிய தேவையான உபகரணங்களோ அல்லது வசதிகளோ அங்கு இல்லை. எனவே இந்த நிலைமையில் அங்கு இப்படிப்பட்ட மருத்துவர்கள் பணியாற்றுவார்கள் என்று எதிர்பார்ப்பது ஒரு தவறான ஒன்றாகும். எனவே அப்படிப்பட்ட சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்கள் பணியாற்ற வேண்டிய வசதிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக்கொடுத்தால் நிச்சயமாக அங்கு பணியாற்ற உதவியாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஆதிதிராவிட மக்களுக்கு வருமாண்டில் சுமார் 45 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படுமென்ற திட்டமும், ஆதி திராவிடர்கள் வீடுகள் கட்டுவதற்காக வீட்டுமனைகள் வழங்குவதற்காக ரூ. 2.35 கோடி நிதி ஒதுக்கியிருப்பினும், பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கல்விச் சலுகை பெறுவதற்கு பெற்றோர்களுடைய ஆண்டு வருமான வரம்பு சுமார் 5 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்தி இருப்பதும், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது எந்த அளவுக்கு இந்த அரசு அக்கறை கொண்டிருக்கிறது என்பதை இன்றைக்கு தெளிவுபடுத்தியிருக்கிறது. ஒட்டுமொத்தமாக, சொன்னதைச் செய்வோம், செய்வதை மட்டுமே சொல்வோம் என்ற தாரக மந்திரத்தை நினைவில் கொண்டு இன்றைக்கு தமிழக முதல்வரவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை இன்றைக்கு வரவேற்கும் நேரத்தில் என்னுடைய திண்டிவனம் தொகுதியினுடைய பிரச்சினைகளை நான் இந்த நேரத்திலே எதிரொலித்தாக வேண்டும்.

முதலில், "தனி மனிதனுக்கு உணவில்லை என்றால் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதி பாடியதுபோல், இன்றைக்கு திண்டிவனத்தில் இருக்கிற மக்கள் குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் இன்றைக்கு ஆளாய் பறக்கின்ற அவல நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சொல்லியதுபோல் எல்லோரும் குடிநீர் பிரச்சினையைப் பற்றித் தான் பேசுகிறார்கள். எனவே பத்தோடு பதினொன்று என்று எடுத்து விடாமல் நிச்சயமாக இன்றைக்கு திண்டிவனத்திலே இது ஒரு அத்தியாவசிமான விஷயமாக, பர்னிங் பிராப்ளமாக



குடிநீர் பிரச்சினை இருக்கிறது. கடந்த 10 ஆண்டுக் காலமாக அரசை ஆண்ட கட்சி, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று வாக்குகளை வாங்கி, 35 லட்ச ரூபாயில் திட்டம் வந்துவிட்டது; ஒரு கோடி ரூபாய்க்கு திட்டம் வந்துவிட்டது என்றெல்லாம் வெறும் அறிக்கைகளாகச் சொல்லி இந்த மக்களை ஏமாற்றி இருக்கிறார்கள். எனவே திண்டிவனத்தின் குடிநீர் பிரச்சினை வெறும் தீர்க்கப்படாத கானல்நீராகப் போய்விடுமோ என்ற ஏக்கம் இன்றைக்கு மக்களை வாட்டிக்கொண்டிருக்கிறது. எனவே கழக அரசு குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்து வைக்குமென்ற நம்பிக்கையை மக்கள் தங்கள் நெஞ்சிலே தேக்கி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு திண்டிவனத்தில் ஒரு குடம் தண்ணீர் 75 காசுக்கு விற்கப்படுகிறது என்று நேற்றைய தினம்கூட பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அந்த அளவுக்கு இன்றைக்கு திண்டிவனத்தில் மக்கள் தண்ணீருக்காக மிகவும் அவதிப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை தீர்க்கப்படுவதற்காக குடிநீர்வடிகால் வாரியத்திடம், திண்டிவனத்திற்கு அருகில் புளிச்சம்பள்ளம் என்ற இடத்தில் தேவையான அளவு நிலத்தடி நீர் இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு, அங்கிருந்து சுமார் $1\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு திண்டிவனத்திற்கு குழாய்கள் மூலமாக தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பதற்கு ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்கான வேலைகள் இன்றைக்கு துவங்கப்பட்டிருக்கிறது. நான் இந்த நேரத்தில் முதல்வர் அவர்களைக கருணையோடு கேட்டுக்கொள்வதெல்லாம் உடனடியாக அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி திண்டிவன மக்களுடைய தண்ணீர் பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, அனந்தபுரம், செஞ்சி, திண்டிவனம் ஆகிய மூன்று நகரங்களுக்கும் உள்ளிட்ட பெண்ணையாறு கூட்டுக் குடிநீர்த்திட்டத்தையும் உடனடியாக விரைந்து இந்த நிதியாண்டிலேயே அதைச் செயலாற்ற வேண்டியும் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாக, எல்லோராலும் புறக்கணிக்கபட்ட மாவட்டமாக இருந்து வந்திருக்கிறது. அதிலும் திண்டிவனம் மிகவும் பின் தங்கிய பகுதி என்று எல்லோராலும் உணரப்பட்ட ஒன்று. இங்கு பெரும்பாலும் மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். தொடர்ந்து மூன்றாண்டுக் காலமாக ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக வேலைவாய்ப்பின்றி ஒரு வேளை சோற்றுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. திண்டிவனம் பகுதியில் சிப்காட் என்ற தொழில்பேட்டை நிறுவுவதற்காக ஆய்வு செய்யப்பட்டு அந்த ஆய்வினுடைய அறிக்கையும் மாவட்ட ஆட்சியாளரின் பரிந்துரையும் அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே,

[டாக்டர் சி. ரா. மாசிலாமணி] [1989 மார்ச் 30

இந்த நிதியாண்டிலேயாவது அந்த நிறுவனத்தைத் திண்டிவனம் பகுதியிலே நிறுவினால் நிச்சயமாக... (மணியடிக்கப்பெற்றது). இது கன்னிப் பேச்சு என்ற காரணத்தினாலே பேரவைத் தலைவரவர்களே ஒரு ஐந்து நிமிஷங்கள் அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்னிப்பேச்சிலே குறுக்கீடு கூடாது என்றுதான் இருக்கிறதே தவிர, நீடிப்பது என்பது கன்னிப் பேச்சிலே அல்ல. முற்றிய பேச்சாக இருக்கிறதே (சிரிப்பு).

டாக்டர் சி. ரா. மாசிலாமணி : அதை நிறைவேற்ற முன் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குத் திண்டிவனம் தொகுதியிலே வறட்சியின் காரணமாக மின் கட்டணம் செலுத்த முடியாத விவசாயிகளின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு துண்டிக்கப்பட்டிருக்கின்ற—அறவே டிஸ்மாண்டில் செய்யப்பட்டிருக்கிற — அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் ஒரு கால அளவை நிர்ணயம் செய்து மின் கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மீண்டும் மின் இணைப்பு தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அதைப்போல, என்னுடைய திண்டிவனம் பகுதியில் 100 அடி இடைவெளிக்கு உட்பட்டு கிணறுகளுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்பட்டு, ஓராண்டுக் காலம் அந்த மின்னிணைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டு, பிறகு சில அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்கின்ற காரணத்தினால் அப்படிப்பட்ட விவசாயிகளினுடைய மின்னிணைப்புகள் இன்றைக்குத் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, விவசாயிகளினுடைய நிலைமையைக் கருத்திலே கொண்டு அவர்களுக்கு விதிவிலக்கு அளித்து, அப்படிப்பட்டவர்களுக்கும் மின்னிணைப்பு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திண்டிவனம் மற்றும் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற புறம்போக்கு நிலங்களில் வாழ்கின்ற ஏழை எளிய மக்களுக்கு மின்னிணைப்பு கொடுக்கப்படுவதில்லை. எனவே, அப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களிலே குறைந்தபட்சம் பத்தாண்டுகளுக்கு மேல் வாழ்கின்ற மக்களுக்கு உடனடியாக மின்னிணைப்பு கொடுப்பதற்குத் தகுந்த உத்தரவை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல குடும்பக்கார்டு வழங்குவதிலேயும், வீட்டுமனைப் பட்டா வழங்குவதிலேயும் தேவையில்லாமல் ஒரு தேக்க நிலை இருக்கிறது. அதையும் விரைவுபடுத்திக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.



1989 மார்ச் 30] [டாக்டர் சி. ரா. மாசிலாமணி]

திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிற ஒரு பகுதி. அங்கே விபத்துக்கள் அன்றாடம் நடப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. ஆனால் அங்கே விபத்துக்கள் நடந்தால் உடனடியாக அந்த விபத்துக்களைக் கண்காணிப்பதற்கோ அல்லது சிகிச்சை செய்வதற்கோ தேவையான ஒரு விபத்துப் பிரிவோ அல்லது qualified orthopaedic... எலும்பு முறிவு சம்பந்தமானதோ அங்கே இதுவரையில் திண்டிவனத்தில் இல்லை. எனவே அங்கேயிருக்கின்ற நிலைமையில் அவர்களைப் பக்கத்திலே இருக்கிற பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கோ அல்லது கடலூர் மருத்துவமனைக்கோ கொண்டு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிதியாண்டில் ஒரு விபத்துப் பிரிவை திண்டிவனம் மருத்துவ மனையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மறைந்த பெரியவர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் பெயரால் அமைந்த கலைக் கல்லூரிக்குச் செல்கின்ற சாலை மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. எனவே, அந்தச் சாலையைச் சீர்படுத்த பல முறை நாங்கள் நகராட்சிக்கு எடுத்துச் சொல்லியும், அந்த நகராட்சி எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ள வில்லை. எனவே, அந்தக் கல்லூரிக்குச் செல்கின்ற சாலையையும் உடனடியாகச் சீர்படுத்தி, மேலும் அந்தக் கல்லூரியில் ஒரு முதுகலை பட்டப் பிரிவுக்கும் வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கிடப்பிலே போடப்பட்ட நந்தன் கால்வாய்த் திட்டத்தையும் இந்த நிதியாண்டிலேயே எடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

திண்டிவனம் நகராட்சியிலேயும் மற்றும் ஒன்றியத்திலேயும் இருக்கின்ற எல்லாப் பள்ளிகளிலுமே கட்டிட வசதி இல்லாமல் இருக்கிறது. அவற்றையும் உடனடியாக சீர் செய்து கொடுக்க வேண்டும். மற்றும் என்னுடைய தொகுதியில் மயிலம் ஒன்றியத்தில் ஓமந்தூர், அன்னமுத்து என்ற கிராமங்களுக்கிடையிலே இருக்கின்ற ஒரு பாலம் நீண்ட நெடுங்காலமாகக் கட்டப்படாமல் இருக்கிறது. அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கும், அங்கே முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இருந்த அந்த ஊரில் ஒரு உயர்நிலைப் பள்ளியை இந்த ஆண்டிலே சேர்த்துக் கொள்வதற்கும் உத்தரவு இடும்படி கேட்டுக் கொண்டு, மேலும் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

*திரு வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1989–90 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க அழைத்த உங்களுக்கு என்னுடைய நன்றியினை முதலிலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே அருமை நண்பர் அன்பில் பொய்யாமொழி அவர்கள் பேசுகிறபொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். நான் பேசும் பொழுது, அதாவது அவர் பேசும்பொழுது எதிர்க் கட்சி நண்பர்களெல்லாம் இருந்து கேட்கின்றார்கள், அதற்கு நன்றி என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, அவருடைய அரசியல் திறமையையும் அவர்கள் இப்பொழுதே காண்பித்திருக்கிறார்கள். அவர்கள நான்கு நாட்களாக எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் இல்லாத அந்த நேரத்திலே பேசாமல் விட்டுவிட்டு இன்றைக்கு எல்லோரும் இருக்கின்ற நேரத்திலே அவர் பேச முன் வந்ததற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவர் இங்கே இருக்கிறாரா ? (சிரிப்பு).

(பிற்பகல் 12.50).

திரு. வி. கே.சின்னசாமி: அவர் இருந்திருக்க வேண்டும். இப்படி அவர் சொல்வார் என்றால் நிச்சயமாக இருந்திருக்கவேண்டும். ஆனால் பெரியார் மாவட்டத்திலிந்து வருகின்ற நான் இங்கே தெரிவித்துக் சொள்வது, பேரறிஞர்—பெருந்தகை அண்ணா அவர்களுடைய கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றையெல்லாம் ஏற்றுக் கொண்ட இந்த அரசு, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களுடைய இலட்சியங்களையெல்லாம் மேற்கொண்டிருக்கிற இந்த அரசு, 1929-லே செங்கையிலே நடைபெற்ற பெண்ணுரிமை மாநாட்டின் கருத்துக்களைக் கொண்ட நாங்கள் பெண்களுக்கெல்லாம் இவ்வளவு செய்திருக்கிறோம் என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். ஆனால் பெரியார் மாவட்டம், பகுத்தறிவுத் தந்தை பெரியார் மாவட்டத்திற்கென, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், பெரியார் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த நிதிநிலை அறிக்கையிலே நான் தேடித் தேடிப் பார்க்கிறேன் ; பெரியார் மாவட்டத்திற்கு எந்த ஒரு நிதியும் ஒதுக்கப்படவில்லை. கால் நடை வளர்ச்சிக்காக என்று பல சலுகைகளை இங்கே அறிவித்திருக்கிறீர்கள். அதிலே 15 கிலோ, 20 கிலோ எடை என்று இருக்கின்ற ஆடுகளை 40 கிலோ வரை வளர்ப்பதற்கு இங்கே நிறைய சலுகைகளை





அறிவித்திருக்கிறீர்கள். என்னுடைய மாவட்டம் ஆடு வளர்ப்பதற்குத் தகுந்த மாவட்டம். இறைச்சிக்கென வளர்க்கப்படும் ஆடுகள் மேய்வதற்கு காடுகள் நிறைய இருக்கின்றன. என்னுடைய மாவட்டம் வறட்சி மிகுந்த மாவட்டம். அந்த மாவட்டத்திற்கு பெண் அமைச்சர் ஒருவரும் இருக்கிறார். ஆகவே, ஆடு வளர்க்கின்ற திட்டத்தில் பெரியார் மாவட்டத்தையும் அவசியம் எடுத்துக் கொள்ள வேண்டும், சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல; ஐரோப்பிய பொருளாதார அமைப்பின் உதவியுடன் செங்கை, புதுக்கோட்டை, தென்னார்க்காடு, வடார்க்காடு போன்ற மாவட்டங்களில் 71 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி பெறுவதற்காகவும் மற்றும் சிதம்பரனார், மதுரை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் 230 ஏரிகளின் கீழுள்ள 60 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பயன் பெறுவதற்காகவும் ரூபாய் 53.12 கோடி செலவு செய்வதாக அறிவித்திருக்கிறீர்கள். எங்களுடைய மாவட்டம் ஒதுக்கப்பட்டுள்ளது, புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆக, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு கொஞ்சம் ஒதுக்கி வைத்துள்ளது என்று இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல ; கால்நடை தீவன மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து, ஒருங்கிணைந்த புதிய மேம்பாட்டுத் திட்டத்தை 4 கோடி ரூபாய் செலவில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, எங்களுடைய மாவட்டத்தையும் அதில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு . கேட்டுக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் வருகிற கால கட்டத்தில் நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து—கோவை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு மாவட்டம்தான் பெரியார் மாவட்டம்—நல்ல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் கோவை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஒரு பகுதிக்கு பெரியார் மாவட்டம் என்று பெயர் சூட்டி, மிகுந்த அளவிலே அவருடைய காலத்திலே அந்த மாவட்டம் வளர்ச்சியடைய தகுந்த ஏற்பாடுகளைச் செய்தார். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களின் காலத்தில் அது குன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், அது வளருவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்தவரையில், எத்தனையோ கடன்களை, பல்வேறு மாவட்டங்களுக்கு, குறுகிய காலக் கடன், நீண்ட காலக் கடன் போன்றவற்றை ரத்து செய்து, பல சலுகைகளை அறிவித்திருக்கிறீர்கள்; தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். நிச்சயமாக நடந்த வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கூட, பெரியார் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே கூட அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் அங்கே தீர்மானமாக அதை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள், அரசுக்கு. அதை மனதிலே கொண்டு சீர்படுத்த வேண்டும். பெரியார் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மீன் வளத்தைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். பவானி சாகரில் ஒரு கோடி ரூபாய் அளவில் மீன் குஞ்சு உற்பத்தி செய்கிற திட்டம் அமைக்கப்பட்டு, இரண்டாண்டுக் காலமாக அந்தத்திட்டம் நடைபெறாமலும் இன்னும் உற்பத்தியைத் துவங்காமலும் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதிலே பல புகார்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் மனதிலே கொண்டு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, இன-இட ஒதுக்கீடு குறித்து இங்கே அறிவித்திருக்கிறீர்கள். பிற்படுத்தப்பட்டோர்,—அதாவது, பி.சி கிட்டத்தட்ட 28, 29 சாதிகளை ஒன்றாக இணைத்து, அதில், 20 விழுக்காட்டை மோஸ்ட் பேக்வார்ட்—மிகவும் பிற்படுத்தப்பட்டோர்—என்ற அமைப்பிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், அரசாங்கத்திற்கு அதிகாரிகளால் கொடுக்கப்பட்ட கணக்கு— ஜனத்தொகைக் கணக்கு—தவறுதலாகத் தந்திருக்கிறார்கள் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். மோஸ்ட் பேக்வார்ட், மிகவும் பிற்படுத்தப்பட்டோர்—பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்ற அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆகவே, நீங்கள் தயவு செய்து, மீண்டும் அதை மறுபரிசீலனை செய்து, 30 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோருக்கு என்றும், 20 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு என்றும் அறிவித்திருப்பதை, சரி பாதியாகவாவது—அதாவது 25 விழுக்காடு பிற்படுத்தப்பட்டோருக்கு என்றும், 25 விழுக்காடு மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு என்றும் சம அளவில் கொண்டு வருவதற்கு தாங்கள் தகுந்த உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு



கொள்கிறேன். நாடு எதிர்பார்க்கிறது, குறிப்பாக, மோஸ்ட் பாக்வார்ட் கிளாசில் இருக்கிற அந்தச் சமுதாயங்கள் எதிர்பார்க்கின்றன என்பதைத் தெரிவித்து, நான் வேட்பாளனாக இருந்த காலத்தில் பாக்வார்ட் கிளாசாகத் தான் இருந்தேன், இப்பொழுது மோஸ்ட் பாக்வார்டாக நான் வந்திருக்கிறேன். நான் அந்தச் சமுதாயத்திலே சேர்ந்திருக்கிறேன். அதற்கு இந்தச் சர்க்காருக்கும் முதல் அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி பின்னோக்கிப் போனதற்கா, இல்லை, மிகவும் பிற்படுத்தப்பட்டவர் ஆனதற்கா?

திரு. வி. கே. சின்னசாமி: மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்த்ததற்காக. 25 விழுக்காடுகள் என்றால் அடுத்த கூட்டத்தில் இன்னும் கொஞ்சம் பாராட்டுவதற்கு உதவியாக இருக்கும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் வேட்டுவ கவுண்டர் இனத்தைச் சேர்ந்தவன். என்னுடைய தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், எனது சமுதாயத்தைச் சேர்ந்த எந்த அதிகாரியாக இருந்தாலும், ஆசிரியராக இருந்தாலும், மின் ஊழியராக இருந்தாலும், எந்த ஒரு அதிகாரியாக இருந்தாலும், பெரியார் மாவட்டம், புளியம்பட்டி, பவானி சாகர், சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் இருக்கவே விடமாட்டேன், மாற்றியே தீருவேன் என்று சொல்லி அங்கே சபதம் இட்டுக் கொண்டிருக்கிறார். நான் சொல்வது உண்மை. தலைவரே கூட விசாரித்துப் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருந்தாலும் அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி அவதூறு சொல்லாமல் இருக்கலாமே.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, சபையில் இல்லாதவர் என்பது மட்டும் இல்லை. சொல்லிக் கொண்டிருப்பது என்பது வேறு. அப்படி யாராவது வேட்டுவ கவுண்டர் இனத்தைச் சார்ந்தவர் இது வரையில் பழி வாங்கப்பட்டார்களா? அப்படியென்றால், ஏதாவது விவரம் மாண்புமிகு உறுப்பினரிடத்திலே இருக்கின்றதா?

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது, மாற்றி விடுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக, வானத்தை வில்லாக வளைப்பேன், மணலைக் கயிறாகத் திரிப்பேன் என்பதெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பது தான், நடக்காது.

திரு. வி. கே. சின்னசாமி: அவரைப் பற்றி இங்கே இருக்கிற நண்பர்களுக்கு நன்றாகத் தெரியும். நிச்சயமாக அப்படி வராமல் பார்த்துக் கொண்டால் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் முதல்வருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வி. கே. சின்னசாமி] [1989 மார்ச் 30

அடுத்து, பாசனத்தைப் பொறுத்த மட்டில், நான் தெரிவித்துக்கொள்வது, இங்கே மாண்புமிகு ஜனதா கட்சி உறுப்பினர் மதிப்பிற்குரிய திரு. குருமூர்த்தி அவர்கள் பேசினார்கள். கீழ் பவானி பாசனத்தைப் பொறுத்த மட்டில் மிகவும் பயந்து கொண்டிருக்கிறோம். நானும் விவசாயத்தை நம்பியிருக்கிறவன் தான். இரண்டு வருஷத்தில் ஒரு தடவை கூட தண்ணீர் வரவில்லை. இப்பொழுது 20 மடங்கு என்று வரி வேறு விதித்திருக்கிறார்கள். கீழ் பவானி அணைக்குத் தண்ணீர் வருவதற்காக, மதிப்பிற்குரிய, பெருமதிப்பிற்குரிய பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் நீலகிரி மாவட்டத்தின் முதுமலை ஏரியில் இருந்து கிட்டத்தட்ட 7 டி. எம். சி.யிலிருந்து 10 டி எம் சி வரை மோயாற்றில் இருந்து வருகின்ற தண்ணீரை பவானி சாகருக்கு விடுகின்ற வாய்ப்பு உள்ளது என்று ஏற்கனவே ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டதாகச் சொன்னார்கள். ஆகவே, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, கபினி அணையில் இருந்து தண்ணீர் வீணாகப் போவதை நான் பார்த்திருக்கிறேன் அந்த வீணாகப் போகும் தண்ணீரை, 7 டி. எம். சி. யிலிருந்து 10 டி. எம். சி. வரை மோயாற்று வழியாகத் தடுத்து, கீழ் பவானிக்கு விடுவதற்கு வழிவகை செய்தோமானால் நிச்சயமாக கீழ் பவானி அணையிலேயே வருஷத்திற்கு ஒரு போகமாவது நிரந்தரமாகப் பாசன வசதி பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறோம். ஏற்கனவே இந்த அவையிலே நான் பேசி, மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்கள் அது குறித்து உடனடியாக ஆய்வு செய்து அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்வதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை அதற்குள் ஆட்சி டிஸ்மிஸ் ஆகிவிட்டது. ஆகவே, அதை நிச்சயமாக ஆய்வு செய்ய வேண்டும். அடுத்த சட்டமன்றக் கூட்டத்திற்குள்ளே அதை ஆய்வு செய்ய வேண்டும். பொதுப் பணித்துறை அமைச்சர் என்ன, என்ன செயலிலோ சுறுசுறுப்பாக இருப்பவர், இதிலே கொஞ்சம் சுறுசுறுப்பாக செயல்பட வேண்மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரமும் வேளாண்மைத் துறையும் இணைந்து செயல்பட வேண்டும். மின்சாரத்தைப் பொறுத்த மட்டில் இப்பொழுது 3 மணி நேரம், 4 மணி நேரம் கூட மின்சாரம் வருவதில்லை. ரொம்பச் சிரமப்படுகிறேன், 4 நாள், 2 நாள் பொறுத்துக் கூட வருவதில்லை. நானே நேரடியாக விவசாயம் செய்வதால் இதை நேரில் அறிந்தவன். ஆகவே, தயவு செய்து, பகலிலே 6 மணி நேரம் மின்சாரம் விட வேண்டும். இரவிலே தண்ணீர் விடுவதாலே குறைபாடு இருக்கிறது. இரவிலே தண்ணீர் விடுவதால் வீணாகிவிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப் பகலிலே விட்டால் பக்குவமாக விவசாயத்திற்குப் பயன்படுத்த வாய்ப்பிருக்கும். ஆகவே, பகலிலே 6 மணி நேரம் மின்சாரம் விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 30]

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் சில மணித்துளிகள் நீட்டிக்கப் பெறுகிறது.

திரு. வி. கே. சின்னசாமி: இரவில் ஆறு மணி நேரம் என்பதை பகலில் ஆறு மணி நேரம் என்று மாற்றி உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்த வரையில் விவசாயிகளுக்கு பெரிய சிரமங்கள் இருக்கின்றன. ஒரு விவசாயி வேறு இடத்தில் பூமி வாங்கி தனக்கு இருக்கிற இணைப்பை மாற்ற வேண்டுமென்றால் முடியவில்லை. ஒரு இடத்தில் கிணற்றில் தண்ணீர் இல்லாமல் வறண்டு விடுகிறது. ஆகவே வேறொரு இடத்தில் நிலம் வாங்கி, ஆழ் குழாய் கிணறு போட்டு விவசாயம் செய்ய வேண்டுமென்றால் அந்த மின் இணைப்பை அவர் மாற்ற முடியாது. ''ஷிப்ட்'' செய்ய முடியாது. காரணம் ஒரு மின் இணைப்பை ஒரு பஞ்சாயத்திற்குள்தான் மாற்ற வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, ஒரு விவசாயி தன்னுடைய மாவட்டத்தில் எங்கே கிணறு இருந்தாலும் அங்கே இணைப்பை ''ஷிப்ட்'' செய்து கொள்கிற முறையில் ஏற்பாடுகளை இந்த அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ''near service'' என்று ஒன்றை கொடுத்தார்கள் அதாவது செலவே இல்லாமல் ஒரு கம்பத்திலிருந்து சர்வீஸ் கொடுப்பது என்ற முறையை நிறுத்தி இருக்கிறார்கள். அதையும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியார் மாவட்டத்தில் லட்சக்கணக்கான மின் இணைப்புகள் தேக்கமாக இருக்கின்றன. மற்ற மாவட்டங்களில் 1986, 1987, 1988 வரையில் கூட கொடுத்திருக்கிறார்கள். பெரியார் மாவட்டத்தில் 1981, 1982-க்கு கூட முடிக்காமல் இருக்கிறது. இது விவசாயத்தை நம்பியிருக்கிற மாவட்டம். ஆகவே, இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மின் இணைப்பிற்கான செலவு முழுவதையும் விவசாயிகள் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அரசுக்கு செலவே இல்லாமல் இருக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை தயவு செய்து அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 10 விவசாயிகள் சேர்ந்து சுமார் 10 லட்சம் ரூபாயில் ஒரு ட்ரான்ஸ்பார்மரைப் போட செலவு செய்வதாக இருந்தால், அந்தச் செலவை விவசாயிகள் ஏற்றுக் கொள்வதாக இருந்தால், அரசாங்கம் முன் வந்து, மின்வாரியம் முன் வந்து விவசாயிகளுக்கு இணைப்பு கொடுத்தால் அந்த அப்ளிகேஷன்கள் எல்லாம் குறைந்துவிடும். அந்த விவசாயிகளுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கீழ்பவானி வாய்க்காலில் ஒரு பெரிய பிரச்சினை இருக்கிறது. அந்த வாய்க்காலில் சிறிய பாலங்களை ஆரம்ப காலத்தில் அதாவது 1947, 1950 ஆம் ஆண்டில் கட்டி இருக்கிறார்கள். அப்போது நான் பிறக்கவே இல்லை அப்போது இப்படி சிறிய பாலங்களாகக் கட்டியிருக்கிறார்கள். சைகிள் போகிற அளவிற்கு நடைபாதை பாலமாக அவற்றைக் கட்டி இருக்கிறார்கள். இன்றைக்கு ஜனத்தொகை அதிகமாகி இருக்கிறது. அந்தப் பாலங்கள் வழியாக பஸ்ஸோ, லாரியோ, காரோ போக முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தில் நிறைய பணத்தை சேர்த்து. (மணியடிக்கப் பெற்றது) தலைவர் அவர்களே, மூன்று நாட்களாகப் பேசவில்லை ............... (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போதைக்கப்போது பேசியிருந்தால் சரியாக இருந்திருக்கும்.

திரு. வி. கே. சின்னசாமி : கீழ்பவானி வாய்க்காலில் எங்கள் பகுதியில் குறிப்பாக கோபி தாலுக்காவில் மோளம் பா ளயம் என்னும் இடத்தில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியைக் கடந்து வரும் வழியில் ஒரு நடைபாதை பாலம் உண்டு. அதில் கார் கூடப்போக முடியவில்லை. அதிகாரிகள் வந்தால் கூட அவர்கள் இறங்கி நடந்து செல்கிற சூழ்நிலைதான் இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து அந்தப் பாலத்தை பெரிய பாலமாக மாற்றுவதற்கு ஆர். எல். இ. ஜி. பி. திட்டத்தில் நிதி ஒதுக்கீட்டை செய்து அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மேல்நிலைப் பள்ளிகளில் ' டீச்சர் '-களை அதிகரித்து இருக்கிறீர்கள். உயர்நிலைப் பள்ளிகள் நிறைய இடங்களில் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படாமல் இருக்கின்றன. அதனால் நிறைய பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு சிறிய கருத்து. பவானிசாகரில் கடந்த மாதம் வேளாண்மைத் துறையில் உழவர் திருநாள் நடைபெற்றது. விவசாயிகளுக்கு நிறைய சலுகைகள் நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். நாங்கள் அதனை பாராட்டுகிறோம். அந்த விழாவில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொள்ளுகிறார்கள். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக நான் இருக்கிறேன். கடந்த மூன்று தடவைகளில் அந்தத் தொகுதியில் நான் வெற்றி பெற்றிருக்கிறேன். என்னுடைய பெயர் அந்த அழைப்பிதழில் இருக்குமென்று தேடித்தேடிப் பார்த்தேன். என்னுடைய பெயர் அதில் இல்லை. முதலில் ஒரு அமைச்சர் வருவதாக ஒரு





அழைப்பிதழ் அடித்தார்கள். பிறகு இரண்டு அமைச்சர்கள் வருவதாக இன்னொரு அழைப்பிதழ் அடித்தார்கள். அந்த இரண்டு அழைப்பிதழ்களிலும் என்னுடைய பெயர் இல்லை. பக்கத்து தொகுதியில் இருக்கிற உறுப்பினர் சுப்பிரமணியன் அவர்கள், இப்போது அடிபட்டு இருக்கிறவர், அவருடைய பெயரும் இல்லை. அவர் உங்கள் கட்சியைத் சார்ந்தவர். நாங்கள் இரண்டு பேரும் பேசிக்கொண்டோம், ''மாப்பிள்ளை உன் பெயரும் இல்லை. என் பெயரும் இல்லை, என்னய்யா பண்ணுவது ?'' இது கொஞ்சம் மானப் பிரச்சினையாக இருக்கிறது, எப்படி ஐயா விழாவிற்கு வருவது என்று கண்டுகொள்ளாமல் இருந்தேன். இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினருடைய பெயர் இல்லாமல் இருப்பது, அதுவும் அமைச்சர்கள் கலந்து கொள்கிறபோது—நாங்கள் அங்கே வந்து ஒன்றும் எதிர்த்துப் பேசமாட்டோம். தொகுதிப் பிரச்சினையைத்தான் பேசிக்கொண்டிருப்போம். இப்படி இருப்பதால் சட்டமன்ற உறுப்பினருடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் அவர்களே, உங்களை நம்பித்தான் வந்திருக்கிறோம். ஆகவே எங்கள் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கருத்தை முழுமையாக ஏற்று இந்த அரசு வாய்ப்பளிக்க வேண்டுமென்று நான் பரிந்துரைக்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களுக்கு நன்றி. இது நடைமுறையில் எப்படி வருகின்றது என்று பார்க்கவேண்டும்.

அடுத்து இங்கே ஆதிதிராவிடர்களுக்காக 45 ஆயிரம் வீடுகளைக் கட்ட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆதிதிராவிடர்களுக்காக 35 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்ற திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது என்பதைப் பற்றி எங்களுக்குத் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி ஒன்றாகிவிட்ட காரணத்தால் பழைய நினைவுகளை மறந்துவிட்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். 35 இலட்சம் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கு என்று அப்போது கூட அறிவிக்கப்படவில்லை. 30 இலட்சம் வீடுகள் என்று மொத்தமாக அறிவிக்கப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு 30 இலட்சம் வீடுகள் தேவையில்லை. ஆகவே, மேலும் அந்த 30 இலட்சம் வீடுகள் என்பது, அறிவிக்கப்பட்ட திட்டமே தவிர, நிறைவேற்றப்பட்ட திட்டமல்ல. நிறைவேற்றுவதற்காக ஏற்றுக்கொண்டு செயல்படுத்தத் தொடங்கிய திட்டமாக, இந்த 3, 4 ஆண்டுக் காலத்தில் அதற்காக எந்தவிதமான தகுந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. வி. கே. சின்னசாமி : நிச்சயமாக அவர்கள் இருந்திருந்தால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றியே இருந்திருப்பார் என்று நான் இந்தச் சட்டமன்றத்திலே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அதிலே முதல் ஆண்டு 2 இலட்சம் வீடுகள் என்றும், அடுத்த ஆண்டு 2 இலட்சம் வீடுகள் என்றும் சொல்லி, இப்படி திட்டம் தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நிறைவேற்ற வேண்டும் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் என்று தினமணி போன்ற நாளேடுகளில், மிகப் பெரிய விளம்பரம் வந்தது. 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள், 2 ஆண்டுகளில் 20 இலட்சம் வீடுகள் என்று சொன்ன திட்டத்திற்கும், நடைபெற்ற காரியத்திற்கும் சம்பந்தமே இல்லை என்பதைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

திரு. எஸ். திருநாவுக்கரசு : நாங்கள் சொல்வது, அந்த முயற்சி தொடங்கப்பட்டது. அதை நீங்கள் தொடர்ந்து நிறைவேற்றுங்கள் என்றுதான் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : அப்போதே இந்தத் திட்டம் நிறைவேற்ற முடியாத திட்டம் என்பது மட்டுமல்ல இப்போது மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு சொன்னதைப் போல 2 இலட்சம் வீடுகளும் நிறைவேற்றப்படவில்லை. புள்ளி விவரங்கள் திட்டவட்டமாக, மாறாக இருக்கின்றன.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, அன்றைய தினம் இந்த அறிவிப்பு வந்தபோது, ஏதோ அதிர்ஷ்டவசமாக நானும் இந்த அவையிலே இருந்தேன். ஆண்டுக்கு 10 இலட்சம், 3 ஆண்டுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டப்படும் என்று அறிவிக்கப் பட்டது. 3 ஆண்டுக்காலம் முடிந்துபோய் விட்டது. அந்த 30 இலட்சம் வீடுகளும் தமிழகத்திலே காணவில்லை. எனவே, இப்போது முடிந்துபோன அந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது தேவைதானா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் வேண்டாம் என்று உறுப்பினர் சொல்கிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. கோ. வீரையன் : அனைத்து ஏழைகளுக்கும் வீடுகள் வேண்டும் என்பதில் நான் அக்கறை உள்ளவன். அதற்காக வாதாடுபவன். அந்த வீடுகள் கட்டப்பட வேண்டுமென்பதிலே எனக்கு அக்கறை உண்டு. ஆனால் அந்தத் திட்டம் பயனற்ற அல்லது நடைமுறைக்கு வராத திட்டத்தைப் பற்றி பேசிக்



கொண்டிருப்பதில் பயனில்லை என்பதைத்தான் நான் சொல்கிறேனே தவிர, ஏழைகளுக்கு வீடுகள் வேண்டாம் என்று நான் கூறவில்லை. அனைவருக்கும் அரசு இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை, என்னுடைய கொள்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திட்டம் தொடரும் : பேரவை இத்துடன் முடியும். வணக்கம்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (31–3–1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-08 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

24. 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 6–11–1987-ஆம் நாளிட்ட 1672-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1955) 61 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

25. 1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 12–11–1987-ஆம் நாளிட்ட 1713-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1961-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயம் செய்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

26. உள்துறையின் 12–4–1985-ஆம் நாளிட்ட II (2/HO/2334/85-ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 14–12–1988-ஆம் நாளிட்ட 2677-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

27. 1974-ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போ. 1) துறையின் 14-12-1988-ஆம் நாளிட்ட 2678-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

28. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் 1985-86-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-இம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

29. அயல் நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் 1986-87-ம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ.—அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

600 008
144356
D